# பாஷையூரும் நாட்டுக்கூத்தும்



மு.சிங்கராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசையூரும்
# நாட்டுக்கூத்தும்

மு. சிங்கராயர்

வெளியீடு:
பாசையூர் அபிவிருத்திக் குழு
பிரான்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூரும் நாட்டுக்கூத்தும்

மு. சிங்கராயர்

வெளியீடு:
பாஷையூர் அபிவிருத்திக் குழு,
பிரான்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூரும் நாட்டுக்கூத்தும்
(வரலாற்றுப் பார்வை)

மு. சிங்கராயர்


| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | கார்த்திகை 2009 |
| விலை | : | ரூபா 200 |
| நூலின் தரவுகள் | : | டெமி 4/5 |
| | : | பக்கங்கள் 158 |
| | : | 12 புள்ளி எழுத்துக்கள் |
| முகப்போவியம் | : | ரமணி |
| அட்டைவடிவமைப்பு | : | குரு பதிப்பகம்,<br>திருநெல்வேலி. |
| வெளியீடு | : | பாலையூர் அபிவிருத்திக்குழு,<br>பிரான்ஸ். |
| அச்சுப்பதிவு | : | புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,<br>யாழ்ப்பாணம். |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குண்டு துப்பிய நெருப்பாலும்
கொட்டிய பேய்மழையாலும்
குதறியெடுத்த நோயாலும்
குடலைச்சுருட்டிய பசியாலும்
வன்னி மண்ணிலே செத்துமடிந்து தம்
வாழ்வை முடித்துக் கொண்ட
தமிழ் உறவுகளுக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்கள்
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



எங்களின் சமூகவரலாறும், கலைவரலாறும இன்னமும் எழுதா மறையாக வேயுள்ளன. இவற்றினை வரன்முறையாக எழுதுதற்கான வாழ்வும், தரவுகளும் எங்கள் கிராமங்களுக் குள் பொதிந்துள்ளன. இத்தகைய சூழமைவில் எங்கள் பாரம்பரிய கிராமங்களில் ஒன்றான பாஷையூரின் நாட்டுக்கூத்து வரலாற்றினை - கலைஞர்களின் வாழ்வினை எழுதும் திரு.மு.சிங்கராயர் அவர்களின் "பாஷையூரும் நாட்டுக்கூத்தும்" எனும் நூலின் வரவு பெருமகிழ்ச்சி தருகின்றது.

அழகிய கவிதை மொழியில், பாஷையூரின் நாட்டுக்கூத்துக்கலை வரலாறு பேசப்படுகின்றது. பாஷையூரின் ஆத்மாவாக திரு. சிங்கராயர் ஆசிரியரின் அனுபவ தரிசனம் கிடைக்கின்றது.

திரு. சிங்கராயர் அவர்களின் கலைமனம்- கவிதையான அவரின் வாழ்வு அவர் விவரணத்திடை துலங்குகின்றது. அவரது பண்பாட்டு உணர்வும், பாரம்பரிய அடையாளங்களை மீட்கும், காக்கும் துடிப்பும் நூல் முழுமையும் நிறைந்துள்ளன.

உடலை வருத்தும் நோயை- முதுமையை வென்று தமிழின் உயிர்ப்பாய், கலை இலக்கிய ஆன்மீக பணிக்காய் தன்னை அர்ப்பணித்துள்ள திரு. சிங்கராயர் ஆசிரியர் அவர்களின் கலைப் பணியைப் போற்றுவோம். சமூகப் பயனான பல ஆக்கங்களை மேன்மேலும் அவர் தமிழுக்காக்க எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

நா. சண்முகலிங்கன்

துணைவேந்தர் அலுவலகம்,
திருநெல்வேலி.
19.11.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகனோடு பேசுகிறேன்!

இதை ஏன் எழுதினேன்?

இந்த முயற்சி எனக்குள்ளே கருவான நாள் தொட்டு என் சிந்தனையை நெருடிக்கொண்டிருக்கும் கேள்வி இது! மண்பற்று இல்லாதவர்கள் உலகில் ஒரு சிலரே. சரித்திர நகர்வுகளின் பின்புலத்தில் சிந்திக்கும்போது இந்த அதிர்வுகள் உணரப்படுகின்றன.

நான் பிறந்த மண்ணாம் பாஷையூரில் வாழ்ந்த புலவர்கள், புத்தியிலே கருவுயிர்க்கும் பொன்போன்ற கூத்துப்பாடல்களைத் தந்தவர்கள். மாப்போலப் பிசைந்தெடுத்த தமிழால் மறக்க முடியாத பாடல்களைக் கூத்திலே வடித்து வைத்தவர்கள். அன்று ஈழத்தின் கூத்துத் தொட்டிலெனப் புகழ் படைத்த பாஷையூர், இன்று புகைபடிந்த ஓவியமாகப் போய்விட்ட நிலைகண்டு எதிர்காலமே சூனியமாகிவிட்டதாக எண்ணாத என் சிந்தனையின் விரிசலிலே கருக்கொண்டு வெளிவந்ததுதான் இந்நூல்.

அரிய கூத்துக்கலையை வளர்த்தெடுக்கப் பெரிய முயற்சிகளைச் செய்த அன்றைய நாளிலும், அச்சத்திலும், ஆழ்ந்த கவலையிலும் அலைந்து திரிந்த இன்றைய நாளிலும் சலியாத உழைப்போடும், தளராத நம்பிக்கையோடும் கூத்தைப் பேணி வளர்த்தவர்கள் பாஷையூர் மக்களென்றால் அது புகழ்ச்சியல்ல. கிடப்பிலே போட்டுவிட்டு இப்பெருமைகளை அடக்கி வாசிக்க என்னால் முடியவில்லை.

நினைக்க வைக்கும் பாஷையூர் கூத்தாளிகளின் பாடல்களைக் கேட்கும் போதெல்லாம் அவை எங்கள் விழிகளை நனைக்க வைக்கின்றன. துயரச் சுவைகளைக் காட்டிச் சுவைஞரிடம் இன்ப உணர்வைக் கொளுத்திவைக்கும் அதிசயத்தைக் கூத்திலே தான் காணமுடியும்.

எந்தத் துறையிலும் வளர்ச்சி காண்பதற்கு உந்துசக்தி இருந்தேயாக வேண்டும். இவ்வேளையில் என் நினைவுகள் எல்லாம் ஐந்து தசாப்தங்களுக்கு முன்னே பாய்ந்து செல்லுகின்றன. 1955ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 15ஆம் நாள்! அன்று தான் அமரர் அ. பிலிப்பையா (ஆசிரியர்) எனது துணையுடன் பாஷையூர் மாணவர் ஐக்கிய மன்றத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவினார். சவால் களுக்கு முகங்கொடுக்க நேரிட்டபோதும், அது சரிந்து விழாத ஓர் ஆலமரமாக நீண்ட காலம் மாணவர்களுக்கு நிழல் கொடுத்து நின்றது. பிரகாசமான வாய்ப்புக்களைப் பெற்று மன்ற உறுப்பினர்கள் உலகளாவிய நிலையில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுள்ளே தே.பீற்றர், ப. யேக்கப என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்பணியை நான் நிறைவேற்ற ஒத்தாசை புரிந்தவர்களில் அமரர்களான எனது அன்னை முடியப்பு ஆரோக்கியம், மூத்த கலைஞர் மு. அலெக்சாண்டர், அண்ணாவியார் சி. அந்தோனி என்போர் நினைவு கூரத்தக்கவர்கள்.

“எழுத்தால் வாழ்பவர் பலர்; அதனால் நினைவு கூரப்படுபவர்கள் சிலரே!” என்று மறைந்த நண்பனும், நல்ல வாசகனுமாகிய த. சாமுவல் சொன்னது என் செவிகளில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. ஒரு கண்ணில் நெய்யும் மறுகண்ணில் சுண்ணாம்பையும் ஏந்தி, வெறுமனே பரப்புரை செய்பவர்களைப் போலல்லாமல் இதய சுத்தியுடன் இப்பணியைச் செய்துள்ளேன். ஊசித் துளையில் நூலைக் கோர்க்கும் முனைப்போடு களத்தில் இறங்கிய என் ஓட்டப்பந்தயத்தில் நீங்கள் தான் நடுவர். நமது முன்னோர் நெறித்துள்ள பாதையில் சென்று கூத்தைப் பேணுவோம். தொட்டுச் சென்ற குறிப்புக்களில் நான் விட்டுச்சென்ற இடைவெளிகளை நமது இளவல்கள் நிறைவாக்கட்டும்!

பாஷையூர் அபிவிருத்திக்குழு பிரான்சிலிருந்து ஆற்றிவரும் தொண்டுகளுக்கு வெறுமனே நன்றி சொன்னால் என் நெஞ்சு கனக்கின்றது.

அணிந்துரை தந்த பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்களுக்கும், குறிப்புரை தந்த அருட்கலாநிதி ஞா. பிலேந்திரன் அவர்களுக்கும் என் நன்றி.

நண்பர் ரமணிக்கும், நூலை அச்சேற்றிய புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தினருக்கும், வாசகப் பெருமகனாகிய உனக்கும் என் நன்றி.

*மு. சிங்கராயர்*

**955/9, கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**20.11.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே........!


| | | |
|---|---|---|
| 01. | பாஷையூர் கூத்தின் தோற்றம் | |
| 02. | கோவிற்திருவிழாவும் கூத்தும் | 4 |
| 03. | சலித்தெடுத்த முத்துக்கள் | 7 |
| 04. | பாஷையூர் தந்த பெரும் புலவர்கள் | 16 |
| 05. | கூத்துக்களை ஆடும் மேடைக்கோலங்கள் | 28 |
| 06. | அண்ணாவிமார்களும் அரங்குகளும் | 32 |
| 07. | ஊர்களைக் கவர்ந்திழுக்கும் கூத்து | 40 |
| 08. | பங்களிப்பும் பணக்கூத்தும் | 42 |
| 09. | ஆட்டக்கூத்து | 45 |
| 10. | மிருதங்கம். தபேலா. வீணை. தாளம் | 51 |
| 11. | ஒலி. ஒளி அமைப்புக்கள் | 55 |
| 12. | கூத்தும் ஒப்பனையும் | 57 |
| 13. | பக்கப்பாட்டு | 61 |
| 14. | 1920க்குப் பின் கூத்து | 62 |
| 15. | 1945க்குப் பின்னர் பாஷையூர் அரங்கின் கூத்தாளிகள் | 94 |
| 16. | நாட்டுக் கூத்தில் இளைய தலைமுறை | 122 |
| 17. | பாஷையூர் கூத்தின் எதிர்காலச் செல்நெறி | 142 |
| 18. | நிறைவுரை | 146 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதமலர் தருவாயப்பா!

பாதமலர் நிழல்தந்து பரிவு காட்டிப்
பூமியிலே மனிதகுலப் பாவங் கழுவ
வேதமலர் விரித்துவைத்த தந்தை சொன்ன
வார்த்தையிலே மனுவுருவாய்த் தூய்மை குன்றாச்
சீதமலர்க் காலிணையில் நிலவு கொஞ்சச்
சுமந்தமரி அன்னைதந்த யேசு ஞானப்
போதமலர் எனக்கருளப் பொழுதும் மறவாப்
பூந்தாளை என்தமிழால் வாழ்த்தி நின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிமழை பொழியுமையா!

ஏழுகொடை அளிப்பவனே! அன்பே! தூய
ஆவியான அருள்வடிவே! உண்மை தொலைத்து
வாழுமீனப் பிறவிக்கு வழியும் ஆகி
வையகத்தில் மூச்சடங்கிக் கயவன் நானும்
வீழுகின்ற நாள்வரைக்கும் துணையாய் நின்று
வாழ்வினிலே நலங்காண வைக்க என்னைச்
சூழுகின்ற துன்பவிருள் விலகக் கருணைச்
சோதிமழை பொழியுமையா! போற்றி செய்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூந்தமிழே! அம்மா!

சாந்தின் நறுமணம்போல் சங்கக் கவிகண்ட
பூந்தமிழே! அம்மா! பணிந்துமடி - ஏந்துகின்றேன்
பொன்னடிச் சீர்வாழ்த்திப் பாடவரந் தந்தென்னை
உன்னடியில் வைப்பாய் இனிது

## என்ன சொல்லி அஞ்சலிப்பேன்!

மூத்தோடிக் கிளையெறிந்த நாட்டுக் கூத்து
        மதாளித்து வளர்ந்துகலை விருட்சம் போலப்
பூத்தோடி மணம்வீசிப் புகழைக் காணப்
        பொழுதினையே உழைப்பாக்கித் தந்த முன்னோர்
கூத்தாடிப் பொன்மனத்தால் கூத்தை இன்றும்
        குவலயத்தில் செம்மாந்து வாழ வைத்தார்
ஆத்தாடி ஏழைமகன் என்ன சொல்லி
        அஞ்சலிப்பேன் அவரடியை அறியேன் அம்மா!

## பெற்ற கடன் தீர்க்க.........!

அப்பன் முடியப்பு அன்னையாம் ஆரோக்கியம்
இப்புவிக்கு என்னை அளித்ததனால் - ஒப்பரிய
தாய்த்தமிழே! உன்பெருமை தான்பாட வைத்தவரை
வாய்க்கினிய சொல்லெடுத்து வாழ்த்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. பாஷையூர் கூத்தின் தோற்றம்

ஓங்கிவளர்ந்த தென்னைகள் தென்றலை வாங்கிச் சலசலக்க, ஓடிவரும் கடலலைகள் கோடிமுறை முத்தமிட்டுத் தழுவும் திருவூர் பாஷையூர். தலைநிமிர்ந்த செருக்கோடும், தமிழ்வளர்த்த தினவோடும் புகழின் உச்சியிலே ஏறிநின்ற மண்.

யாழ்நகரின் தென்கிழக்குத் திசையிலே அமைந்துள்ள பாஷையூர் தெற்கே கடலையும், வடக்கே ஈச்சமோட்டையையும், கிழக்கே கொழும்புத்துறையையும், மேற்கே கொய்யாத் தோட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகப் பகுதியில் அமைந்துள்ள பாஷையூர் கடல்வளமும், கலைவளமும், கணக்கிட முடியாத செல்வவளமும் கொழித்து வளர்ந்த பூமி.

இயலையும், இசையையும் பின்னிக்கிடக்க வைத்து கன்னித்தமிழால் விழுமிய கருத்துக்களையும், விரிவான சிந்தனைகளையும் ஆற்றுகை மூலம் புலப்படுத்துகின்ற அழகிய கலையே நாட்டுக் கூத்து. இயற்கையான உணர்வூற்றையும், உன்னதமான செயற்பாடுகளையும் உள்வாங்கிக் கொண்டு வெளிப்படுத்தி வாழுங்கலையே இந்நாட்டுக்கூத்து. இருள் கவ்விப்பிடித்த சமுதாய வானத்திலே அருளொளி வீச வந்த அமுத நிலவு அது. இதனை ஈழத்தமிழர்களின் தேசிய கலைவடிவம் என்று கூடச் சொல்வார்கள். இக்கூத்து பாஷையூரில் விரைவாகக் காலூன்றியதில் வியப்பொன்றும் இல்லை.

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த வஸ்கொடகாமா 1498 ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள கள்ளிக்கோட்டையில் வந்திறங்கியதைத தொடர்ந்து வாசனைத்திரவிய வேட்டையும், கத்தோலிக்க மதப்பரப்புகையும் இடம் பெற்றன. மதப்பிரசாரத்திற்கு ஏற்ற ஊடகமாக கூத்துக்கள் தமிழ்நாட்டில் முளைவிட்டன. கூத்துக்களில் வேடமிட்டுக் குருக்களே நடித்தனர். 1541ஆம் ஆண்டு கோவாவிலும், 1573 ஆம் ஆண்டு கொச்சியிலும் கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1621ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரது ஆட்சியின் கீழ்வந்தது. இப்படியே தமிழ்நாட்டிலிருந்து கூத்துக்கள் இலங்கையின் வடபகுதிக்கு அறிமுகமாகின 1687ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த வண. யோசவ்வாஸ்அடிகளால் அடியிடப்பட்ட தமிழ்க்கூத்துக்கள், 1705 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த வண.யக்கோமே கொன்சால்வெஸ் அடிகளால் வீறு கொண்ட வளர்ச்சியைக் கண்டதெனத் துணிந்து கூறலாம். காலம் சுழன்று வந்தபோது ஈழத்தமிழ் மக்களிடையே காத்தான் கூத்து, வசந்தன்கூத்து, பறைமேளக்கூத்து, வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து என்பன செல்வாக்குச் செலுத்தி வளர்ச்சி கண்டிருந்தன.

யாழ்ப்பாண நல்லூரில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் குடியமர்ந்தனர். போர்த்துக்கேயரின் யாழ்ப்பாண வருகையினால் குடாநாட்டின் கரையோரப்பகுதிகளில் கத்தோலிக்க மதம் விழுதுவிட்டுப் படர ஆரம்பித்தது. இடம்பெயர்ந்து குடியேறிய 42 குடும்பங்களும் கத்தோலிக்க மதத்தைத் தழுவின. தாங்கள் ஒன்றாகக் கூடிச் சமய வழிபாட்டு ஆராதனைகள் செய்வதற்காக ஊரின் மத்தியிலே ஓலையால் வேயப்பட்ட ஒரு சிறிய கொட்டிலை உருவாக்கினர்.


அக்குடிசையிலே புனித அந்தோனியார் சொரூபத்தைப் பிரதிஷ்டைசெய்து ஆராதனைக்குரிய கோயிலாக்கினர். காலை வேளைகளில் கோயிலில் கூடிச்செபிப்பதில் இன்பங்கண்ட மக்கள் தமது ஓய்வு நேரங்களில் தாலாட்டுப்பாட்டு, ஊஞ்சல்பாட்டு, கப்பல்பாட்டு, வழிநடைப் பாட்டு, கோயிற்பாட்டு என்ற நாட்டார் பாடல்களைப் பாடிவந்தனர்.

கடலை அண்மித்து வாழ்ந்தபடியால் தமது சீவனோபாயத்திற்காக இவர்கள் மீன்பிடித் தொழிலையே செய்துவந்தனர். போர்த்துக்கேயரின் வருகையினால் யாழ்ப்பாணத்திலுள்ள கரையோரப் பகுதியிலமைந்த கோயில் வளாகங்களை ஒட்டினாற்போல் கல்வித்தேவையை முன்னிட்டுப் பாடசாலைகள் தோற்றம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையூருக்குத் தென்கிழக்குப் பகுதியிலே நிறுவப்பட்ட, புனித சூசையப்பர் கோயிலின் அருகே ஒரு சாதனா பாடசாலையும் அமைந்திருந்தது. இப் பாடசாலை அச்சுற்றாடலிலுள்ள கல்வித் தேவையைப்பூர்த்தி செய்தது என்று கூறலாம். இப்பாடசாலையினால் பாஷையூர் பிள்ளைகளின் கல்வியும் வளர்ச்சியடைந்தது.

பாஷையூர் ஆனித்திங்களில் விழாக்கோலம் கொள்ளும். ஆனித்திங்கள் முதலாம் திகதி தொடக்கம் பதின்மூன்றாம் திகதிவரையும் புனித அந்தோனியார் திருவிழாவுக்கான நிகழ்வுகள் அங்கு களைகட்டியிருக்கும். முதல் நாள் கொடியேற்றத்தோடு ஆரம்பமாகும் விழாக்கள் பதின்மூன்றாம் நாள் காலையில் கூடு சுற்றுவதோடு நிறைவடையும். இந்நாளின் மாலைப் பொழுதில் மக்களின் மனதிலே ஏற்படும் வெறுமையான இடைவெளிகள் எதிர்பார்ப்போடு கூடிய அளிக்கைகளுக்கு வாசலைத் திறந்து விட்ட தெனலாம். இந்த அளிக்கைகள் எல்லாம் கூத்தின் தொடர்ச்சியையும், வளர்ச்சியையும் தொட்டுநிற்கின்றன. கூத்துத் துறையில் தாடனம் கொண்டவர்களுக்கு இந்த உண்மை தெற்றெனப் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. கோயிற் திருவிழாவும் கூத்தும்

ஆனித்திங்கள் 13ஆம் நாள்!
இந்நாள் பாஷையூர் மக்கள் குழுமத்தின் மகிழ்ச்சிக்குரிய பொன்னாள். அங்குள்ளவர்களின் முகங்களிலே ஆனந்தம் அலைபாயும். சிறுவர்களைப் போல் முதியவர்களும் தம்மை மறந்து களித்திருப்பர். அயலூர்களிலிருந்து வந்து கூடுபவர்களால் பாஷையூரில் மக்கள் வெள்ளம் நிரம்பி வழியும்.

நாற்பத்தாறுகளில் நடந்தவை பற்றி என் எண்ணக்குதிரையைத் தட்டி விடுகின்றேன்.

ஆனித்திங்கள் 12ஆம் நாள்! மாலையானதும் கோயில் வளாகத்தில் மக்கள் வெள்ளம் அலைமோதும். அன்று தான் திருவிழாவின் கடைசி ஆராதனையான நோவினை. கோயில் மணி ஒலித்தபின் மிருசுவிலைச் சேர்ந்த இராயப்பு சகோதரர்களின் மேள ஒலியும், தொடர்ந்து யாழ், பிரதான வீதியைச் சேர்ந்த றேமன் சகோதரர்களின் பாண்ட்வாத்திய இசையும் காதுகளுக்கு விருந்தாக அமையும்.

கோயில் ஆராதனை முடிவுற்றதும் "ஏய்யா! கடல வாங்கலியா?" - என்ற இந்தியக்கிழவி சுப்பம்மாவின் கடலையைக் கொறித்துக் கொண்டு, கச்சானையும் மென்று விழுங்கிய நானும், நண்பர்களும் முறுக்கு மீசைக்காரனான பரமசாமியிடம் சென்று, அவனிடமுள்ள மிளகாய்த்தூள் கலந்த பருப்புக் கடலையை அள்ளி வாயில் போட்டால் எலுமிச்சம் பழவாடை அடிக்குமே! இன்றும் அதனை நினைத்தால் கூட நாவில் நீர் ஊறுகிறது. அந்த மனோகரமான நிலையை அளவிட்டுக்கூறத் தமிழைத் தேடுகிறேன். கிடைக்கவே இல்லை.

அந்த இனிய நினைவுகளோடு, எங்கள் கால்கள் மெல்லநகர்ந்து மைதானப் பக்கஞ்செல்லும். எல்லோரின் கண்களும் மேலே நோக்கியபடி வானத்தைத் துழாவி எடுத்தன. அது வாண விளையாட்டுக்கு உரியவேளை. சுன்னாகத்தைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைப்பொன்னனின் கைவண்ணத்தைப் பார்க்க மக்கள் கூடி விடுவார்கள். மஞ்சள், பச்சை, சிவப்பு வண்ணங்களில் அவுட்டு, வெள்ளிவிறிஸ், சக்கரவாணம், மத்தாப்பு, இப்படி எத்தனை மாதிரிகள். மறுபக்கத்தில் ஒரு மூலையிலே சிறிய மேடைகட்டி கோலாட்டம், கும்மி என்பன நடந்தேறும்.

இந்த இனிய நினைவுகளுடனே இரவு கரைந்து அடுத்தநாள் காலைப் பொழுதும் புலர்ந்துவிடும்! மறுநாள் காலை! புனித அந்தோனியார் திருவிழா! கோயில் வளாகம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோயிலினுள்ளே நடைபெற்ற திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து நிகழ்ந்த ஆராதனைகளிலும் கலந்து கொண்ட சனக்கூட்டம், புனித அந்தோனியாரைத் தாங்கிய கூட்டைப் பவனியாக எடுத்து வந்தது. செபங்களும், ஆர்ப்பரிப்புக்களும், அண்ணாவிமார்களின் நடைசாரி விருத்தங்களும் ஒலிக்க, அதைக்கேட்டு மக்கள் பக்திப் பிரவாகத்தில் மூழ்கியிருக்க ஊரினைச் சுற்றிவந்த புனிதரின் பவனி கோயிலை அடைந்து நிறைவுற்றது.

பிற்பகலில் நடைபெறவிருக்கும் பெருவிருந்திற்கான ஆயத்தங்களில் மக்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அரிசியைச் சுளகில் போட்டுத் தெள்ளிப்புடைத்துத் துப்புரவு செய்வதில் பெண்களில் ஒருசாராரும், காய்கறி சீவி நறுக்கி எடுப்பதில் இன்னொருசாராரும் ஈடுபட்டிருந்தனர். தேங்காய் துருவுவதிலும், அரிசி உலையேற்றுவதிலும் ஆண்கள் பங்கெடுத்தனர்.

பொழுதோ மேற்கில் சாய்ந்து விட்டது! மக்கள் வரிசையாக வளாகப் புற்றரையில் அமர்ந்தனர். பனையோலைப் பாய்களில் கொட்டி, தென்னை மட்டையால் கறியோடு குழப்பி எடுத்த சோற்றைப் புதிய நார்க்கடகத்தில் எடுத்துவந்து பந்தியிலிருந்த மக்களுக்குப் பரிமாறினர். விருந்துச் சோற்றின் சுவையையும், அமுதத்தையும் வேறாகப் பிரித்துப்பார்க்க முடியவில்லை.


வளாகத்தின் தென்கிழக்கு மூலையிலே, குறுகத்தறித்த தென்னங்குற்றிகளை நட்டு சலாகைகளைப் பொருத்தி அதன் மீது பலகையைப் பரப்பி வைத்து உயர்ந்த தடிகளைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்ட கொட்டகை ஒன்று கண்ணுக்குப் புலப்பட்டது. அந்த மேடையில் தான் அன்றிரவு கூத்து நடைபெறப் போவதாகச் சிலர் பேசிக் கொண்டனர்.

இரவு 8.00 மணிக்கு மேலாகிவிட்டது! அந்தப் படச்சட்ட மேடையைச் சுற்றி மக்கள் குழுமியிருக்கத் தொடங்கிவிட்டனர். பெண்களும், பிள்ளைகளும் தாம் கொண்டு வந்த ஓலைப் பாய்களைத் தரையில் விரித்து அதன் மீது அமர்ந்தனர்.

வெற்றிலையை வாயிலிட்டுக் குதப்பித்தள்ளும் ஒரு கூட்டம்; புகையிலைச் சுருட்டை வாயில் வைத்து இழுத்துப் புகையைக் கக்கும் ஒருகூட்டம்; அண்ணாவியாரின் காப்புப் பாடலுடன் மேடையிலுள்ள திரை (சீன்) விரிய ஆரம்பமான தேவசகாயம் பிள்ளை கூத்தை மக்கள் கூட்டம் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. சலித்தெடுத்த முத்துக்கள்

கும்மி, கோலாட்டம், கப்பற்பாட்டு, ஊஞ்சற்பாட்டு என முகைவெடித்த பாஷையூரின் கலைவாழ்வு நாட்டுக்கூத்தில் பூவாய் மலர்ந்து மணம் வீசத்தொடங்கியது. அவ்வேளையில் மட்டக்களப்பு, மன்னார், சிலாபம், தீவகம் முதலிய இடங்களிலும் கூத்து தலையெடுக்கத் தொடங்கியிருந்தது. தமிழகத்திலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட கூத்துவடிவத்தைப் பெற்று நம்மவர்கள் அதனை மெருகூட்டினர். அவ்வேளையில் சிங்களப் பகுதிகளிலும் கூத்து இருந்ததாக அறிய முடிகிறது.

பாஷையூரில் பிறந்த புகழ்பூத்த புலவர்கள் காலத்தாலும் அழியாத கூத்துக்களை எழுத்துருவாக்கித் தந்தனர். அண்ணாவிமார்களின் அயராத உழைப்பினாலும், கூத்தாளிகளின் அர்ப்பணிப்பினாலும் அக்கலைச் செல்வங்கள் அவ்வப்போது மேடையேறி மக்களின் நெஞ்சங்களையெல்லாம் கொள்ளை கொண்டன. மனங்களை அள்ளிச்சென்ற அந்த மாபெரும் கலைப்படைப்புக்களை; சலித்தெடுத்த முத்துக்களைத் தொட்டுக் காட்டுவது பொருத்தமென நினைக்கின்றேன்.

*ஞானரூபன்*

கூத்து மகுடத்தில் மின்னுகின்ற ஒரு வைரக்கல்லென கூத்து ஆய்வாளர்களால் புகழப்பட்ட இக்கூத்தை பாஷையூர் புலவர் க.மு.சுவாம்பிள்ளை (1812-1884) எழுதினார். இவரால் ஆக்கப்பட்ட முதற் கூத்தான இது, அரச கதையாயிருந்தாலும், மானிடவாழ்வினை புடம்போட்டெடுக்கும் ஆழமான கருத்துக்களைச் சொல்லிச் செல்லுகின்றதென்ற உண்மையை எவரும் மறுப்பதற்கில்லை.

அருவியோட்டம் போன்ற ஓசைநயங்கனிந்த பாடல்கள், அர்த்தமுள்ள கதைப்பின்னல், காந்தம் போல நெஞ்சை இழுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் கருத்துக்கள், கண்களுக்கு விருந்தளிக்கும் காட்சிக்கோர்வை இத்தனையையும் உள்வாங்கிய முத்தனைய ஞானரூபன் கூத்தை மண்ணின் மைந்தர்களே பாடிநடித்தனர் என்பதும், பலதடவைகள் அரங்கேறியதென்பதும் மனங்கொள்ளத்தக்கது.

ஞபனரூபன் கூத்தில் புலவரின் தமிழின் வீச்சைப் புரிந்து கொள்ள தேவலங்காரன் பாடும் ஒருகவி விருத்தத்தை இங்கு காணலாம்.

காருறு விசும்பின் வேரைக்களைத்திடுகொல்போலெந்தன்
பாருறு செயிர்களெல்லாம் பறந்திட வருளும் ஏக
சீருறு பரனைப் போற்றிச் சிங்கணை தனிலே என்றும்
பேருடன் இருந்தரசு பொன்மையாய்ப் புரிகுவோமே!

***அந்தோனியார்***

அமுதத்தமிழை அள்ளித்தெளித்து புனித அந்தோனியார் பேரில் எழுந்த இந்நாட்டுக்கூத்தைப் பாஷையூர் புலவர் க.மு.சுவாம்பிள்ளை ஆக்கியுள்ளார். மறையியற் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் இது, ஒரு நிறைவான கலைப் படைப்பென்பதை எவராலும் துணிந்து கூறமுடியும். இது வெட்டி வைத்த கரும்புச் சொற்களால் ஆக்கப்பட்டு நவரசங்களும் சொட்டும இனிய தேன்கூடு.

புனித அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டுப் பாஷையூரிலும், மண்டைக்கல்லாறிலும் எட்டுத் தடவைகளுக்கு மேல் அரங்கேற்றம் கண்ட இக்கூத்தில் பழம்பெரும் கூத்தாளிகள் பலர் பாடி நடித்துள்ளார்கள். கூத்தென்றால் சுவாம்பிள்ளைப் புலவரின் அந்தோனியார் நாட்டுக்கூத்துத் தான் என்று விமர்சகர்களும், சுவைஞர்களும் கூறியது இன்றும் கூட என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இனிய பாடல்களால் நிறையப்பெற்ற அந்தோனியார் கூத்தில் அரசிளங்குமரியின் வெட்டிய கூத்தலை அந்தோனியார் ஒட்டச் செய்யும் காட்சியில் ஒரு பாடல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்தலவர் காட்டிய நல்வழியில் என்றும்
வேந்தன் மகளொருத்தி பற்று வைத்ததனால் அவளின்
கூந்தலைச் சினந்து கத்தியால் வெட்டிச்சிதைத்தான்
பூந்துகிலாள் தலைமுடியைப் பொருத்தி வைப்பாயே!

### கண்டி அரசன்

கூத்துக் கொம்புகளில் மடலவிழ்ந்த மல்லிகைப்பூ தான் கண்டிஅரசன். இக்கூத்தைப் பாஷையூர் தந்த பெரும்புலவர் நீ.மிக்கோர்சிங்கம் (1891 - 1969) எழுதினார். சூழ்ச்சிக்கும், பொறாமைக்கும், சுகபோக வெறிக்கும் ஆளானவர்கள் முடிவில் சோகத்தைத் தரிசிப்பார்கள் என்ற கருத்தியலை வலியுறுத்தும் இப்படைப்பு அவலச்சுவையின் பிரசன்னம் என்றால் அது மிகையல்ல.

பாஷையூர் கூத்தாளிகளால் பாடி நடிக்கப்பெற்ற இக்கூத்து, புலவர் அதை எழுதிய 1952ஆம் ஆண்டிலேயே பாஷையூரில் முதன்முதலாக மேடையேறியது. தொடர்ந்து பலதடவைகள் அரங்கேறிய இக்கூத்து 1978ஆம் ஆண்டு எனது முயற்சியால் நூலுருப்பெற்றது. குடிமக்களுக்காகப் பரிந்து பேசிய பிரமித்தளை என்ற மந்திரியைக் கண்டி அரசன் சினத்துடன் கடிந்து கொள்ளும் பாடல் இது!

புத்தி புகன்றிட வந்தாயோ துரைத்தனத்தில்
உத்தியோகமாக நின்றாயோ
மெத்தவே மனந்துணிந்து பித்தர்களுடனே வந்து
கத்துமுன் ஈரலை செத்து மெத்திடச் செய்வேன் உகந்து!

### கட்டபொம்மன்

விலங்கை உடைத்தெறிந்துவிட்டு, விடுதலையின் வாசலுக்கு ஓடிப்போ என்று தமிழனுக்குச் சுதந்திர உணர்வையூட்டும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாக எழுந்தது தான் கட்டபொம்மன். புலவர் நீ.மிக்கோர்சிங்கம் உருவாக்கிய இக்கூத்து, அண்ணாவியார் ம.பாவிலுப்பிள்ளையின் நெறியாள்கையில் 1961 ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறியது.

தொம்மையப்பர் குழுவினால் பாடி நடிக்கப்பெற்ற இக்கூத்தில் சுவைமிகுந்த பாடல்களும், சொக்கவைக்கும் சுகமான இசைக்கோலங்களும், கனதியான பாத்திரப்படைப்பும் நெஞ்சைத் தொடும்வகையில் அமைந்துள்ளன. விறுவிறுப்புடன் கூடிய இக்கூத்து பாஷையூரிலும், மண்ணித்தலையிலும் பல தடவைகள் அரங்கேறிய பெருமை கொண்டது. கட்டபொம்மன் போர்க்களம் செல்வதற்கு விடைதரச் சொல்லி மனைவி ஜக்கம்மாவிடம் கேட்கும் ஒரு பாடல்!

திங்கள் கொழுந்து தங்கும் நுதலாள்
திருமகள் அவதாரம் ஆகிய
மங்கை ஜக்கம்மா மாற்றலர் சேனை
வந்துற்றாரே! சமர் செய்ய வந்துற்றாரே!

***ஞானசௌந்தரி***

சுவைஞர்களின் கண்ணுக்கும், செவிக்கும் விருந்தாகப் படைக்கப்பட்டது தான் ஞானசௌந்தரி. பலாச்சுளைபோல் இனித்த பாடல்களால் பாஷையூர் புலவர் பெ.கிறிஸ்தோப்பர் (1913 - 1993) ஆக்கியதே இக்கூத்து.

கரும்புச் சொற்களைப் பொறுக்கியெடுத்து, காது குளிர வைக்கும் பாடல்களைக்கொண்டதனால் மக்களைக் கவர்ந்திழுத்த இக்கூத்து, அண்ணாவியார் ஞா.மடுத்தீஸ், அண்ணாவியார் லோ.வஸ்தியாம்பிள்ளை என்பவர்களின் நெறியாள்கையில் உருவானது. 1946ஆம் ஆண்டு முதன்முதலாக அரங்கேறிய ஜனரஞ்சகமான இக்கூத்து, பாஷையூரிலும், மண்ணித்தலையிலும் பலதடவைகள் மேடையேறிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான நாட்டுக்கூத்துத் தேவையென்று யாரும் கேட்டால் துணிந்து ஞானசௌந்தரியைத் தூக்கிப் போடலாம் என்பது என் எண்ணம்.

பொன்னான அந்திப் பொழுதில் அரசிளங்குமரி ஞானசௌந்தரி தன் தோழிகள் புடைசூழச் சோலையுலாவுக்குப் புறப்பட்டு வருகின்றாள். நந்தவனத்தில் மலர்ந்துள்ள பூக்களின் அழகு கண்ணுக்கு விருந்தளித்தாலும், புலவனின் இந்தப்பாடலில் சொல்லப்படும் கற்பனை அழகோ கருத்துக்கு விருந்தாக அமைந்துள்ளது.

தங்கத் தாவடம் தொங்கிப் பறந்திடத்
தண்டை கொலுசலம்ப - புகழ்
எங்குமே நிறைதுங்கன் மகளென்று
ஏகுதே அன்ன ஊஞ்சல்!

***கற்பகமாலா*** .

மறைப் புனிதர்களின் வரலாறு, புராண, இதிகாச இலக்கிய நிகழ்வுகள் என்பவற்றில் மூழ்கிக்கிடந்த ஆரம்பகால நாட்டுக்கூத்துலகம், சாதாரண மனித வாழ்க்கையை இனங்கண்டு, அதனுடைய சரியான மதிப்பீடுகளைத் தொட்டுக்காட்டிய வேளையில் மேடையேறியது தான் புலவர் பெ.கிறிஸ்தோப்பர் எழுதிய கற்பகமாலா.

அண்ணாவியார் தீயோ இராசேந்திரம், அண்ணாவியார் சின்னத்தம்பி அந்தோனி என்பவர்களின் நெறியாள்கையில் வெளியான இக்கூத்து, 1952ஆம் ஆண்டு முதன்முதலாகப் பாஷையூரில் அரங்கேறியது, முற்றிப் பழுத்து முதிர்ந்த கூத்தாளிகளால் மண்ணித்தலை, மண்டைக்கல்லாறு முதலிய இடங்களிலும் இக்கூத்து மேடையேற்றங் கண்டது.

மனிதம் இழையோடும் கருத்துக்களையும், பிள்ளைத்தமிழிலே பிறந்து மனதைக் கொள்ளைகொள்ளும் பாடல்களையும் இக்கூத்து தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக இதோ ஒரு பாடல்!

மாயமுறு செகசாலம் ஓதவில்லை மயக்கமுறு
பேயின் ஆவசமாக வந்ததில்லை
மட்டில்லா நரர்கெட்டு நரகினிலே
கொட்டுறா தருள் இட்டே குரிசினில்
மரித்த பரன்பதம் மரணமளவிலும்
மறந்திடேன் அறிவீரே!

***புனிதவதி***

எளிமையான கற்பனையும், மனதைக்கவரும் இசையோடு கருத்தாழமுள்ள பாடல்களையும் கொண்ட அருமையான நாட்டுக் கூத்தே புனிதவதி. ஆயுர்வேதவைத்தியர் வயித்தி கபிரியேற்பிள்ளை (தொம்மையார்) ஆக்கிய இக்கூத்து 1953 ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேற்றப்பட்டது. மூத்துநின்ற கூத்தாளிகள் பாடி நடித்த இக்கூத்து சுவைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

கூத்திற்குத் தரமான நடிகர்களைக்கொண்டு வந்து அறிமுகஞ்செய்த இக்கூத்து மண்ணித்தலையிலும், மண்டைக்கல்லாறிலும் திரும்பவும் மேடையேறிற்று. துயரங்களின் நெரிசலுக்கு மத்தியில் துடித்திருந்த புனிதவதி, கண்ணிலே கருணைபொங்க, காலிலே நிலவு தங்க நின்ற அன்னைமரியாளிடம் தஞ்சமடைகின்றாள்.

அண்ணாவியார் ஞா.மடுத்தீஸ், அண்ணாவியார் தியோ இராசேந்திரம் என்பவர்களின் நெறியாள்கையில் உருவான இக்கூத்தில் நெஞ்சையள்ளும் பாடலுக்கும், நேர்த்தியான கதைநகர்வுக்கும் பஞ்சமிருக்காது. கொச்சகத்தைத் தொடர்ந்து வரும் பாடலொன்றைக் காண்போம்.

**கொச்சகம்**

அழகோ அழகின் விழியொளியோ
ஆரோ அன்ன நடையாளோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியோ குயிலோ பூவையுடை
கீர்த்தி தனைநான் பார்த்திருக்க
தெளியாம் நகிலம் கொம்மை குயம்
தேர்ந்தே கண்ணால் கண்டவுடன்

தரு

எட்டிநடந்து நான் சென்று - அவள்
கிட்ட உறவுகள் கொண்டு
சட்டெனப் போய்முன்பு நின்று - அவளைத்
தொட்டடிடுவேன் ஆசைவிண்டு!

***சற்குணானந்தன்***

எளிமையும் இனிமையும் நிறைந்த பாடல்களையும், எல்லோருடைய நெஞ்சுகளையும் கவர்ந்திழுக்கும் கதையமைப்பையும் கொண்டு பாஷையூர் புலவர் கென்றிப்பிள்ளை சூசைப்பிள்ளை (1919 - 1990) எழுதிய நாட்டுக்கூத்துதான் சற்குணானந்தன். தர்மசிந்தனையுடன் வாழ்பவன் உலகையே தன் காலடியின்கீழ்க் கொண்டு வருவான் என்ற உயரிய கருத்தைப் புலவர் இக்கூத்து மூலம் நிறுவமுற்படுகின்றார். பாஷையூரில் 1961ஆம் ஆண்டு முதன் முதலாக மேடையேறிய இக் கூத்தில் முதிர்ந்த கூத்தாளிகள் பாடி நடித்துள்ளனர். மண்ணித்தலை, கௌதாரிமுனை முதலிய பிற இடங்களிலும் இக்கூத்து திரும்பவும் அரங்கேறியது.

கூத்தைப் பார்ப்பதற்கு அலைமோதிய மக்கள் வெள்ளம் ஒன்றே புலவருக்குக் கிடைத்த மேலான அங்கீகாரம் என்றே சொல்ல வேண்டும். சுருக்கமாகவும், இறுக்கமாகவும், சுவையாகவும் படைக்கப்பட்ட இவரின் படைப்பாற்றலுக்கு எடுத்துக்காட்டாக வரும் இப்பாடலை இக்கூத்தில் கேட்டு மகிழலாம். சூதனின் வரவுப்பாடல் இதோ!

விஜயன் மாளிகை செல்லுவேன் - விரைவுடனே
விஜயன் மாளிகை செல்லுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயன் மாளிகை சென்று உசித உறவு கொண்டு
வசியமதி புகன்று கசிவுதனை அகன்று
வினயமுடனே அவன் மனமே அறிய அங்கே
விரைவில் நடந்து சென்று கருமங்கொள்வேன்!

### *முத்தா? மாணிக்கமா?*

நெஞ்சையள்ளும் இளங்கோவின் செஞ்சொற் காவியமான சிலப்பதிகாரத்தை மூலக்கதையாகக் கொண்டு பாஷையூர் புலவர் என்றிப்பிள்ளை சூசைப்பிள்ளை எழுதிய முத்தா மாணிக்கமா என்ற நாட்டுக்கூத்து பாஷையூரிலே 1983ஆம் ஆண்டு அரங்கேறியது.

அண்ணாவியார் சின்னத்தம்பி அந்தோனியின் நெறியாள்கையில் புகழ்பூத்த நடிகர்களால் பாடி நடிக்கப்பெற்ற இக்கூத்து, சுவைஞர்களுக்குப் பெருவிருந்தாய் அமைந்திருந்தது என்பதில் இருகருத்துக்கு இடமில்லை.

இனிய பாடல்கள், இணையற்ற பாத்திரவார்ப்பு, உயர்ந்த நீதிக்கருத்துக்கள், எதிர்பாராத திருப்பங்கள் என்பனவற்றிற்குப் பஞ்சமேயில்லாத கூத்து முத்தா? மாணிக்கமா?. இக்கூத்திலுள்ள பாடல்களின் சுவையை நினைவு கூருவது சிரமமல்ல. மறப்பதுதான் சிரமம். இவர் எழுதிய இனிய பாடலொன்று!

ஆரணத்தின் உட்பொருளாம் சோதி - எங்கள்
அம்பரனைத் தந்தமரி தன்புகழை ஓதி
தாரணியில் வாழ்வோம் மனப்பீதி - யாவும்
தங்கிடாது விட்டகலும் சத்தியங்காண் நீதி!

### *இம்மனுவல்*

கருத்துச் செறிவும், கற்பனைவளமும், உரித்த பலாச் சுளைபோல் உவமைநயமும் கொண்டு பாஷையூர் புலவர் ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை (செகராசசிங்கம் 1915 - 2004) பாடியுள்ள நாட்டுக்கூத்துதான் இம்மனுவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவரை உருகவைக்கும் பாடல்கள் நிறைந்த நாட்டுக்கூத்தான இதனை அண்ணாவியார் சின்னத்தம்பி அந்தோனி, அண்ணாவியார் ஆசீர்வாதம் பிலிப்பையா என்பவர்கள் இயக்கியுள்ளனர்.

தமிழிலுள்ள வித்துவச்சுவைகள் விளையாடும் இவரது பாடல்களை எத்தனை தடவைகள் கேட்டாலும் காதுகள் சலிப்படைவதில்லை. சிறந்த கூத்தாளிகளால் பாடி நடிக்கப் பெற்ற இக்கூத்து, பாஷையூரில் 1955ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 13ஆம் நாள் அரங்கேறியதுடன் புலவருக்கு "முத்தாரக்கவிஞர்" என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக்கொடுத்தது. மண்ணித்தலை, தாளையடி போன்ற இடங்களில் மறுபடியும் அரங்கேறிய இக்கூத்தில் மனதிற்கினிய பாடல்கள் பல மின்னுகின்றன.

தேனார்ந்திடு பூவனத்து ஏவாள்செய்
    தீவினையைத் தீர்க்க அன்று
வனார்ந்திலகு மோட்ச மெனும்
    வாகத்தாருவி மாநிலத்தில்
மானார் மரியின் மகவாக
    மலையில் பிறந்து கொலைக்காளாய்
ஊனார்ந் தொழுகரண முற்றே
    உயிர்த்த பரனை மறவேனே!

காவினிலே நடந்து கால்கள் கடுக்குதையோ
    நாவுவறளு தென்னால் நடக்க முடியவில்லை
நலிவுற்றிடுமெனை வலிவுற்றிட மனத்
    தெளிவுற்றிட வருள் தேவமாதாவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. பாஷையூர் தந்த பெரும்புலவர்கள்

## *வரகவி க.மு.சுவாம்பிள்ளை (1812 - 1884)*



புலவருலகம் போற்றிமணக்கும் க.மு.சுவாம்பிள்ளை பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வைத்தியர் கந்தப்பு முருகவேளைத் தந்தையாகவும், சந்தான லட்சுமியைத் தாயாகவும் பெற்ற இவர் ஆயுர்வேதம், சோதிடக்கலை என்பவற்றில் சிறந்து விளங்கினார்.

பண்டிதர் சின்னத்தம்பியிடம் தொல்காப்பியம், நன்னூல், சூடாமணி நிகண்டு முதலியவைகளைக் கற்ற இவர் கம்பராமாயணம், நளவெண்பா, சிலப்பதிகாரம், மகாபாரதம், சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற தமிழிலக்கிய நூல்களையும் கருத்தூன்றிப் படித்தார். 1812ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 17ஆம் நாள் பிறந்த இவருக்கு கவிதை எழுதும் ஆற்றல் இயல்பாகவே கைவரப்பெற்றது. இவரது நோட்டம் நாட்டுக்கூத்தின் பக்கம் சாய்ந்தது.

பல கூத்துக்களை ஆக்கிய புலவரின் முதல்படைப்பாகவும், முழுமைபெற்ற கூத்தாகவும் விளங்குவது ஞானரூபனே என்றால் அது மிகையல்ல. பாஷையூர் கூத்து வளர்ச்சியின் நதிமூலமாக இனங்காணப்பட்ட சுவாம்பிள்ளையின் ஆக்கங்கள் யாவும் இவரது விரிந்த உள்ளத்தின் வெளிப்பாடுகளாக விளங்கின.

**தொன்நீக்கிலார்**
**கத்தறினாள்**
**மரியகரீதாள்**
**சிறிசாந்தப்பர்**
**அந்தோனியார்**
**அருளானந்தர்**

என்பன போன்ற பிற கூத்துக்களையும் இவர் எழுதியுள்ளார். முத்துப்பிள்ளை என்பவரை மணந்து தெய்வேந்திரன் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனைப் பெற்ற புலவர் 1884ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் இறந்தார். வாட்டமுற்றுக்கிடந்த நாட்டுக்கூத்தின் வளர்ச்சிக்கு நீரூற்றியவன், நெஞ்சாரக் கூத்தை நேசித்த செஞ்சொற் புலவன் சுவாம்பிள்ளையின் புகழ் என்றும் நம்மிடையே நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

கன்றைவிட்ட ஆவது போல்
கலையை விட்ட மானது போல்
மன்றல் விட்ட பூவது போல்
வாடிமுகம் கோணிய தேன்
குன்றைவிட்ட வேய்முலையீர்!
கூக்குரல் விட்டே யழுது
தண்டை விட்டகால் வருத்தம்
தனித்துவந்த தேதடியோ!

**(ஞானரூபன்)**

### *மதுரகவி நீ.மிக்கோர்சிங்கம் (1891 - 1969)*



புலவர் நீ.மிக்கோர்சிங்கம் நீக்கிலாசுக்கும், சின்னத்தங்கத்துக்கும் மகனாக பாஷையூரில் 1891ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 19ஆம் நாள் பிறந்தார். ஆரம்பக் கல்வியுடன் இடைநிலைக் கல்வியையும் கற்றுத்தேறிய இவருக்குத் தமிழ்ப்பாடல்கள் புனையும் ஆற்றலும் இருந்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பண்டிதர் அ.யுவக்கீன்பிள்ளையிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்ற இவருக்கு, நாட்டுக்கூத்தில் ஆர்வம் துளிர்விட பாஷையூர் புலவர் ம.அதிரியான் காரணமானார்.

சங்கப் பாடல்களிலே சாறெடுத்து தங்கத் தமிழ்ப்பாடல்களைக் கூத்திலே பெய்துவைத்த புலவர் பல நாட்டுக்கூத்துக்களையும் படைத்துள்ளார்.

**கிறிஸ்தோப்பர் கண்டிஅரசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **அலேசு** | **சத்தியவந்தன்** |
| **மதியானந்தன்** | **கட்டபொம்மன்** |

முதலிய படைப்புக்கள் புலவரால் ஆக்கப்பட்டவை. கற்பனைக்கு ஆழமும், அழகும் அளிப்பன அவற்றில் இழையோடும் உணர்ச்சிகளே. அந்த உணர்ச்சியிலே முக்குளித்த புலவர், கற்பனை நயமும், கருத்தூட்டமுள்ள சொல்லாட்சியும் கொண்ட இனிய பாடல்களைத் தமது படைப்புக்களில் குவித்துள்ளார். கூத்துக்களுக்கே மகுடமென மின்னும் கண்டி அரசனை 1952ஆம் ஆண்டில் புலவர் எழுதியுள்ளார்.

வாழ்வியலில் மனித மனங்களை உறுத்துகின்ற, விழிகளை உசுப்பி நனையவைக்கின்ற பல காட்சிப் படிமங்களைக் கொண்ட இந்நாட்டுக்கூத்தைத் தந்ததற்காக மிக்கோர்சிங்கத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஏற்றமும், சொல்லமுடியாத ஆற்றலும் கொண்ட புலவர் 1969ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 22ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

சூழ்ச்சியின் மதமதப்பும், வீரத்தின் ஆர்ப்பரிப்பும், சோகத்தின் கசிவையும் தருகின்ற இவரது பாடல்களின் சுவை நாவால் சொல்லுந்தரமன்று.

தங்கரத்தின மணிமௌலி தரிக்கும் ராசன்
    தரியலர்கள் நெரியவமர் புரியும் ராசன்
எங்குமொளிர் தொங்கல் புனைந்திலங்கு ராசன்
    ஏவலர் காவலர்கள் பணிந்திறைஞ்சும் ராசன்
பங்கமற்ற பதாதி பகுத்திடுகும் ராசன்
    பாவலர் நாவலர் பாடிப் பணியும் ராசன்
சங்குக் கொடி தக்குவிறல் பொங்கு ராசன்
    சிறப்போங்கு கனாநேயன் சிங்கணை வந்தானே!

**(கிறிஸ்தோப்பர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இன்சுவைக் கவிமணி பெ.கிறிஸ்தோப்பர் (1913 - 1993)***



புலவர் பெ. கிறிஸ்தோப்பர், பெஞ்சமின் - ஆரோக்கியம் என்பவர்களுக்கு மகனாக 1913ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 11ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார்.

கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர், மட்டுவிலைச் சேர்ந்த பண்டிதர் வே.அருளானந்தர் என்பவரிடம் செய்யுள் இலக்கணங்களைக் கற்றுத் தேறினார்.

கருத்தாழமும், பண்பாட்டுவாசனையும் கொண்ட இனிய பாடல்களை எழுதிய புலவர், பாட்டு மலர்களாலே உன்னதமான நாட்டுக்கூத்து மாலைகளைத் தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தார். காதுகளில் அமுத கானம் பொழிகின்ற கருத்தாழமுள்ள அவரது பாடல்களைப் பாராட்டாதார் எவருமில்லை என்பதைத் துணிந்து கூறலாம்.

| | |
|---|---|
| **பவுலீனப்பர்** | **பிலோமினம்மா** |
| **ஞானசௌந்தரி** | **சவீனகன்னி** |
| **சவேரியார்** | **கற்பகமாலா** |
| **செபஸ்தியார்** | **பிரகாசராசன்** |
| **அருளானந்தர்** | **குணசீலன்** |

என்பன இவர் படைத்த கூத்துக்களில் சிலவாகும்.

சுவைஞர்களின் பாராட்டைப் பெற்றதும், சோகக்குளியலில் முதன்மை கொண்டதுமான கூத்து புலவரின் ஞானசௌந்தரியே. அன்புக்கு இமயமாகவும், அருளுக்கு ஆலயமாகவும் வாழ்த்தப்படுகின்ற புனித மரியாளின் மகிமையை ஞானசௌந்தரி வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

1940 ஆம் ஆண்டு புலவரால் எழுதப்பட்ட இக்கூத்து, 1946 ஆம் ஆண்டு புகழ்பெற்ற நடிகர்களால் முதன்முதலாகப் பாஷையூரில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. நாட்டுக்கூத்தை மண்ணின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களாக மக்கள் பாடல்களாகக் கேட்டு மகிழவைத்த பெருமை கிறிஸ்தோப்பருக்கு உண்டென்று கூறினால் அது பொய்யில்லை. ஆற்றலுள்ள நாட்டுக்கூத்துத் தான் நான் சுவாசிக்கும் காற்று என எண்ணி வாழ்ந்த புலவர் 1993 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் இறந்தார் என்ற செய்திகேட்டு நாட்டுக்கூத்து உலகம் கண்ணீர் விட்டது.

இந்த உன்னத படைப்பிலுள்ள இன்னமுதப் பாடல்கள் காலவெள்ளம் உருண்டோடிப்போனாலும் வாழுகின்றன என்றால் அப்பாடல்களின் இலக்கியக் கனதியை எவரால் மறுக்கக்கூடும்.

உத்தமஞ்சேர் நமது குலத்தலைவனான
உனது அரிய தந்தை உயிர்நீத்த பின்னால்
மெத்து பல் வேலையெல்லாம் புரிந்து
மிக்க சிரமமெடுத்துப் பேணி வந்தேன்
பத்துவயதாக இன்னும் நிரம்பிடாத பாலகன்நீ
பாடி எனக்குழைப்ப தென்றால்
புத்தியல்ல இத்தரையில் கல்விக் கூடம்
போவதுதான் நன்மையெனப் புகன்றிட்டேனே!

(சவீனகன்னி)

## *வித்தாரக்கவி வயித்தி கபிரியேல் (தொம்மையர் 1887 - 1951)*



புலவர் வயித்தி கபிரியேல், அகுஸ்தீன் வயித்தி றோசம்மா என்பவர்களுக்கு மகனாக 1887 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 20ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார்.

ஊரிலுள்ள பாடசாலையில் கல்வியை முடித்துக் கொண்ட அவர், தந்தையிடமிருந்து பெற்ற ஆயுர் வேதத்திலும், மாந்திரீகக்கலையிலும் பிரகாசிக்கத் தொடங்கினார். சூடாமணி, பிங்கலம் என்ற நிகண்டுவகைகளையும், இராமாயணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதம், நளவெண்பா போன்ற காவிய நூல்களையும் கற்றுத் தேறிய புலவர், நாட்டுக்கூத்துக்களையும் படைக்க முற்பட்டார். 1939 ஆம் ஆண்டு புலவரால் முதன்முதல் எழுதப்பட்ட கூத்துத்தான் சவேரியார்.

**லெயோன்**

**கிறிஸ்தீன கன்னி**

**புனிதவதி**

முதலிய கூத்துக்களையும் புலவர் தொடர்ந்து இயற்றினார்.

சமய உள்ளீடுகளுடன் பின்னிக்கிடந்த நாட்டுக்கூத்து, சமூக மாற்றத்திற்குத் தாவிய வேளையில் தான்,1941 ஆம் ஆண்டில் புனிதவதி கூத்து புலவரால் ஆக்கப்பட்டது. புகழ்பெற்ற கூத்தாளிகளால் 1948 ஆம் ஆண்டு பாஷையூரில் இக்கூத்து அரங்கேற்றப்பட்டது. மற்றவர் கண்களில் விரல் விட்டு ஆட்டுவதில் விற்பன்னரும், அவரது சகோதரரும், வீறு மிக்க நாட்டுக்கூத்து உணர்வாளருமான வயித்தி எசக்கியேல் என்பவரே பொறுப் பாளராக (மனேஜர்) புலவரது கூத்துக்களை முன்னின்று செயற்பட்டு மேடையேற்றினார். புலவரின் கூத்துக்கள் பழம்பெரும் நடிகர்களைக் கொண்டு அண்ணாவியார் ஞானப்பு மடுத்தீஸ், அண்ணாவியார் தீயோ இராசேந்திரம் என்பவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டுப் பாஷையூரிலும், மண்ணித்தலையிலும் மேடை யேற்றங் கண்டுள்ளன.

சமூகத்தின் அவதானிப்புகளைப் பகிர்ந்து கொண்டு, கூத்துலகிற்குச் சுவையான விருந்தளித்த புலவர் தொம்மையர் 1951 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 29ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். இவரின் கிறிஸ்தீன கன்னியில் ஒரு பாடல்!

இளம்பெறு மதிய வானத்து
    இலங்கு மைமாரி பெய்ய
வளம்பெறு பொன்பொலி தேச
    வனப்பெலாம் உரைக்கக் கேட்டு
உளம்பெறு மகிழ்ச்சி யானேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்பரன் பதத்தை நாளும்
தளம்பெற வணங்கி வாழ்த்தித்
தகுமர சியற்று வோமே!
**(கிறிஸ்தீன கன்னி)**

## *ஆசுகவி மனவல் அதிரியான் (1890 - 1941)*



புலவர் அதிரியான், மனவல் அழகம்மா என்பவர்களுக்கு மகனாக 1890 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 23ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். ஊரிலுள்ள பாடசாலையில் தமது கல்வியைப் பெற்றுக் கொண்ட புலவருக்கு, மன்னாரிலுள்ள தன் நண்பர்களோடு கொண்டிருந்த தொடர்பினால் நாட்டுக்கூத்தின் மீது ஆர்வமும், அளவுகடந்த பற்றும் மேலோங்கி வளரலாயிற்று.

பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படித்துச் சுவைத்த புலவர், புதிய கூத்துக்களைப் படைத்தார். முதன்முதலாக புலவர் 1933 ஆம் ஆண்டு இசிதோர் நாட்டுக்கூத்தை ஆக்கினார்.

**யூதகுமாரன்**
**அலங்காரரூபி**
**தாவீது**
முதலிய கூத்துக்களையும் புலவர் அளித்துள்ளார் என அறியக் கிடக்கின்றது.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த இசிதோர், தன்வாழ்வை இறைமகன் கிறிஸ்துவிற்கு அர்ப்பணித்து, துயர நெருப்பாற்றில் நீந்திப் புனிதராகும் பேற்றைப் பெற்றுக்கொண்டார் என்பதை புலவர்தன் எளிய பாடல்களில் இழையோடவிட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. புலவர் மிக்கோர்சிங்கம் கூத்துத் துறையில் சுடர்விட்டுத் துலங்கப் புலவர் அதிரியான் தூண்டு கோலாக இருந்தவர் என்ற உண்மை பலருக்குத் தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலே கடல்மடியில் உதிக்கும் அந்தக் கதிரவனின் கண்கொள்ளாக காட்சியையும், நாவாரப் பாடுகின்ற பறவைக் கூட்டத்தின் இசை மழையையும் இவரது பாடல்களிலே கேட்டு அநுபவிக்கலாம் என்பது விதந்துரையல்ல.

இசிதோர் கூத்து, அண்ணாவியார் ஞானப்பு மடுத்தீஸ் என்பவரின் நெறியாள்கையில் 1939ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது, கூத்துச் சுவைஞர்களுக்குத் தமது படைப்புக்கள் மூலம் காத்திரமான விருந்தளித்த, புலவர் அதிரியான் 1941 ஆம் ஆண்டு மாசித்திங்கள் 16ஆம் நாள் மீளாத்துயிலில் கலந்தார். இவரின் இசிதோரில் இதோ ஒரு பாடல்!

நேமித்திரை முழங்கும் நெடிய மலைவனம் செறிந்த
பூமித்தரைகள் எங்கும் புலஞ்செழிக்க உழுவது போல்
நாமிங்கு மனத்தை நம்பிக்கை ஏரால் பண்படுத்தி
சாமியாம் கடவுள் பதம் செல்லுவோம் ஒன்றுகூடி!

**(இசிதோர்)**

தாவீது கூத்திலும் அவர் எழுதிய பாடல் இது!

வஞ்சனையால் என்குருவைப் பிடித்தே கட்டி
வாளெடுத்தே ஓங்கி வடுப்ப கரலுற்றாய்
நஞ்சனையாய் உன்போன்றோர் பிறவா விட்டால்
நன்மையுள்ள தாயிருக்கும் நாட்டை ஆள
மஞ்சனைய மணிமுடி செங்கோல் பிடித்த
மாசேறு முன்கரங்கள் கூற தாக்கி
மிஞ்சனைய பவனியெல்லாம் அளிப்பேன் கண்டாய்
மிடுக்கடங்கி ஒடுக்கமுடன் வாழு வாயே!

**(தாவீது)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சுவைப்புலவர் என்றிப்பிள்ளை சூசைப்பிள்ளை (1919 - 1990)



புலவர் சூசைப்பிள்ளை, வெலிச்சோர் கென்றிப்பிள்ளை குருசார் றோசம்மா என்பவர்களுக்கு மகனாக 1919 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 20ஆம நாள் பாஷையூரில் பிறந்தார். அயலிலுள்ள கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் கல்விகற்ற இவர், பழந்தமிழிலக்கண இலக்கியங்களைப் பற்றித் தமது பேரனாகிய குருசாரிடமே கேட்டறிந்து கொண்டார்.

அநுமன் கூடச் சாம்பவானின் புகழிமொழிகேட்ட பின்பு தான் கடலைத் தாண்டினான் என்பதை இராமாயணம் கூறுகின்றது. அதைப் போலத்தான் பாஷையூரைச் சேர்ந்த அமரர் ச. ஏபிரகாம் (ஆசிரியர்) தட்டிக் கொடுக்கவே இவரது கெட்டித்தனம் வெளிப்பட்டது. இயல்பாகவே இவரிடமுள்ள கலானுபவக் கிளர்ச்சியினால் நாட்டுக்கூத்துக்களை எழுத முற்பட்டார். 1962ஆம் ஆண்டு இவரது முதற் கூத்தான சற்குணானந்தன் பாஷையூரில் அரங்கேறியது.

**வீரகுமாரன்சபதம் (1965)**
**சற்குணானந்தன் (1961)**
**மரியகொறற்றி (1971)**
**கிளீயோபாத்ரா (1976)**
**கலாவதி (1980)**
**முத்தா? மாணிக்கமா? (1983)**

என்ற கூத்துக்களை இவர் தொடர்ந்து படைத்துள்ளார்.

உயிர்த்துடிப்பு உள்ளதும், உணர்ச்சிப் பிரவாகங் கொண்டதுமான கூத்துக்களைப் படைத்ததனால் இவருக்கு, 1984 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 18ஆம் நாள் பாஷையூர் அழகையா முத்தமிழ் அரங்கில் வளர்பிறை நாடகமன்றம் நிகழ்த்திய புலவர் கௌரவிப்பு விழாவில், ''சொற்சுவைப் புலவர்" என்ற விருதைப் பேரறிஞர் சொக்கன் வழங்கியதுடன் பொன்னாடை போர்த்தியும் சிறப்புச் செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்கடந்து மண்ணித்தலை, மண்டைக்கல்லாறு போன்ற இடங்களில் பல தடவைகள் அரங்கேற்றஞ் செய்யப்பட்ட சற்குணானந்தன், கிளியோபாத்ரா என்ற கூத்துக்களில் புகழ்பெற்ற கூத்தாளிகள் பலர் பாடி நடித்தமை குறிப்பிடத்தக்கது.

எமது வாழ்வில் ஆணிவேராகத் திகழுகின்ற வாழ்வியற் கோலங்கள் புலவரின் கூத்துக்களில் மெருகூட்டப்படுகின்றன. பூமிப்பந்து சுழல்கின்ற வரையில், தமது உயிரோட்டமான கருத்துக்களைப் பாடல்களின் மூலம், வாழவைத்த புலவர் 1990 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 8ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். வீரகுமாரன் சபதம் கூத்தில் இவர் எழுதிய பாடலிது!

வையமதில் கொடியபல விலங்கி னோடு
வயங்கு குயில்மயில் பறவையினங்கள் சூழும்
மையடருமிப் பெரிய வனத்தைத் தாண்டி
மாசிரமத் தோடு வெளியிடத்தில் வந்தேன்!
வெய்யில் கோரமடங்கி வருமட் டாக
விசனமற இங்கிருந்து களையும் தீர்த்துத்
துய்யதிருப் பரனருளால் சுகத்தி னோடு
துலங்கிப் பொலிந்திட்ட நகரில் செல்லுவேனே!

**(வீரகுமாரன் சபதம்)**

### *முத்தாரக்கவிஞர் ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை (1915-2004)*



கூத்துலகால் செகராசசிங்கம் என அறியப்பட்ட புலவர் தேவசாகயம்பிள்ளை, ஆசீர்வாதம் செல்லத்திரவியம் என்பவர்களுக்கு மகனாக 1915ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 10ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார்.

கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் கல்விகற்ற இவர், சம்பூரணத்தார் எனும் பேரனாரிடம் தமிழிலக்கண இலக்கியங்களைக் கேட்டறிந்தார். வாழ்க்கையின் அவதானிப்பு களைப் பகிர்ந்து கொள்ள அவாவுற்று தம் பாடலில் அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடித்துவைத்த புலவர், சரியான திசைப்படுத்தலோடு அவைகளை மக்களுக்குக் கொடுத்துள்ளார். வாழ்வின் பிற்பகுதியில் தான் இவரது கலைஞானம் கூத்துக்களில் பிரகாசிக்கத் தொடங்கியது. இவரது முதல் படைப்பாக பூதத்தம்பி கூத்து 1970ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறியது.

**மனோகரா (1986)** **குருமணி யோசப்வாஸ் (1988)**
**இம்மனுவல் (1955)** **சம்பூர்ண அரிச்சந்திரா (1993)**

என்பன புலவரால் படைக்கப்பட்ட சிறந்த கூத்துக்களுள்ளே சிலவாகும்.

இவரது ஆக்கங்கள் சீராகவும், செறிவாகவும், தமிழுக்குச் சிறப்புச் செய்வனவாகவும் அமைந்ததனால் வளர்பிறை நாடகமன்றம், பாஷையூர் அழகையா முத்தமிழ் அரங்கில், 1984 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 18ஆம் நாள் நிகழ்த்திய புலவர் கௌரவிப்பு விழாவில் மூதறிஞர் சொக்கனால் ‘‘முத்தாரக்கவிஞர்’’ என்ற விருதையும் பெற்றுக் கொண்டார்.

1994 ஆம் ஆண்டு இலங்கை இலக்கிய பேரவையால் ‘‘குருமணி யோசப்வாஸ்’’ சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. இவரது இம்மனுவல், குருமணி யோசப்வாஸ், சம்பூர்ண அரிச்சந்திரா என்ற கூத்துக்கள் நூலுருப் பெற்றுள்ளன. 1988 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 16ஆம் நாள் இவரது குருமணியோசவ்வாஸ் என்ற கூத்து முதன்முதலாக அரங்கேறியது. வாழ்வினின்று கிளைப்பது இலக்கியம் என்ற கருத்துக்கு வலுவூட்டுவதாகப் புலவரின் படைப்புக்கள் மிளிர்கின்றன.

சத்தியத்திற்குச் சமாதி கட்டும்படி அரிச்சந்திரனிடம் விசுவாமித்திரர் கேட்பதை உள்ளூர வெளிக்காட்டும், இவரது ‘‘சம்பூரண அரிச்சந்திரா’’ நல்ல கூத்து என்பதைவிட நயங்கள் கனிந்தொழுகும் பாடல்களின் தொகுப்பு என்றால் பொய்யில்லை.


இலைமறைகாயாயிருந்து, இனிமைததும்பும் நாட்டுக் கூத்துக்களைத் தந்த புலவர் 2004ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 25ஆம்நாள் மீளாத்துயிலில ஆழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிச்சந்திரா கூத்தில் இவரது அருமையான பாடலிது!

கரவடர் சோரர் ஒட்டார் காசிமாபதியை ஆளும் புரவலர்
புரையே நான் போகும் போதுஅங்கு ஒரு உயிரற்ற
சிறுவன் தன்னின் உடலது கிடக்கக் கண்டேன்!
அருகினில் சென்று சற்று அதனைநான் நோக்கும் போது
செருவியே என்னைப் பிடித்துச் சிக்கெனக் கொண்டு வந்தார்.
உரியதை உரைத்து விட்டேன்! உண்மையை அறியுமையா!

(அரிச்சந்திரா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. கூத்துக்களை ஆடும் மேடைக்கோலங்கள்!

குதி என்ற வினையடியிலிருந்து பெறப்படுவதனால் குதித்தாடுவது தான் கூத்து என்று பொருள் கொள்ளவேண்டும். நான் ஆரம்பத்திலே தொட்டுக் காட்டியது போல, கோயில் விழாக்களிலே தான் கூத்து கருவாகி உருக்கொள்கிறது.

தாலாட்டு, அம்பா எனப்படும் கப்பற்பாட்டு, அரிவு வெட்டுப்பாடல், கும்மி, கோலாட்டம் முதலான நாட்டாரியல்களிலே தோய்ந்திருந்த மக்கள், தமது ஓய்வு நேரங்களில் ஆடிப் பாடிய போது தான் கூத்து நம்மிடையே முகையவிழ்ந்து முகங்காட்டியது. பாஷையூர் கோயிலுக்கு முன்புறமுள்ள ''மெத்தைக் கட்டு" எனப்படும் நிலை யத்தைச் சுற்றிக் காணப்படும் பரந்த வளாகத்திலே தான் மக்கள் முதன் முதலாகக் கூத்தினை அரங்கேற்றிக் குதூகலித்தார்கள்.

கோயிலைச் சூழுவுள்ள மனிதக் குழுமம், மீசாம் என்ற சொல்லால் குறிக்கப்படும் அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் பங்குக்குருவின் அநுசரணையுடன் மறைவளர்ச்சியை மையப்பொருளாகக் கொண்டு சிறிய கூத்துக்கள் மேடையேறும்.

கூத்தின் ஆதிக்காலம் என்றிருந்த அந்த நாளில் தெருவின் மக்கியை எடுத்து நடிகர்கள் முகப்பூச்சாகப் பூசுவர். ஆடையணியைப் பற்றி அதிகம் கரிசனை கொள்ளாவிட்டாலும் நீட்டாடைகளை அணிவதில்தான் அவர்கள் பிரியமிருந்தது. திரைச்சீலையை விரித்து ஒருபக்கம் ஒருவரும் மறுபக்கம் இன்னொருவருமாகத் தாங்கிப் பிடித்து, கூத்துத் தொடங்குவதற்கு ஆயத்தமாக நடிகர் வந்து அரங்கில் நின்றவுடன் திரைச்சீலையை இழுத்து ஒதுக்குவார்கள்.

அண்ணாவியாரின் காப்புப் பாடல் முடிவுற்றதும், மேடையில் நடிகர்கள் பாடிஆடுவதை இமைகொட்டாமலும், நேரம் ஊர்ந்து செல்வதைக் கணக்கெடுக்காமலும் மக்கள் பார்த்துப் பரவச மடைவர். இதற்கு நட்டுவாங்கம் செய்வதற்கென ஒருவரும், தாளம் போடுவதெற்கென மற்றொருவரும் மேடையில் காணப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபமாக ஒளி தந்து, புதிய கலைவாழ்வினை நாம் காணத் திசைகாட்டிய கூத்துக்களை மறக்கவே முடியாது. தாழ்வாரத்திலே தவழ்ந்து விளையாடிய கூத்து, தத்தி நடைபோட்ட காலத்தை எண்ணிப்பார்த்தால் மனம் களிக்கும்.

### *சுழலும் வட்டமேடை*

கோயிலுக்கு முன்னால் அமைந்துள்ள மேடையில், சிறிய கலை நிகழ்வுகளைப் பார்த்து மகிழ்ந்த மக்கள் திருப்பந்தரும் நிகழ்வுகளுக்கான மாற்றமொன்றுக்குக் காத்திருந்தனர். அவர்களின் விருப்பத்தைப் பிரதிபலிப்பது போல் நாளடைவில் சூழலும் மேடையில் கூத்து நடை பெறலாயிற்று.

வட்டமேடைக்கு முன்னால் சுவைஞர்கள் அமர்ந்திருப்பர். கூத்து தொடங்கியதும், கதைநிகழிடம் அரசமாளிகையொன்றால் அங்கே மாளிகை முன்னுக்குத் தென்படும். பிற்பகுதியில் காட்டையும், மலையையும் காட்சிப்படுத்தியிருப்பர். மேடையின் கீழுள்ள நடுவச்சில் பனைமரச் சிலாகைகளைப் பொருத்தி அதன்மீது பலகைகளைப் பரப்பிக் கயிற்றுப்பாயை விரித்துக் கூத்தாளிகள் ஏறிநின்று பாடியாடுவர். வட்டமேடையின் கீழ்ப்பகுதி தெரியாதவாறு முன்னால் திரைச்சீலை கொண்டு மூடிக்கட்டிவிடுவர்.

அப்படிச்செய்தால் தான், உள்ளேயிருந்து மேடையை இயக்கிச் சுற்றவைக்கும் ஆட்களை வெளியில் தெரியாது மறைத்து விடலாம். இப்படிப்பட்ட காட்சியமைப்பால் நேரமும் மீதப்படுத்தப்படும். தேங்காய் எண்ணெயை ஊற்றி எரியவைக்கும் தீப்பந்தங்களால் இருளைத்துரத்தி வெளிச்சமேற்றுவர். இப்படிப்பட்ட வெளிச்சமற்ற அக்காலத்திலே கூட, கூத்து உள்ளிட்ட நாட்டாரியல் கலைகளை அளிக்கை செய்து மக்கள் பார்த்துச் சுவைத்து மெய்மறந்திருக்கின்றனர்.

தீப்பந்தங்கள் அணைந்து போகாமலிருப்பதற்கு அவ்வப்போது எண்ணெய் ஊற்றுவதற்கென ஒருவர் கூத்துக்குழுவினரால் நியமிக்கப்பட்டிருப்பார். ஒரு கூத்துக்கு ஒத்திகை (பழக்கம்) தொட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றம் (சோடினை) ஈறாக ஏற்படும் செலவுகளை எல்லாம் கூத்தை நடிப்பவர்களும், நடாத்துபவர்களுமே பொறுப்பாயிருந்து கவனிப்பர் என்பது நம்மில் பலருக்குத் தெரியாது.

வாழ்க்கையில் சந்திக்கின்ற தில்லுமுல்லுகளால் மனிதநெஞ்சம் கடினப்பட்டிருக்கின்ற வேளையிலும் பழந்தமிழ்க் கூத்துக்கள், பாறையினை ஊடுருவும் வேராக மாறி மக்களின் சுவையுணர்வை வளர்த்து, வளம்படுத்துவதோடு மட்டும் அல்லாமல் மனிதவாழ்வில் வசந்தம் வீசும் நாட்களையும் வெளிக்கொணர்ந்துள்ளதென்பது மறுக்கமுடியாத உண்மை. கூத்தாளிகளின் திறமையை வளர்க்கப் போடப்பட்ட தீனியாகவும் அரங்க அளிக்கைகள் விளங்கிநின்றன.

*படச்சட்டமேடை*

கூத்துக்களின் போக்கையும், நோக்கையும் காலத்தின் சுழற்சி பாதித்தது என்றே சொல்லவேண்டும். கூத்துக்களை வட்டமேடையில் கண்டுவந்த பாஷையூர், 1911ஆம் ஆண்டு தொட்டு சதுர வடிவங்கொண்ட படச்சட்ட மேடையில் கண்டுகளித்தது. படச்சட்ட மேடையில் கூத்துக்களை அரங்கேற்றுவதனால் பல நல்ல விளைவுகள் அறுவடை செய்யப்பட்டன.

நான்கு மூலைக்கும் பெரிய தடிகளைக் கிடங்கு போட்டுத் தரையிலே நட்டு, பக்கத்திற்கொன்றாக இடையிடையே வேறு தடிகளையும் கிடங்கு போட்டுதரையிலே நட்டுவைப்பர். மேலே தடிகளையேற்றிப் பந்தல் உருவில் கயிற்றால் கட்டிப் பெரிய சீலைகளைக் கொண்டு மேடையை மறைத்துத் தொங்கவிடுவர்.

நட்டுவைத்த தென்னங்குற்றிகளினூடே பனைச்சிலாகைகளைப் பொருத்தி, அதன் மேலே பலகைகளைப் பரப்பிச் செய்யப்பட்ட மேடையின் முன்புறமாக வண்ணங்கொண்ட ஒரு பெரிய சீலையையும், பின்புறம் வேறொரு சீலையையும் கட்டித்தொங்க விட்டு அந்தப் படச்சட்ட மேடையிலே குழுவினர் தமது நிகழ்வுகளை ஆற்றுப்படுத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படச்சட்டமேடை அறிமுகமானதனால் காட்சிப்படிமங்கள் நேர்த்தியாகவும், சுவைஞர்களின் பார்வையைக் குவியப்படுத்து வதாகவும், கூத்துக் குழுவினரின் பணிகளை மட்டுப்படுத்து வதாகவும் அமைந்தது கூத்துக் கலையில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியென்றே கொள்ள வேண்டும். நாளடைவில் வட்டக்களரி, சதுரக்களரியாக மாறியதுதான் இந்த வளர்ச்சிக்குக் காரணியாகச் சொல்லப்படுகின்றது. கூத்துக்களைப் படச்சட்ட மேடையில் அரங்கேற்றுவதனால் சுவைஞர்களின் பார்வை சிந்தாமல் சிதறாமல் ஒரேயிடத்தில் குவிவதால் அவர்களின் இரசஞான உணர்வுகளுக்கு ஊறுவிளைவிக்காமல் வளர்ச்சிப் பாதையிலே இட்டுச்செல்ல ஏதுவாகின்றது. மேடை அலங்கரிப்புக்கும், காட்சியமைப்புகளுக்கும் செலவிடும் நேரத்தைச் சுருக்கி ஒப்பனைக்குக் கூடுதலான நேரத்தைச் செலவிடவும் இம்மாற்றம் வழிகோலியது.

ஒப்பயையின் பரப்பு விரிவடைந்த வேளையிலே ஒவ்வொரு கூத்தாளியும் தன்னை இனப்படுத்துவதற்காக பறவையின் இறகுகள், வண்ணச் சங்குகள், வேலைப்பாட்டுடன் கூடிய காலணிகள் முதலியவை அரங்கிலே வந்து தலைகாட்டின.

இந்த வேளையிலே கூத்திலே, ஆடும் அரங்கிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு மாற்றம் நிகழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது. கூத்தாளிகள் அணியும் சட்டைகளும், மேலாடைகளும், தொங்கு சீலைகளும் இலகுவானதாகவும், பாரங்குறைந்த னவாகவும் இருந்தன. கத்தி, உறைவாள், குத்தீட்டி என்பனவும் கூத்தரங்கில் பயன்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. அண்ணாவிமார்களும் அரங்குகளும்

தேங்கிக்கிடந்த நாட்டுக்கூத்துக் குட்டையைப் புதுப்புனலாகப் பெருகியோடச் செய்ததில் புலவர்களினதும், அண்ணாவி மார்களினதும், கூத்தாளிகளினதும் மங்காத பங்களிப்பினைக் கூத்து வரலாறு மறக்காமல் சொல்லி நிற்கின்றது.

கண்ணுறங்கும் பொழுதறியாமல் கூத்து, கூத்து என்று கடைசி மூச்சு விட்டு மண்ணுறங்கும்வரை உழைத்த அந்தப் பெருமக் களாலே தான் இன்று கூத்து நம்மனங்களில் கொலுவிருக்கின்றது. வருங்கால சந்ததிக் கென்றே இந்த வளமான நாட்டாரியல் கலையை, ஒப்படைத்துச் சென்ற விற்பன்னர்களின் கொடைச் சிறப்புக்கு மழையையும் ஈடாகக் கூறமுடியாது.

கூத்துக்களைப் பார்த்துச் சுவைக்கும் போது அந்தக் கலையில் மூத்தோர்களின் எவரையும் கவர்ந்திழுக்கும் சிரிப்பும், எடுப்பான தோற்றமும், இனிமையான பாடலும் நம் மனக்கண்ணில் வந்து போகின்றன. இவர்கள் செய்த காத்திரமான பணியின் கனதியை எந்தப் புலவருலகமும், இலக்கிய மரபும் மறுக்காது. பாஷையூர் மண்ணிலே பிறந்து வளர்ந்து, இக்கலைக்காகவே வாழ்ந்து மடிந்த மூத்த அண்ணாவிமார்களை இனங்கண்டு கொள்வது பொருத்த முடையதும், நமது எதிர்கால இளவல்களுக்குப் பயனுள்ள தொண்டாக இருக்குமெனவும் நினைக்கின்றேன். மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலங்கு மனத்தினரின், விபரீதச் செயல்களுக்குக் கூத்தைப் பலியாக்கி விடாமல் காத்து எமக்குக் கையளித்த பெருமக்களை நினைவு கூருவது ஒரு போதும் தவறாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அண்ணாவியார் பேதுரு சவிரிமுத்து (1886 - 1946)***



மண்பற்று மனிதனுக்கு உயிர்மூச்சுப் போன்றது. இப்படிப்பட்ட மண்பற்றுக் கொண்ட மூத்தோர் வாழ்ந்து மடிந்த, பாஷையூர் மண்ணில் நாட்டுக்கூத்துக்காகவே தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தவர் தான் அண்ணாவியார் சவிரிமுத்து. பேதுரு மதலேனா என்பவர்களுக்கு மகனாக 1886 ஆம் ஆண்டு பிறந்த இவரை அண்ணாவி முத்தர் என்று மக்கள் செல்லமாக அழைப்பர்.

அரையிலே நாலுமுழவேட்டியும், காதிலே கடுக்கனும், தோளிலே சால்வையும், தலையில் வாரிச்சொருகிய குடுமியும், சிரைத்த மீசையும் அவரது முழுத்தோற்றத்தை நம்முன் கொண்டு வரும். கோயில்களில் திரைவிருத்தங்கள் பாடுவதிலும், திருவிழாக் காலங்களில் நடைசாரி பாடுவதிலும் சமர்த்தரான இவர் மிருதங்கம் வாசிப்பதிலும் வல்லவர் என்பதைக் கூறித்தானாகவேண்டும்.

மிருதங்கத்தைக் கையிலெடுத்து வாசிக்கும் வேளை உணர்ச்சிவசப்பட்டால், சொருகி இருந்த தலைக்குடுமி குலைந்து தொங்குவது கூடத்தெரியாமல் இலயித்துப்போய்விடுவார்.

பப்பரவாகன், யூதகுமாரன், வெடியரசன் என்ற கூத்துக்களைப் பாஷையூரிலே நெறியாள்கை செய்தும் மேடையேற்றியுமுள்ளார். 1943ஆம் ஆண்டு ஞானரூபன் கூத்தை நெறியாள்கை செய்து அரங்கேற்றினார். மண்ணித்தலை, மண்டைக்கல்லாறு முதலிய இடங்களில் நடைபெறும் திருவிழாக்காலத்தையொட்டி 1936ஆம் ஆண்டு செபஸ்தியார் கூத்தையும், 1938ஆம் ஆண்டு செனகப்பு கூத்தையும் நெறிப்படுத்தி அரங்கேற்றினார்.

நோயினாலோ, வேறு வசதியீனங்களாலோ கூத்தாளி அரங்கேற்றத்தில் கலந்துகொள்ள முடியாவிட்டால், உடனே அந்தப் பாத்திரத்தை ஏற்றுப் பாடி நடிக்கும் அசகாயசூரத்தனம் இவரோடு கூடப் பிறந்ததென்பது சுவைஞர்களுக்கு நன்கு தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக் கலைக்கு மாறாத வளமும், மங்காத வாழ்வும் தந்த புகழ்பூத்த அண்ணாவியார் முத்தருக்கு நாட்டுக்கூத்துலகம் மறக்காமல் என்றைக்குமே நன்றிபாராட்டும்.

### *அண்ணாவியார் தம்பு அவுர்தம் (1876 - 1953)*



"நாட்டுக்கூத்து எங்கடை தமிழ்க்கூத்தடா" என்ற ஒலிக்குச் சொந்தக்காரன் அண்ணாவியார் அவுர்தம். பாஷையூரில் 1876ஆம் ஆண்டு பிறந்து தன் ஆரம்பக்கல்வியை அங்கு கற்ற இவர், நாளடைவில் நாட்டுக்கூத்தில் நீங்காத பற்றுக் கொண்டவராயிருந்தார்.

பாஷையூரில் 1947 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட ஞானரூபன் கூத்தில் இவரின் கைவண்ணம் நன்கு பளிச்சிட்டது. எங்கெங்கு கூத்துக்கள் நடைபெற்றாலும் அங்கங்கு இவரின் பிரசன்னத்தை எல்லோரும் காணலாம். பாஷையூர் அந்தோனியார் கோயில் வளாகததிலே 1952 ஆம் ஆண்டு தைத்திங்கள் புலவர் நீ.மிக்கோர்சிங்கம் படைத்த கண்டி அரசன் கூத்தின் முதல் ஒத்திகை நடைபெற்றது. அவ்வேளை அண்ணாவியார் ஞானப்பு மடுத்தீஸ், அண்ணாவியார் லோப்பு வஸ்தியாம்பிள்ளை என்பவர்களின் முன்னிலையில் பழம்பெரும் கூத்தாளிகளான பெரியதம்பி அருளானந்தம், முத்தையா பிலிப் என்பவர்களை இவர் நெறிப்படுத்தியதை சிறுவனாயிருந்தபோதும் கூட அதைக்கூர்ந்து அவதானித்ததை என்னால் மறக்க முடியவில்லை.

அந்தோனியார், கிறிஸ்தோப்பர் முதலிய கூத்துக்களிலும் இவரது கலைஞானம் முதிர்ந்த பங்களிப்பினைப் பார்க்கமுடிகின்றது.

இவரைப் போன்றோர் தொட்டுவளர்த்து நமக்கெனவிட்டுச்சென்ற இக்கலையைப் பேணுவது நமது பெருங்கடமையல்லவா. இப்படிப்பட்டவர்களின் பிரிவு எப்படிப்பட்டவர்களையும் காலமெல்லாம் அழவைக்கும். இதனால் கலங்கி நாம் வாடுகின்றோம். கண்ணீரில் அவர்களைத் தேடுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அண்ணாவியார் ஞானப்பு மடுத்தீஸ் (1890 - 1961)***

பாஷையூர் கூத்துக்கள் கலையுலக அங்கீகாரத்தைப் பெறமுன்னின்று அயராது உழைத்தவர்தான் அண்ணாவியார் மடுத்தீஸ். இவர் வயித்திஞானப்பு ஆச்சிமுத்து என்பவர் களுக்கு மகனாக 1890ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார்.



இவர் தமது கல்வியை இடையிலே நிறுத்திக் கொண்டாலும், தந்தையிடம் பெற்ற கூத்துஞானம் நெஞ்சில் பதிந்து கூத்து வாசல் இவருக்குத் திறக்கப்பட்டது. 20ஆம் வயதிலே இவர் மிருதங்கம் வாசிப்பதிலும் சிறந்து விளங்கினார்.

பரந்த நெற்றி, அகன்று விரிந்த கண்கள், பாடலில் இழையோடும் குரல்வளம் இவையெல்லாம் மனைவி செல்லாச்சியோடு இவரைக் கூத்தரங்கிற்கு அறிமுகஞ்செய்தன. 25ஆம் வயதில் தன்னை முற்று முழுதாகக் கூத்துத்துறையில் நுழைத்துக் கொண்ட இவர் பாஷையூரில் அரங்கேறிய பல கூத்துக்களை நட்டுவாங்கம் செய்த பெருமைக்குரியவர்.

நிறைகுடம் தளும்பாது என்னும் முதுமொழிக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த இவர் ஞானரூபன், கிறிஸ்தோப்பர், அந்தோனியார், கண்டியரசன், பூதத்தம்பி, ஞானசௌந்தரி, செபஸ்தியார், புனிதவதி என்ற படைப்புகளுக்கு வலக்கரமாக இருந்து வழிகாட்டியவர்.

இவரது விரல்கள் மிருதங்கத்தில் விளையாடத் தொடங்கி விட்டால் கவலையை மறந்து கேட்டுக்கொண்டிருக்கலாம். 1947 ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேற்றப்பட்ட ஞானரூபன் கூத்திலும், 1952ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய கண்டி அரசன் கூத்திலும், 1954ஆம் ஆண்டு மண்ணித்தலையில் அரங்கேறிய ஞானசௌந்தரி கூத்திலும் இவரது நெறியாள்கையும், நாடு போற்றும் கலைஞானமும் சுவைஞர்களிடையே சிலாகிப்புடன் பேசப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளசுத்தியோடு ஒருதருவைப் பாடுந்திறனில் அவருக்கு நிகர் அவரே! கூத்தைத் தலைதடவிக் காலமெல்லாம் வளர்த்துவிட்ட இந்தத் தலைமகனின் பிரிவால் ஏற்பட்ட இடைவெளியை எவராலும் நிரப்பமுடியாது.

### *அண்ணாவியார் லோப்பு வஸ்தியாம்பிள்ளை (1894 - 1963)*

காதிலே கடுக்கன், கழுத்தைச்சுற்றியிருக்கும் சரிகைச்சால்வை, அரையிலே பட்டுவேட்டி, அகன்ற நெற்றிப்பரப்பு இவைகளின் மொத்த உருவந்தான் அண்ணாவியார் வஸ்தியாம்பிள்ளை. லோப்பையா அன்னமரியை என்பவர்களுக்கு மகனாக 1894ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார்.



இடைநிலைக்கல்வியை அயலூர் பாடசாலையிலே பெற்றுக் கொண்ட இவர் வழிப்பாடலான நடைசாரி, வாயாரப்பாடும் திரைவிருத்தங்கள், அடிமனத்தை வருடும் ஒப்பாரி, அகங்குளிரவைக்கும் அம்மானைப் பாடல்கள் என்பவற்றை ஓசைநயங்குன்றாமல் பாடுவதில் வல்லவராயிருந்தார்.

முன்னோர்கள் பாடிச்சென்ற, பொன்னிகரான கூத்துப் பாடல்களைக் கேட்ட இவரது மனம் மகிழ்ச்சியினால் பூத்து மலர்ந்தது. ஞானரூபன் கூத்துப் பாடல்களைக் கேட்கும் போதெல்லாம் முக்கனிச்சாற்றுடன் சர்க்கரையைக் கலந்து வாயில் விட்ட நிலையை இவர் அநுபவிப்பார். நண்டு கொழுத்தால் வளைக்குள் இராது என்பது போல நல்ல கூத்துக்களை அரங்கேற்ற முன்னின்று உழைத்தார். சவால்களை எல்லாம் துச்சமாக மதித்துத் தூக்கி எறிந்துவிட்டுக் கூத்துக் கலையை வளர்க்க வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையுடன் துறையறிந்து களமிறங்கினார்.

1946ஆம் ஆண்டு ஞானசௌந்தரி கூத்தையும், 1947ஆம் ஆண்டு ஞானரூபன் கூத்தையும், 1952ஆம் ஆண்டு கண்டியரசன் கூத்தையும், 1954ஆம் ஆண்டு கிறிஸ்தோப்பர் கூத்தையும் பாஷையூர், மண்ணித்தலை போன்ற இடங்களில் அண்ணாவியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பு மடுத்தீஸ் துணையுடன் அரங்கேற்றினார். வெடியரசன் கூத்தில் மீகாமன் என்ற பாத்திரத்தில் சிறப்பாகப் பாடி நடித்த வஸ்தியாம்பிள்ளை தானொரு சுவைஞரைக் கவரும் கூத்தாளி என்பதையும் நிரூபித்தார்.

பாஷையூர் மக்களின் யாத்திரை ஸ்தலமான கிளாலியில் 1951ஆம் ஆண்டு நடந்தேறிய ஒரு நிகழ்வு மனதில் ஊசலாடுகின்றது. எழுதுமட்டுவாளைச் சேர்ந்த அண்ணாவியார் பேதுரு, சந்தியோகுமையோர் தேர்ப்பவனியின் போது நடைசாரிப்பாடலுக்கு மிருதங்கம் வாசித்தார். பாஷையூரைச் சேர்ந்த ஒருவர் பாடும் வேளையில் அவரது மிருதங்கம் தாளத்தை மீறி வாசிக்கப்பட்டது. இதைக்கண்ணுற்ற வஸ்தியாம்பிள்ளை,

"ஓடிவா சனரே! - சந்தியோகு பதத்தைத் தேடிவாசனரே!" என்று உருட்டலுடன் பாடி அவரைத் திணறடித்தார் என்பது பலருக்குத தெரியாது.

கூத்துக்கள் எல்லாம் ஆத்தாதவர்களின் செயல் என்ற மேட்டுக் குடியினரின் மூடநம்பிக்கைகளை எல்லாம் முளையிலே கிள்ளி எறிந்து விட்டுக் கூத்தை வாழவைத்த வஸ்தியாம்பிள்ளையைத் தமிழ்கூத்துலகம் மறந்துவிட முடியாது.

### *அண்ணாவியார் தீயோ முடியப்பு (1907 - 1978)*



மயிர் நிறைந்த சடை, மனோரம்மியமான தோற்றம், சுருதிவிட்டுப் பிசகாத குரல்வளம், சொக்கவைக்கும் நடிப்பு இவைகளெல்லாம் இராசேந்திரம் என்று செல்லமாக அழைக்கப்படும் இவரை அலங்கரித்தன என்றே சொல்ல வேண்டும். இவர் தீயோ மேரிப்பிள்ளை என்பவர்களுக்கு மகனாக 1907 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 17ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் தமது, ஆரம்பக் கல்வியை கற்ற இவர் தொடர்ந்து யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையூரில் வாழ்ந்த மூத்த கலைஞர்கள், கூத்துத் துறைக்கு ஆற்றிய தொண்டினால் கவரப்பட்ட இவர் தமது 25ஆம் வயதில் கூத்துத் துறையினுள்ளே நுழைந்தார். 1936 ஆம் ஆண்டில் பாஷையூரில் அந்தோனியார் கூத்தை மேடையேற்றிய இவர், அக்கூத்தை 1937ஆம் ஆண்டு வவுனியா றம்பைக்குளத்திலும் அரங்கேற்றினார் என்பதை அறியமுடிகின்றது.

1946ஆம் ஆண்டில் பாஷையூரில் அரங்கேறிய சவேரியார் கூத்துத்தான் இவரது புகழுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்ததெனலாம். தொடர்ந்து 1947ஆம் ஆண்டு ஞானரூபன் கூத்தையும், 1960ஆம் ஆண்டு கனகசபை கூத்தையும் நெறியாள்கை செய்து பாஷையூரில் மேடையேற்றினார். 1952 ஆம் ஆண்டு பாஷையூரில் முதன்முதலாக அரங்கேறிய கண்டியரசன் கூத்தின், ஆரம்பக் காட்சியில் இவர் கண்ணுச்சாமியாகப் பாடி நடித்தது இன்னும் மனக்கண்ணிலிருந்து மறையவேயில்லை. கூத்தென்றால் முகத்தைச் சுழித்தபடி கெக்கலிகொட்டி ஏளனத்தால் கொக்கரிக்கின்ற சில தற்குறிகளின் அட்டகாசச் சவால்களுக்கு முகங்கொடுத்த, இவரது இடைவிடாத முயற்சியினாலும், இரவு பகல் பாராத கடின உழைப்பினாலும் கூத்துத்துறைக்கு வாழ்வளித்து நின்ற "**அண்ணாவி அப்பாவை**" மறந்துவிடுவதற்கில்லை.

நாலடி, எட்டு, வீசாணம் என்ற ஆட்டக்கூத்தின் உருப்படிகளை கூத்தாளிகளுக்கு அறிமுகஞ் செய்ததோடு அமையாமல் ஊட்டியும் வைத்த இவர், கூத்துலகமும், சுவைஞர் குழுமமும் கண்ணீரில் நனைய 1978ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 5ஆம் நாள் மண்ணுலகைப் பிரிந்தார்.

### ***அண்ணாவியார் ஞானப்பு வஸ்தியாம்பிள்ளை (1908 - 1979)***



குரலாலும், நடிப்பாலும் கூத்துக்கலைக்கே பெருமை தேடித்தந்த வஸ்தியாம்பிள்ளை, வயித்தி ஞானப்பு ஆச்சிமுத்து என்பவர்களுக்கு மகனாக 1908ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் ஆரம்பக்கல்வியை பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இவர், அண்ணனும், அண்ணாவியாருமாகிய ஞானப்பு மடுத்தீஸ் வழிகாட்டக் கூத்துத் துறையினுள்ளே நுழைந்தார்.

புலவர் நீ.மிக்கோர்சிங்கம் ஆக்கியதும், 1933ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறியதுமான சத்தியவந்தன் கூத்தில் சத்தியவந்தனாகப் பாடி அற்புதமாக நடித்ததினால் ஒரு முதிர்ந்த கூத்தாளி தான் என்பதைக் கூத்துச் சரிதத்தில் பொறித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து 1940 ஆம் ஆண்டு கிறிஸ்தோப்பர் கூத்திலும், 1946ஆம் ஆண்டு சவேரியார் கூத்திலும், 1947ஆம் ஆண்டு ஞானரூபன் கூத்திலும், 1960ஆம் ஆண்டு கனகசபை கூத்திலும், 1961ஆம் ஆண்டு பூதத்தம்பி கூத்திலும் சொல்லமுடியாத சிறப்போடு பாடி நடித்து அனைவரினதும் பாராட்டைப் பெற்றார்.

கேட்டவர்கள் மயங்கத் தாழிசை பாடுவதில் வல்லவரான இவருக்கு ''தாழிசை வஸ்தியாம்பிள்ளை'' என்ற பெயரைச் சுவைஞருலகம் சூட்டி மகிழ்ந்தது. கூத்தில் தேக்க நிலை கண்டபோது அதனை எடுத்தெறிந்து ஆக்கவழி செல்வதற்கு அரியபல முயற்சிகளை மேற்கொண்ட இவர், இளைய கூத்தாளிகளைப் பொறுக்கியெடுத்து 1955ஆம் ஆண்டு ஞானசௌந்தரி கூத்தையும், 1956ஆம் ஆண்டு புனிதவதி கூத்தையும் நெறியாள்கை செய்து அரங்கேற்றி அண்ணாவியார் என்ற முத்திரையையும் குத்திக் கொண்டார்.

நடிப்பாலும், குரலாலும், நல்ல கலைப்பணிகளாலும் கூத்து வித்துக்களை நம் மனப்புலத்தில் வீசி விதைத்து விட்டுச் சென்ற வஸ்தியாம்பிள்ளை 1979ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 16ஆம் நாள் இவ்வுலகை நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. ஊர்களைக் கவர்ந்திழுக்கும் கூத்து

வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதில் கலைகள் சிறப்பான இடத்தைப் பிடிக்கின்றன. விண்ணில் சாதனைபுரிந்து வெற்றிக்கொடி நாட்டிய மனிதன், மண்ணில் வாழ்ந்தாலும் கலையின் மகுடிக்கு நாகம்போல் மயங்கித்தானாகவேண்டும். வாழ்வுச் செடிக்கு வளமூட்டும் நீர் கலைகள்; வாழ்வின் நினைவுகளுக்கெல்லாம் வசந்தத்தைத் தெளிப்பது கலைகள்; வாழ்வின் கனவுகளுக்குக் கோலமிடுவது கலைகள்.

கலைகளுக்குள்ளே ஈழத்தமிழர் காலங் காலமாகப் பேணிவரும் நாட்டுக் கூத்து குறிப்பிடத்தக்கதொன்றாகும். பண்பட்ட கலையாகவும், பயனுள்ள பொழுதுபோக்காகவும் விளங்குகின்ற கூத்தை நம்மவர்கள் மட்டுமல்ல நாலாதிசைகளிலுமுள்ள மக்களும் ஒன்றுகூடிப் பார்த்துச் சுவைப்பர். அத்தனை சுவையுடன் எத்தனை கூத்துக்கள் பாஷையூரில் மேடையேறினாலும், பலாப்பழத்தைச்சுற்றி மொய்க்கும் ஈக்கள் போலக் கூடிப்பார்த்து இன்புறுவர்.

கொழும்புத்துறை, அரியாலை, குருநகர், நாவாந்துறை, கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை, சுண்டுக்குளி, பூநகரி, கௌதாரிமுனை, வட்டுக்கோட்டை, ஊர்காவற்துறை, மாதகல், மயிலிட்டி, செம்பியன்பற்று, தாளையடி, குடத்தனை முதலிய இடங்களிலிருந்து கூத்தைக் கண்டு களிக்க, மடைதிறந்த வெள்ளம் போல மக்கள் படையெடுத்து வருவர். வடமராட்சி, தென்மராட்சிப் பிரிவுகளிலுமிருந்தும் எறும்புபோல வரிசைகட்டி மக்கள் பாஷையூருக்கு வந்து அரங்க நிகழ்வைப் பார்த்து மகிழ்வர்.

கைதடியைச் சேர்ந்த கதிரவேலு தம்பையா என்பவர் பாஷையூர் கூத்துக்களின் நீண்ட நாளைய சுவைஞர். எழுபத்தாறு வயதான அவர், பாஷையூர் கூத்துக்களைப்பற்றி என்னிடம் பேசியபோது, ''நான் இருபது வயது தொடக்கம் பாஷையூர் கூத்துக்களைப் பார்த்து வருகின்றேன். எத்தனையோ அரங்குகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளமும், பாட்டும் பச்சைமண்ணும் சுட்ட மண்ணும்போல ஒட்டாமலே போய்விடுகின்றன. ஆனால் பாஷையூர் கூத்தாளிகளின் பாட்டும், இசையும், தாளத்தின் ஊட்டமும் செவிகளுக்கு விருந்தாகின்றன. ஞானரூபன், கண்டியரசன், ஞானசௌந்தரி என்ற கூத்துக்களின் பாடல்களை எண்ணிப்பார்த்தால் நினைவுகள் இனிக்கின்றன" என்றார்.

ஊர்காவற்துறையைச் சேர்ந்த சுப்பு மார்க்கண்டு என்பவர் எழுபது வயதான ஒரு கூத்தபிமானி. அவர் பாஷையூர் கூத்துக்களைப்பற்றி சொல்லும போது, "நான் கட்டுச்சோற்றுடன் வந்து இங்கு மேடையேறும் கூத்துக்களைக் கண்ணாரக்கண்டு மகிழ்ந்துள்ளேன். நானும் ஒரு கூத்தாளியாக இருந்தபோதும் பாஷையூரில் மேடையேறிய கிறிஸ்தோப்பர், செபஸ்தியார், புனிதவதி, கற்பகமாலா போன்ற கூத்துக்களில் பங்கேற்ற நடிகர்களையும், அவர்களது குரல்வளத்தையும் கண்டு மகிழ்ச்சி கொண்டிருக்கின்றேன். கூத்து வரலாற்றில் பாஷையூருக்கு ஒரு தனியிடம் உண்டு" என்றார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தர் மயில்வாகனம் என்பவர் ஒரு முதிர்ந்த கூத்துச்சுவைஞர். எழுபத்தைந்து வயதுள்ள அவருக்குப் பாஷையூர் கூத்தென்றால் முக்கனிச்சாறு பருகியதைப்போல இனிக்கும். அவர் ஒருதடவை என்னைச் சந்தித்த போது, "பாஷையூரில் மேடையேறும் கூத்துக்களை நான் பார்த்து ரசித்திருக்கிறேன். அவைகளைச் சாதாரண அரங்க நிகழ்வுகள் என்பதிலும் பார்க்கக் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் கலைப்படைப்புகள் என்றே சொல்லவேண்டும். கனகசபை, தேவசகாயம்பிள்ளை, கண்டி அரசன், ஞானசௌந்தரி என்ற கூத்துக்களைப் பார்த்துப் பாடல்களை என் காதுகளால் கேட்டுப் பரவசமடைந்திருக்கின்றேன். அந்த அரங்கேற்றங்களில் கலந்துகொண்ட கூத்தாளிகளின் நடிப்பையும், குரலினிமையையும் என்னசொல்லிப் பாராட்ட. நாட்டுக்கூத்துகளுக்குப் பாஷையூரால் நல்லதொரு எதிர்காலம் உண்டென்று நான் திடமாக நம்புகின்றேன்." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் கூத்து பழம்பெரும் தமிழ்க்கலையாக இருப்பது மட்டுமின்றி, தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்களை விரித்துச் சொல்வதாகவும் அமைந்துள்ளது. அருங்கலைக் கூறுகளைப் புரிந்து கொள்ள, சுவைஞர்களின் அவதானிப்புக்களைப் பகிர்ந்து கொள்ள இக்கூத்தரங்க நிகழ்வுகள் நமக்குப் பெருந்துணை புரிகின்றன என்பதில் பொய்யில்லை. பழங்காலத்துச சுவைஞர்களை மாத்திரம் கூத்துக்கள் கவர்ந்திழுக்கவில்லை; மாறாக இளைய கூட்டத்தினரையும் கூத்துக்கள் ஆகர்சிக்கத் தவறவில்லை.

## 08. பங்களிப்பும் பணக்கூத்தும்

இரண்டரை நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தாய் தன் குழந்தையைத் தாலாட்டி வளர்ப்பது போல், நாட்டுக்கூத்தைப் பேணிவளர்த்துவிட்ட பெருமை பாஷையூருக்கு உண்டு. ‘‘கூத்தாடுவதும் குண்டிநெளிப்பதுவும் ஆத்தாதவன் செயல்'' என்ற மேட்டுக்குடியினரின் நாட்டுவளப்பமறியாத் தவளைக் கூச்சலையும், தண்டோராப் பேச்சுக்களையும் ஏற்று சவால்களுக்கு முகங் கொடுத்து, அடிநிலைமாந்தர் ஆளாக்கிவைத்த அருங்கலைப் பொக்கிசம் நாட்டுக்கூத்து.

மீன்பிடித்துறையால் குறைந்த வருமானம் பெற்றாலும், தமக்குள்ளே ஒரு நிறைவான வாழ்க்கையைக் கண்டவர்கள் பாஷையூர் மக்கள். விடிபொழுதில் கடலுக்குச் சென்று பொழுது உச்சியில் ஏறுமுன் தொழிலை ஒடுக்கி வீடுவந்து சேருவர். பின்னுள்ள நேரம் முழுவதையும் நொந்துபோய்க் கிடக்கின்ற இந்தக் கலைக்கே செலவிட்டுத் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தனர். 1956ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். அயல் வீட்டில் நடந்ததும், நெஞ்சுக்கூட்டில் நின்று விறுவிறுப்பதுமான ஒரு நிகழ்வை உங்கள் முன் சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

‘‘இன்றைக்கு எப்பிடி? '' தொழிலால் வந்த கணவனிடம் மனைவி கேட்கின்றாள்.

‘‘பத்துரூபாய் விற்றது! '' இது கணவன் பதில்,

‘‘சரி குளிச்சுவிட்டு வாருங்க!'' மனைவி பெருமூச்சுடன் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சரப்பா ஒரு ஐஞ்சு ரூபாய் வேணும்"! குரலைக்கனைத்துக் கொள்கிறான் கணவன்.
"எதுக்கு? "
"கூத்துக்கு!"
"பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்கயில்ல கூப்பனுக்கு வேணும். மண்ணெண்ணெ.. !" பட்டியலை மனைவி நீட்டிக்கொண்டே போனாள்.
"கூத்துச் செலவுக்குக் குடுக்க வேணும்!" என்றபடியே வெளியில் சென்று விட்டான் கணவன்.

இந்த உரையாடலில் கலந்து கொண்டவர்கள் வேறுயாருமல்ல. கூத்துக்காகத தன்வாழ்நாளை அர்ப்பணித்த பெரியதம்பி அருளானந்தமும் அவர்மனைவி அருளம்மாவும்.

நாட்டுக்கூத்து வளரப் பங்களிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எந்தவிதமான இடர்களுக்கும் முகங்கொடுத்து, கண்ணுறங்காது கருமமாற்றுபவர்களாகத்தான் இருப்பர். எருமையையும், பசுவையும் ஒரு நுகத்தில் பூட்டி வண்டி இழுக்கவைக்கும் புதுமையை கூத்தரங்கில் தான் காணலாம்.

பசி மறந்து, உறக்கம் மறந்து, பொழுது மறந்து கூத்தே அவர்களின் வாழ்வோடு கலந்துவிட்ட உயிர்மூச்சாக இருந்தது. கூத்திற்காக வெளியால் சொல்லவும், வாய்க்குள் மெல்லவும் முடியாத எத்தனையோ துன்ப நெருடல்களைக் கூத்தாளிகள் சுமந்து வாழ்ந்திருக்கின்றார்கள். வாழ்வையும், கூத்தையும் பிரித்துப்பார்க்க முடியாத அளவுக்கு அக்கலையுடன் அவர்கள் இறுக்கமான பிணைப்பைக் கொண்டிருந்தனர்.

## பணக்கூத்து

கூத்து என்பது உன்னதமான கலையென்று சொல்வதிலும் கூத்தாளிகள் பலரின் கூட்டுமுயற்சி என்று சொல்வதுதான் மிகப் பொருத்தமாகும் என்று நினைக்கின்றேன். உதிரத்தை வியர்வையாகச் சிந்தித் தங்கள் உறவுகளின் வாழ்வுக்காக உடலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தி உழைத்தவர்கள், கூத்துக்கலையின் உயர்வுக்காகத் தங்களையே அர்ப்பணிக்கின்றார்கள் என்றால் இந்தத் தியாகத்தின் விலையென்ன? ஆக்கத்திறனைக் கலப்பையாக்கி, அயராத உழைப்பை எருவாக்கி, அற்புதமான கூத்துக்கலையைத் தாயக மண்ணில் பயிராக விளைத்த கர்மவீரர்களை என்ன சொல்லி, எப்படிப் பாராட்ட.

மேடையேற்றம் காணும் முன்னர் கூத்திற்குப் பல தடவை ஒத்திகை தரப்படுகின்றது; பொன்னுக்குப் புடமிடப்படுவது போல. ஊரே கூடிநிற்கும் ஒரு திறந்த வெளியில் தான் ஒத்திகை நடைபெறும். மாலைநேரத்தில் ஆரம்பிக்கும் ஒத்திகைக்கு இரவானதும் ஆரம்பகாலங்களில் தீப்பந்தமும் பின்னர் பெற்றோல் மக்சும் கைகொடுத்தது. நடிகர்கள், நடத்துபவர்கள், அண்ணாவியார் எல்லோருமே அவ்விடத்தில் சமூகமாயிருக்கக் கூட்டமாக மக்கள் கூடிவிடுவர்.

அண்ணாவியார் காப்புப் பாடலைப் பாடிமுடித்ததும் கூத்துக் கதை நகரத்தொடங்கும். வரவுப் பாடலை பாடிக் கொண்டு அரசன் சபையில் தோன்றுகிறான். அவ்வேளையில் அக்கூத்தாளியின் உறவுகள் ஒரு ரூபாய் நாணயக் குற்றியைச் துண்டுச் சீலைத் தலைப்பில் முடிந்து சபையின் முன்னால் எறிவார்கள்.

ஒரு நாள் கண்டிஅரசன் ஒத்திகையை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். கயித்தான் லோறன்ஸ் (முத்தையா அந்தோனிப்பிள்ளை) அரச பாத்திரத்தில் பாடிவர, யோசேப்பு தேவசகாயம்பிள்ளை என்பவர் பணக்குற்றியை சீலைத்துண்டில் முடிந்து வீசினார். உடனே அண்ணாவியார் லோப்பு வஸ்தியாம்பிள்ளை ''போடுவார்கள், போடுவார்கள்! கட்டிப்பூராயம் இன்னும் போடுவார்கள்!" என்று சொல்ல, மேலும் பிறிதொருவர் பணக் குற்றியை சீலையில் முடிந்து சபைக்கு முன்னால் வீச இது மேலும் தொடரும். இந்நிகழ்ச்சி ஓர் ஒத்திகையில் மட்டும் நடைபெறுவதில்லை. கூத்தின் மேடையேற்றச் செலவுக்கு சேர்ந்த பணம் உதவும் என்ற வகையில் அடுத்தடுத்த ஒத்திகைகளிலும் இப்பணக்கூத்து நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்கூத்து கூத்தாளிகளின் உறவுகளுக்கு மகிழ்வைத்தரும் நிகழ்வாக அக்கால கட்டத்தில் அமைந்திருந்தது. அண்ணாவியார், முகாமையாளர், (மனேஜர்) கூத்தாளிகள், பக்கவாத்தியக்காரர்கள் முதலிய அனைவருக்கும் ஆனந்தத்தை அள்ளிக் கொடுக்கும் ஒரு விழாவாக இப்பணக்கூத்துக்கள் விளங்கின.

பணக்கூத்துக்களின் மூலம் திரட்டிய பணம் மேடையேற்றச் செலவுக்கு கைகொடுத்ததாக முகாமையாளர் (மனேஜர்) பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். எங்கெல்லாம் நாட்டுக்கூத்தின் பெருமை பேசப்படுகின்றதோ அங்கெல்லாம் பணக்கூத்தின் வகைகளெல்லாம் அலசப்படுகின்றன. இச்செய்திகள் எல்லாம் மறக்கப்பட்ட வரலாறாகப் போய்விடக்கூடாதென்ற வேணவா, இன்னும் நம்மிடையே வேர்விட்டுக் கொண்டிருக்கின்றது.

## 09. ஆட்டக்கூத்து

கூத்து என்னும் சொல் குதி என்ற வினையடியிலிருந்து பிறந்தது. எனவே குதித்தாடுவது தான் கூத்தென்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். கூத்து, ஈழத்தமிழ்மக்களின் தேசிய கலைவடிவம் என்பதில் இருகருத்துக்கு இடமில்லை. மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக நாட்டுக்கூத்து ஈழத்தமிழர்களிடையே ஆடப்பட்டு வருகின்றது. சாதாரண மக்களுக்கு மகிழ்ச்சியையே வரவாக்கித் தருவதோடு நில்லாமல் வாழ்வுக்குப் பயன்படும் செய்திகளைச் சொல்லும் ஊடகமாகவும் கூத்தைக் கொள்ளலாம்.

அருள்மொழிவர்மன் என்று வரலாற்றால் அழைக்கப்படும் முதலாம் ராஜராஜசோழன் காலத்திற்குப் பின் (1012 - 1044) தமிழகத்தில் கோயில்கள் தோன்றின. அங்கு பாடகர்கள், நடன ஆசான்களான நட்டுவனார்கள், நாட்டிய மங்கையர்களான தேவரடியார்கள் என்பவர்களைக் கோயில் வளாகமே பேணியது மட்டுமின்றிக் கோயில்களிலே நாடகசாலைகளும் அமைக்கப் பட்டன என்பதை அறியமுடிகின்றது. அதன் காலங்கடந்த பிரதிபலிப் பாகத்தான் கூத்து ஈழத்தமிழர்களிடையே குடிபுகுந்தது. இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுகைகளின் போது கூத்தாளிகளின் பாடலோடு தாளச்சுத்தியான ஆடலும் நிகழ்ந்துவந்ததென்பது நாடகவரலாறு தெரிந்தவர்களுக்கு நன்கு புரியும்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பாஷையூரில் அரங்கேறிய கூத்துக்களில் இவ்வாட்டம் பெரும்பங்கை வகித்ததெனலாம், ஆட்டங்கலந்த கூத்துஅளிக்கைகள் கூத்தாளிகளுக்கு ஆத்மார்த்த பெருமிதத்தையும், சுவைஞர்களுக்கு எல்லையில்லாத ஆனந்தத்தையும் கொடுத்ததென்பது வெள்ளிடைமலையே! பாடல்பாதி, ஆட்டம் பாதியென்ற சுவைஞர்களின தேடலிலே தான் கூத்து தன் வளர்ச்சியை எட்டிப் பிடிக்கக் கால்நகர்த்திக் கொண்டிருந்தது. 18 அடி விட்டங் கொண்ட வட்ட மேடையிலே தான் ஆட்டக்கூத்து பெரும்பாலும் ஆடப்பட்டுவந்தது. அண்ணாவியார், கூத்தாளிகள் முதலியோர் பங்கேற்கும் இந்நிகழ்வின் உயிர்நாடியாக மத்தளம் வாசிப்பவர் விளங்குவார்.

1920ஆம் ஆண்டிற்குப் பின்னர் பாஷையூரில் மேடையேறிய பப்பரவாகன், பவளக்கொடி, வெடியரசன், ஞானரூபன் என்ற கூத்துக்களில் பங்கேற்ற மண்ணின் மைந்தர்கள் ஆட்டக்கூத்திற்கே ஒரு புதிய வரலாற்று படைத்துவிட்டனர் என்றே சொல்ல வேண்டும்.

மில்கேல் பொன்னுத்துரை, சம்பூரணம் சந்திரராசா, கபிரியேல் முத்துராசா, குருசார் காசிப்பிள்ளை, செல்வராசன் கபிரியேற்பிள்ளை, வெந்தீஸ் சவிரிமுத்து, செல்லர் இராயப்பு, அந்தோனிப்பிள்ளை சிப்பிரியாம்பிள்ளை, சுவாம்பிள்ளை கபிரியேற்பிள்ளை, தீயோ பாலுப்பிள்ளை, தீயோ இராசேந்திரம், சவிரிமுத்து எமிலியானுஸ், யேக்கப் ஞானப்பிரகாசம் என்ற கூத்தாளிகள் ஆட்டக்கூத்தில் தங்கள் அபார திறமையை வெளிக்காட்டினர்.

இப்படியே வேரோடி விழுதெறிந்திருந்த ஆட்டக்கூத்து, புகழின் உச்சியிலே ஏறிநின்ற ஆட்டக்கூத்து புழுதிமேட்டில் விழுந்து இன்று தன்முகவரியையும் இழந்து நிற்கின்றது. இந்நிலை வரக்காரணமென்ன? இது ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்டிய தொன்றாகும் ஆட்டக்கூத்தை இழந்ததினால் மழையறியாப் பயிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டமுற்று, விழிபிதுங்கிப் போயிருக்கின்ற சுவைஞர்களைத் தேற்றுவது யார்? ஆட்டக்கூத்தில் பெற்ற அக்களிப்பைத் திரும்பவும் அவர்களுக்குக் கொடுக்கமுடியுமா அந்த வக்கற்றதுகளால். என்னதானிருந்தாலும் சுயத்தை மூடிமறைக்கும் ஒருசிலரால் தான் இந்தச்சோதனை கூத்துலகுக்கு நேரிட்டது. மறந்தும் வரலாறு இந்த சூத்திரதாரிகளை மன்னிக்காது.

அன்று கூத்துக் கலைக்கு தங்கள் நெஞ்சில் அரியாசனம் கொடுக்க முடியாதவர்களால் அர்ப்பணிப்புடன் கூடிய கலைக் கொள்கைகளுக்கு எவ்வாறு சரியாசனம் கொடுக்க முடியும். இப்படிப்பட்டவர்கள் ஊதிவிடும் புகையால் தான் ஆட்டக்கூத்து அழகிழந்தது, எட்டு, வீசாணம், நாலடி என்ற ஆட்ட உருப்படி களை உள்வாங்கி அரங்கிலே காலடிவீசிக் குலுங்கியாடுகின்ற சுவையே அற்புதம்! வடமோடியில் ஆட்டம் கூடுதலாக இருந்தமையினாலும், இசைநுணுக்கம் கவனிக்கப்படாமையினாலும், தென்மோடியில் ஆட்டம் குறைந்தளவு இடம்பெற்றமையினாலும், இசையார்வம் மிகவும் பேணப்பட்டமையினாலும் தென்மோடி யிலுள்ள கத்தோலிக்கக் கூத்துக்கள் காலம் செல்லச்செல்ல ஆட்டத்தை இழந்தன என்றும் ஒருசாரார் வாதிடுவதைப் பார்க்க முடிகிறது.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னே எம்மை இழுத்துச் செல்கின்றன எண்ண அலைகள். ஐரோப்பிய பெரு நிலப்பரப்பி லிருந்து 1505ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் போர்த்துக்கேயர் ஈழ மண்ணுக்கு வந்தனர். காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. மறைப்பணியாற்றத் திருத்தொண்டர்களும் அவர்களுடன் இங்கு வந்தனர், யாழ். மறைமாவட்டத்தில் பாஷையூர் ஒரு வலயமாக (பங்கு) விளங்கியது, இப்பங்கின் மறைத் தொண்டர்களாக இவ்வேளையில் கடமையாற்றியவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியராகவே இருந்தனர். தமிழ்க் கலைகளை, பண்பாடுகளை அவர்கள் அறிந்து கொள்ள நீண்டகாலம் பிடித்தது.

1962ஆம் ஆண்டு ஆனித் திங்களில் நிகழவிருக்கும் பாஷையூர் புனித அந்தோனியார் தேர்த்திருவிழாவை ஒட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோனியார் கூத்து மேடையேறக் காத்திருந்தது. பங்குனித் திங்களில் ஒத்திகை நடைபெற ஏற்பாடாகியிருந்தது. கூத்து பிரதியொன்று பங்குத் தந்தையின் பார்வைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பது கட்டாயம், எனவே முகாமையாளர் (மனேஜர்) பிரதியைக் கொண்டுபோய் அவரிடம் கொடுப்பார், பிரதியில் உள்ள பாடல்களின் பொருளை புரிந்து கொள்வதற்கு அவர் வேறு ஒருவரிடம் கொடுத்து அதை படிக்கச் செய்து விளக்கம் பெற்றுக் கொள்வார்.

அந்தோனியார் கூத்தில் குழந்தை யேசு, அந்தோனியார் என்ற இரண்டு பாத்திரங்கள் வருகின்றன, அந்தப் பாத்திரங்களாக அரங்கேறி நடிப்பவர்களுக்கு பாடல்கள் மட்டுமல்ல, ஆட்டமும் இருந்தால்தான் அக்கலை முயற்சி சுவைஞர்களைக் கவரும். இந்த ஆட்டம் என்ற சொல்லிலேதான் பங்குத் தந்தைக்கும், முகாமை யாளருக்குமிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது. ‘‘அதெப்படி முடியும்? குழந்தை யேசுவும், அந்தோனியும் ஆடுவதா?’’ இப்படி ஏற்பட்ட பிணக்கு அப்பாத்திரங்களுக்கு ஆட்டம் தேவையில்லை என்ற தீர்ப்பில் வந்து நின்றது. இப்படியே ஆட்டக்கூத்தின் அஸ்தமனத்திற்கு அடிக்கலம் நாட்டப்பட்டது. இது குடலின் அடியில் அமிலம் கொட்டப்பட்ட நிலைக்குள் சுவைஞரைத் தள்ளிவிட்டது. மதபீடத்தின் இத்தகைய மனோபாவம் மாறாமலே அழுங்குப் பிடியாய் தொடர்ந்து வந்ததென்பதை எடுத்துக்காட்ட தொண்டைக்குள்ளே கொளுவிக்கொண்ட திரளிமுள் போல என்மனதை உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வைக் குறிப்பிடுவது நியாயபூர்வமானது.

நெஞ்சை ரணப்படுத்தும் கசப்பான உண்மையிது! 1959ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். ஆசிரியர் பயிற்சியை நான் தொடர்ந்து கொண்டிருந்த காலம். அதிபர் தினத்தைச் சிறப்பிப் பதற்காக நிகழ்த்தப்படும் மேடைநாடகப் பொறுப்பு என்தலையில் விழுந்தது. 90 நிமிட நேரங்கொண்ட நிகழ்வுக்காக நாடகமொன்று தயாராக என் கையிலிருந்தது, அதிபரின் பார்வைக்காக நாடகப் பிரதி சமர்ப்பிக்க வேண்டும் என்பது மாறாத நியதி, காலையில் ‘‘செந்துகில்’’ என்ற நாடகப்பிரதி அதிபரிடம் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையனதும் அதிபரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் அலுவலகத்திற்குச் சென்றேன். ''சிங்கராயர்! உணர்வை வெறிகொள்ள வைக்கும் இத்தகைய கீழ்த்தரமான உரையாடல்களைக் குப்பை போல கொட்டியிருக்கிறீர். இதைப் போடாமல் வேறு ஏதாவதொரு நல்ல நாடகத்தைப் போடுங்கள்!'' என்று அதிபர் கூறியதும் தலையசைத்துவிட்டு நான் வெளியே வந்துவிட்டேன். என் உணர்வுகள் தறிகெட்டு ஓடின. அதிபரைச சினங்கொள்ள வைத்த அப்படிப்பட்ட கீழ்த்தரமான வார்த்தைகள் தான் என்ன? அதனையும் உங்களிடம் பகிர்ந்து கொள்ளத்தானே வேண்டும் ''செந்துகில்'' என்று மகுடமிட்டு எழுதிய மரியகொறற்றி நாடகத்தின் இறுதிககட்டம். மரியகொறற்றி அலெக்சாண்டரால் பாலியல் வல்லுறவுக்கு அழைக்கப் படுகின்றாள். இருவருக்குமிடையே வாய்த்தர்க்கம் முற்றி ''அலெக்சாண்டர்! நீ நரகத்திற்குத்தான் போவாய்!'' என்று கொறற்றி சொல்கிறாள்.

''உன்னைப்போல் அழகிகள் அங்கிருந்தால் ஒருமுறை என்ன ஆயிரம்தடவை அங்கு சொல்ல தயாராயுள்ளேன்'' என்கிறான் அலெக்சாண்டர். அலெக்சாண்டர் சொன்ன இந்தப்பதில் தான் செந்துகில் நாடகத்திற்கே ஆப்பு வைத்துவிட்டது.

நான் சொல்வதையே நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. நியாயத்தின் பக்கம் நீங்கள் தரும் தீர்பு இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தச்செய்தியை உங்களுக்குத் தரவிரும்பினேன். அன்றிருந்த உடும்புப்பிடிதான் இன்றும் தொடர்கதையாக வளருகின்றது.


நாட்டுக்கூத்தில் இடம் பெற்ற ஆட்டம் இன்றும் தன் வளர்ச்சியில் தொய்வுகாணாமல் தொடர்ந்திருந்தால் என்றும் கூத்து முதல்தரமான ஆற்றுகையாக இனங் காணப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆட்டக்கூத்து பற்றுக்கோடிழந்து சரிந்து செல்கின்றதே என்று அக்கால கட்டத்தில் தடுப்பாருமில்லை. தட்டிக்கேட்பாருமில்லை. அன்று சமயத்திலிருந்து விடுபட்டு வாழ்வுத்தேடல்கள் சமூகமாற்றத்திற்கு தாவியுள்ள ஒருகாலகட்டத்திலே இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது மாறாத உண்மை. மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்குத் தேவையான விழுமியங்களைச் சொல்லும். கலைகளை நாமும் பேணுதல் தவறாகாது. உலகில் அமைதி மலர வேண்டும்; எங்கும் விடுதலை வெளிச்சம் பரவவேண்டும் என்ற மனோபாவம் மக்கள் எல்லோரிடமும் காணப்படுகின்ற இன்றைய நாளிலே கூத்தையும் செம்மைசான்ற ஒருகலையாக மதித்துப் பேணவேண்டும்.

நாட்டுக்கூத்தோடு இரண்டறக்கலந்திருந்த ஆட்டத்தையும், நமது இளையமரபினர் தெரிந்துவைத்து ஆடப்படும் கூத்துக்களில் அதனைப் புகுத்தவேண்டும். ஆட்டத்தை அறிந்து வைத்திருக்கும் மூத்த கூத்தாளிகளிடம் சென்று கேட்டு அதனை கற்றுக் கொள்ள வேண்டும். முயன்றால் முடியாதது உலகில் ஒன்றுமில்லை என்ற ஊக்கத்துடன் ஆட்டத்தை வளர்த்தெடுக்கப் பாடுபடவேண்டும். அப்படி நாம் அதீத பிரயத்தனம் செய்யாவிட்டால் நல்ல ஆட்டக் கூத்து நம்மைவிட்டு மெல்ல நழுவிப்போகும்.

ஆட்டக்கூத்து நலிவடைந்துபோகுமானால் கூத்துலகின் ஏக்கத்தையும், சுவைஞர் மனதை நெருடும் தாக்கத்தையும் சொல்லிமுடியாது. ஆட்டத்தை ஒதுக்கிவிட்டு ஆற்றுகையாகக் காட்டப்பட்ட மேடைகளில் ஈட்டப்பட்ட சாதனைகள் என்றுமே திருப்தி தருவதாயில்லை. எனவே தான் கூத்தோடு சேர்த்து ஆட்டமும் வளர்த்தெடுக்கப்படவேண்டும். இக்கோரிக்கையில் ஊடுசரடாக ஓடிக்கொண்டிருக்கும் உண்மைகள் அவதானிக்கப்பட வேண்டும். நியாயத்தன்மை நோக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. மிருதங்கம், தபேலா, வீணை, தாளம்

தடாகமில்லா ஊரும், தாளமில்லாப் பாட்டும் தன்பெருமை யிழந்து கெடுமென்பர். கூத்தோ, நாடகமோ, நடனமோ வேறு எந்தக் கலை நிகழ்ச்சியோ சிறப்புறுவதற்கு மிருதங்கம், வீணை போன்ற பக்க வாத்தியங்களின் பங்களிப்பு அவசியமாகின்றது.

ஒரு சில அண்ணாவிமார்கள், மிருதங்கமோ, வீணையோ வாசிக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பார்கள். அல்லது தனியொருவரே இவ்வாத்தியங்களை இசைப்பதில் நிகரற்றவராக இருப்பார். என்னதானிருந்தாலும் அரங்க நிகழ்வு களைகட்டி வெற்றி நடைபோட, பக்கவாத்தியங்களை மீட்டும் அணிசெய்கலைஞர்கள் உறுதுணை தருபவர்களாகக் கருதப்படுகின்றனர்.

## *மிருதங்கம்.*

மிருதங்கம் ஒரு முதல்தரமான தோற்கருவி வாத்தியமாகும். பண்டைய கலைநிகழ்வுகளில் மிருதங்கம் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது என்பது மறுக்கமுடியாத நிஜமாகும். அவ்வாத்தியமே நாட்டுக்கூத்துக்கும் உயிரளிக்கும் வாத்தியமாக என்றுமே விளங்குகின்றது. இந்த வாத்தியத்தை விற்பன்னர் ஒருவர், மீட்டும் ஒலியை கேட்ட மாத்திரத்தில் மனமே கிறக்கம் கொள்ளும். தானாகவே தலையோடு தசையும் ஆடும்.

கூத்துக்கு மிருதங்கம் வாசிப்பதில் எத்தனையோ வல்லுநர் களைப் பாஷையூர் கண்டிருக்கின்றது. பாஷையூர் நாட்டுக்கூத்தின் பிதாமகர் என்று போற்றப்படும் அண்ணாவியார் பேதுரு சவிரிமுத்து, அண்ணாவியார் ஞானப்பு மடுத்தீஸ், கோடையிடி எனப்படும் அண்ணாவியார் டெனிஸ் அருளப்பு, அண்ணாவியார் மடுத்தீஸ் பாவிலுப்பிள்ளை, ஞானப்பு வஸ்தியாம்பிள்ளை, டெனிஸ் மனுவல், அண்ணாவியார் வஸ்தியாம்பிள்ளை அல்விறெட், புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் மிருதங்க வித்துவான் பாவிலுப்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ் (பிலேந்திரன்), யோண்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்சாண்டர் அன்ரனி முதலியோர் மிருதங்கம், தபேலா வாசிப்பதில் சிறந்து விளங்கி பாஷையூர் கூத்துவளர்ச்சிக்கு உயிரூட்டினர் என்பதில் எவருக்குமே கருத்து வேறுபாடில்லை.

## வீணை

சுருதியில்லாச் சங்கீதம் இனிக்காது என்பது நம்முன்னோரின் அமுதவாக்கு. பக்கவாத்தியமான வீணையை மீட்டி, அணிசெய் கலைஞர்களின் பங்களிப்பு பாலைக் கடைந்து நெய்தருவது போல் அமைந்திருக்கும். பக்கவாத்தியமாக வீணை விளங்குவதால் கூத்தாளிகள் தம் பாடல்களைத் தளம்பலில்லாமல் பாடமுடியும். பாடல்களை உச்சஸ்தாயியில் பாடும். கூத்தாளிகளுக்குத் துணைக்கரமாக விளங்குவதும் இந்த வீணையே.

ஆரம்ப காலத்தில் தனிப்பாடல், குழுப்பாடல், கும்மி, கோலாட்டம் மற்றும் நாட்டார் பாடல் என்பவற்றிற்கு வீணை பக்க வாத்தியங்களுள் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டது. வீணை மீட்டு பவர்களுக்கு மக்கள் சமூகத்திலும், சிறப்பாகக் கலையுலகிலும் பெரு மதிப்பும், பாராட்டும் கிடைத்ததை நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன்.

### பேதுரு மருசலின்



1925 ஆம் ஆண்டுக்குப் பின்னருள்ள காலப் பகுதியில் பாஷையூர் மண்பெற்றெடுத்த மருசலீன் வீணை விற்பன்னர் என்ற முக்கியத்துவத்துடன் குறிப்பிடப்பட வேண்டியவர். ஆரம்ப காலங்களில் கோயில் ஆராதனைகளில் வீணைமீட்டிய இவர், நாளடைவில் பாஷையூரில் அரங்கேறிய நாட்டுக் கூத்துக்களுக்கும் வீணை வாசித்தார்.

ஞானரூபன், பப்பரவாகன், வெடியரசன், அந்தோனியார் என்ற பாஷையூர் கூத்துக்களுக்கும் வீணைவாசித்த இவர் ஊர்காவற்துறை, வட்டுக்கோட்டை, மாதகல், தாளையடி, செம்பின்பற்று, குடத்தனை முதலிய இடங்களில் அரங்கேறிய கூத்துக்களுக்கும் வீணை வாசித் திருப்பதாக அறிய முடிகின்றது. 1904 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 10ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர்,1975 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 21ஆம் நாள் மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாசில்லாமணி மரியாம்பிள்ளை



ஊர்காவற்துறையிலுள்ள நாரந்தனையைச் சேர்ந்த ஆசிரியர் அ.மாசில்லாமணி என்பவருக்கு மகனாக மரியாம்பிள்ளை 1922ஆம் ஆண்டு தைத்திங்கள் பாஷையூரில் பிறந்தார். பொலிஸாகக் கடமையேற்று, மிருசுவிலில் திருமணஞ்செய்து கொண்ட இவர் தந்தையின் வழிகாட்டலில் வீணை வாசிப்பதில் புலமைத்துவமடைந்தார்.

ஆர்மோனியச் சக்கரவர்த்தி என்று கலையுலகால் புகழப்படும் இவர் கும்மி, நடனம், கோலாட்டம், மேடைநாடகம் முதலிய தடங்களில் தன்காலடியைப் பதித்திருந்தாலும் 1952ஆம் ஆண்டுக்குப் பின்னர் கூத்து அரங்குகளிலும் இவரது வீணையின் நாதத்தைக் கேட்கக்கூடியதாயிருந்தது. அதே ஆண்டில் பாஷையூரில் மேடை யேறிய கண்டியரசன் நாட்டுக்கூத்தில், இவரது வீணை மீட்டும் வித்தகத்தன்மை அனைவரினதும் பாராட்டைப் பெற்றமையை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. அற்புதமான கலையளிக் கைகளால் இலங்கை முழுவதிலுமே தன் பெயரை இவர் பதிவு செய்துள்ளார். காதுகளில் இனிமையான வீணை ஒலியைக் கேட்ட மாத்திரத்தில் எவருக்குமே மரியாம்பிள்ளையை தான் நினைக்கத் தோன்றும்.

### அந்தோனி பாலதாஸ்



இளமைதொட்டு இசையில் ஈடுபாடு கொண்ட பாலதாஸ் நடனம், கும்மி, மேடைநாடகம் என்பனவற்றிற்கு வீணை வாசிப்பதில் சிறந்து விளங்கினார். தொடர்ந்து பல நாட்டுக்கூத்து அரங்குகளிலும் இவரது வீணை ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. இசைஞானம் கைவரப்பெற்ற இவரது விரலசைவுக்கு வீணையே அடங்கிக் கிடந்தது.

1960ஆம் ஆண்டுக்குப் பின் பல கலை ஆற்றுகைகளில் வீணை மீட்டிய இவர் புகழின் உச்சியை எட்டிப் பிடித்தார் அதனைத் தொடர்ந்து வீணை மூலமாகக் கூத்து வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினார். அண்ணாவியாரும், புலவருமான இவர் வீணையில் தமது ஆளுமையை வளர்த்து கூத்துக்கலையிலும் பதிவுகளைத் தந்துள்ளார்.

### *முடியப்பு அந்தோனிப்பிள்ளை ( சட்டத்தரணி)*



1936ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 28ஆம் நாள் பாஷையூரில் பிறந்தவர் அந்தோனிப்பிள்ளை. பூவோடு கூடிய நாரும் புதுமணம் பெறும் என்பது போலப் புகழ்பெற்ற அண்ணாவியார் தீயோ முடியப்பு (இராசேந்திரம்) என்பவரைத் தந்தையாக பெற்று, இசைபோன்ற கலைத் துறைகளில் இவர்வீணை வாசிப்பதில் திறனை வளர்த்துக் கொண்டார்.

தொடர்ந்து வந்த காலங்களில் வீணை வாசிப்பதன் மூலம் கூத்துத் துறையிலும் நுழைந்தார். சவேரியார், கற்பகமாலா, ஞானசௌந்தரி முதலிய கூத்துக்களுக்கு இவர் வீணைவாசித்துத் தன்புகழை வளர்த்துக் கொண்டதோடு கூத்துத்துறையின் வளர்ச்சிக்கும் அருஞ் சேவையாற்றியுள்ளார்.

### *அருளானந்தம் யேசுதாசன்*



மெல்லிசைப் பாடல்களின் ஈர்ப்பினால் இசை நாடகத்துறைக்குள் நுழைந்த யேசுதாசன் தமது அயராத முயற்சியினால் கூத்துத்துறைக்கும் அறிமுகமானார். 1965 ஆம் ஆண்டு வீணை வாசிப்பதில் ஈடுபட்ட இவர் 1968ஆம் ஆண்டு இக்கலையில் முதிர்ச்சியடைந்த போது பல அரங்குகள் இவரைக் கைநீட்டி அழைத்தன. புலம்பெயர்ந்து வாழும் இவரிடம் இசைஞானமும், பாடும் ஆற்றலும் இடம் பெயராமலே இருந்தது. கூத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்ட இவர், வீணைக்கலையில் முன்னணியில் திகழ்ந்ததொன்றும் ஆச்சரியமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. ஒலி, ஒளி அமைப்புக்கள்

ஆரம்பகாலத்தில் தீவட்டிகளாலும், இடைக்காலத்தில் பெற்றோல்மக்ஸ் போன்ற விளக்குகளாலும் ஒளிகண்டவைதான் பாஷையூர்க் கூத்தரங்குகள். பண்பாட்டுக் கோலங்களைத் துழாவி, நாட்டாரியலில் நனைந்து, பொழுது போக்கில் இன்புறவும் செய்த, நாட்டுக்கூத்துக்களின் வளர்ச்சியில் ஒளி, ஒலி என்பன காத்திரமான இடத்தைப் பிடித்திருந்தன என்று கூறினால் அது மிகையாகாது. ஒளி விதானிப்பு அரங்கக் காட்சியமைப்புக்கு உறுதுணையானது. ஒளி, ஒலியைப் பெரும்பாலும் ஒருவரே கையாண்டு, அதன் மூலம் பாஷையூர் கூத்தரங்கைப் பிரகாசிக்கச் செய்தவர்களைத் தொட்டுக் காட்டுவது பொருத்தமென நினைக்கின்றேன்.

***பூபாலன் ஆசைத்துரை***



1947ஆம் ஆண்டிற்குப் பின்னர் ''பாலாசவுண்ட் சேவிஸ்'' என்றதொரு ஒளி, ஒலியமைப்பு நிறுவனத்தை ஆசைத்துரை என்பவர் பாஷையூரில் இயக்கிவந்தார். கோயில் திருவிழாக்கள், திருமண நிகழ்வுகள், பொதுக் கூட்டங்கள் மற்றும் மங்கல நிகழ்வுகளுக்கும் ஒலியமைப்போடு, ஒளி வசதியையும் செய்து கொடுத்த இவர், நாளடைவில் அரங்குகளோடும் தொடர்பை ஏற்படுத்தி ஒளி, ஒலியமைப்புக் கலையிலும் அகலக்கால் பதித்துக் கூத்தும் வளரப் பங்களிப்புச் செய்தார்.

குழு நிகழ்ச்சிகள், மேடைநாடகங்கள் முதலியவற்றுக்கு ஒளி, ஒலியை அமைத்த இவர் கூத்தரங்குகளிலும் தனது கலைத்திறனை மெருகிட்டுத் துலங்கச் செய்தார். எனது மேடை நாடகங்களுக்கும், வேறு எத்தனையோ மேடை நாடகங்களுக்கும், கூத்துக்களுக்கும் கூடப் பரந்த அளவில் ஒலி, ஒளி அமைப்புச் செய்து நாடெங்கிலுமுள்ள கலைவிரும்பிகளின் பாராட்டைப் பெற்றார். மரணம் 1979ஆம் ஆண்டு அவரைப் பிரித்தாலும் அவராற்றிய மகத்தான கலைப்பணி எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*கபிரியேல் விக்ரர்*



அட்டகாசமான சமூகத்திலே வாழ்ந்து, அமைதியைக் கடைப்பிடித்து, கலைமுயற்சிகளில் உயர்ந்த ஒருசிலருள் விக்ரர் குறிப்பிடக்கூடியவர். "விக்ரர் சவுண்ட் சேவிஸ்" என்றதொரு நிறுவனத்தை நடத்தியதன் மூலம் ஒலி, ஒளி அமைப்புத் துறையில் இவர் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினார்.

1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் நடைபெற்ற கலை நிகழ்வுகள், மங்கல விழாக்கள் முதலியவற்றில் ஒலி, ஒளி அமைப்பைச் சீராகச் செயற்படுத்தியதுடன் மேடை நாடகங்களிலும், கூத்துக்களிலும் தமது முத்திரையைப் பதிவு செய்தார். ஒளி, ஒலியமைப்புத்துறை வளர்ச்சிகாண வேண்டும் என்பதோடு அமையாமல், காலத்திற்கேற்ப புதிய மாற்றங்களையும், அத்துறை உள்வாங்க வேண்டுமென்பதிலும் இவர் அவாக் கொண்டிருந்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி.

*பிலிப் விக்ரர்*



கலையுலகத்தால் நன்கறியப்பட்ட விக்ரர், "றோஸ் ஆர்ட்ஸ்ரூடியோ" என்ற நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில நடாத்தி, அதனை ஒளி, ஒலி அமைப்புத்துறையை வளர்த்தெடுப்பதற்காகப் பயன்படுத்தி வெற்றி கண்டவர் எனலாம்.

மேடைநாடகங்களோ, கலைநிகழ்வுகளோ, கூத்துக்களோ எது வென்றாலும் ஒளி, ஒலியமைப்பைத் திறமையாகக் கையாண்ட இவர், 1925ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டின் பல பகுதிகளிலும் இப்பணியைச் செய்து புகழ்பெற்றார். பாஷையூர் அரங்கக் கலைகளில் இவருக்கு மிகுந்த ஈடுபாடும், பெருமதிப்பும் உண்டு. ஒளி, ஒலியமைப்புத்துறை புதிய பரிமாணம் நோக்கி விரிவடைய வேண்டும்: அத்தளத்தில் புதிய தடங்களைப் பதிக்க வேண்டும் என்பதில் வேணவாக் கொண்ட விக்ரரைக் கலையுலகம் மறந்துவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. கூத்தும் ஒப்பனையும்

கூத்து அரங்குகளைப் பற்றி எண்ணப்படும் போதெல்லாம் அதிலிருந்து ஒப்பனையைப் பிரித்துப் பார்க்க முடியாது. அழகும், மணமும் இருப்பதால் தான் அதனை மலர் என்கின்றோம். அது போல் கூத்துக்கு ஒப்பனையும் முக்கியம் வாய்ந்ததாக விளங்கு கின்றது. இன்றும் கூட வீடுகளில் சிறுபிள்ளைகள் பவுடரை முகத்தில் அப்பிக் கொண்டால் ''ஏன்ரா கூத்தா படிக்கப் போறாய்?'' என்று தானே பிள்ளையிடம் தாய் கேட்கின்றாள். இதிலிருந்து கூத்துக்கு ஒப்பனையின் முக்கியத்துவம் விளங்குகிறதல்லவா!

அரசனா, முனிவனா, அசிளங்குமரியா, அமைச்சனா, பிச்சைக்காரனா, திருடனா, தூதுவனா, தளபதியா இப்படியெல்லாம் ஒப்பனையால் மட்டுமே செப்படிவித்தை காட்டமுடியும். இதனாலே தான் ஒப்பனையில்லாக் கூத்தும், கற்பனையில்லாக் கவிதையும் உணர்ச்சியைக் கிள்ளாது என்பர்.

ஆரம்ப காலத்தில் ஒப்பனை என்ற சொல்லுக்குப் பதிலாக முகப்பூச்சு என்ற சொல்லே வழங்கி வந்தது. கூத்துத் தொடங்கு வதற்கு முன்பாக ஒருவர் மற்றவரைப் பார்த்து ''உனக்குப் பூச்சு முடிஞ்சுதா'' என்று தான் கேட்பார். அதற்கெல்லாம் காரணம் இருந்தது. கூத்தாளியின் முகப்பூச்சுக்குப் பவுடரே கிடைக்காத காலமது! வீதிகளுக்கு அக்காலத்திலே மக்கிமண் பரப்புவார்கள். அம்மக்கி காய்ந்து போனபின் கூத்தாளிகள் அதையெடுத்து முகத்திலே தடவிப் பூச்சாக மாற்றிக் கொள்வர்.

ஆடையலங்காரமும் கூத்துச் சிறப்பதற்கு அவசியமல்லவா? கூத்தாளிகள் நீட்டுக்கை கொண்ட மேற்சட்டைகளை அணிவார்கள். சரிகைத் தலைப்புள்ள பட்டுவேட்டியை எடுத்துத் தாறுபாச்சிக் கட்டுவார்கள். முழங்காலில் இருந்து பாதம்வரையும் வெள்ளைச் சீலையை வரிந்து சுற்றிவிடுவார்கள். கதியால் நட்டுக் கிடுகுகளினால் அடைககப்பட்ட வேலியைக் கத்தியாலே வெட்டி, அகலமான வெளியாக்கி அதனூடாகவே கூத்தாளி வீதிக்கு வந்து மேடையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி நடந்து செல்வார். மேடையின் உட்புறத்தை வந்தடைந்த கூத்தாளியை அண்ணாவியாரும், முகாமையாளரும் சரியோவென ஏற இறங்கப் பார்த்துக் கொள்வர்.

பாஷையூரில் அரங்கேறும் கூத்துக்கலை நிகழ்வுகளுக்கு ம.பிலிப், சா.பெஞ்சமின், சி.ஸ்ரனிஸ்லோஸ், அ.இராசையா, ம.துரைராசா என்போர் ஒப்பனை செய்வதில் ஈடுபட்டு உழைத்தனர். பிலிப், பெஞ்சமின் முதலியவர்களை ''சோடினைக்காரன்" என்று நம்மவர்கள் அழைப்பதை என் காதுகள் கேட்டிருக்கின்றன.

*ம. பிலிப்*



தமிழகத்திற்குச் சென்று வந்த பிலிப் ஒப்பனைக் கலையைப்பற்றித் தெளிவாக அறிந்திருந்தார். அரிதாரம், எண்ணெய், மெழுகு என்பவற்றின் கலவையினால் கூத்தாளிகளுக்குச் செய்யப்படும் இவரது முகப்பூச்சே தனியழகு. பொன்சரிகை பதித்த கணுதை உடுப்பு என்னும் கருமைநிறக் கோட்டுகளை அரசன், மந்திரி, தளபதி என்ற பாத்திரங்களை ஏற்று நடிக்கும் கூத்தாளிகள் அணிந்தால் கண்ணுக்குப் பொலிவாயிருக்கும்.

அந்நாட்களில் அரங்கில் இக்காட்சியைக் காண்பது மனதுக்கு ரம்மியமாயிருக்கும். ''கொப்பர்" போன்ற பெரிய பெட்டிகளில் எடுத்துவரும் இவரது முடி, வாள், ஈட்டி, டோப், தொங்கு சீலை (காப்பை) முதலியவற்றுடன மேடையை அலங்கரித்து விரித்துச் சுருட்டும் பெருந்திரைகளும் பக்கத்தட்டிகளும் இவரது ஒப்பனையின் வீரியத்திற்குக் கைகொடுத்து உதவின. பாஷையூர் நாட்டுக்கூத்தின் வளர்ச்சிக்குப் பெருந்துணைபுரிந்த பிலிப் ஒப்பனைக்கலையில் ஓர் ஆழமறியாத பெருங்கடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


***சாமுவல் பெஞ்சமின் (08.06.1915 - 1978)***



''பெஞ்சிஅப்பா'' என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் பெஞ்சமின் பாஷையூரில் நடந்தேறும் கூத்து, மேடை நாடகம் போன்ற கலைநிகழ்வுகளுக்கு ஒப்பனை செய்வதில் சமர்த்தர் என்பதில் ஐயமில்லை, எப்பொழுதுமே சிரித்துப் பேசிக்கொண்டிருப்பதினால் எல்லோரையுமே கவர்ந்த இவர் கருமமே கண்ணாயிருப்பார்.

அயலூரான கொய்யாத்தோட்டத்தில் வசித்த இவர், 1925ஆம் ஆண்டு தொடக்கம் பாஷையூரில் அரங்கேற்றப்பட்ட பெரும்பாலான கூத்துக்களுக்குத் தமது ஒப்பனையின் மூலம் உயிர்ப்பூட்டினார். டோப், மணியுடுப்புக்கள், சீன் முதலியவற்றில் அதிக சிரத்தை கொள்ளும் இவர் எனது மேடை நாடகங்களுக்கும் ஒப்பனை மூலம் தன் கைவண்ணத்தைக் காட்டியதை மறக்கமுடியாது.

***சி.ஸ்ரனிஸ்லோஸ் (ஆசிரியர்)***



ஒப்பனைக்கலை நுட்பங்களைத் தமிழகத்திலிருந்து பட்டறிவாகப் பெற்றுக்கொண்ட ஸ்ரனிஸ்லோஸ், ஒப்பனையின் வளர்ச்சியோடு, காட்சியமைப்புக்களிலும் (செற்றிங்ஸ்) புதுமையைப் புகுத்தவேண்டும் என்ற துடிப்புடன் செயற்பட்டவர் என்பதைக் கலையுலகே அறியும்.

இவர் தாம் ஒப்பனைப் பொறுப்பேற்றுப் பாஷையூரில் அரங்கேறிய கூத்து, மேடைநாடகங்களின் வெற்றிக்குப் பாதை வகுத்தார். ஒப்பனைக் கலையை ஒரு தொழிலாக மட்டும் கொள்ளாமல், பயனுள்ள ஒரு பொழுது போக்காகவும் எண்ணிய இவர் ''செய்வன திருந்தச் செய்'' என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டவராயுமிருந்தார். "கலாபூஷணம்" பட்டம் பெற்ற இவரின், ஒப்பனை விகர்சிப்பை 1965ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய "காருவகி" என்ற எனது மேடைநாடகத்தில் கண்டு நான் மெய்மறந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அ. இராசையா*



ஆண்களே பெண் பாத்திரமேற்று நடித்த அக்கால கட்டத்தில், ஒப்பனைக்கலையால் ஆணொருவனை அழகியாக, அந்தப்புர சுந்தரியாக மாற்றிவிடுவதில் இராசையாவுக்கு நிகர் அவரேதான். ஒப்பனையில் ஒரு புதுயுகம் படைக்கவேண்டுமென்று புறப்பட்ட இவரைப் பாஷையூர் அரங்கக் கலைக்கு அறிமுகப்படுத்திய பெருமை எனக்குண்டு.

எடுபிடி ஆளம்போடு வராமல் ஒருசிறிய சூட்கேசுடன் வந்து தனது ஒப்பனைக் கைங்கரியத்தை இவர் வெற்றியாகச் செய்து முடிப்பார். நடிகர்களின் பூச்சிலும், தோற்றப் பொலிவிலும் தான் ஒப்பனைக் கலை உயிர் கொண்டு வாழும் என்ற இலட்சியத் திற்காக உழைத்த இவரைப் பாஷையூர் கூத்துலகமும், பண்பட்ட கலையுலகமும் ''மேக்கப் ராசையா'' என்றே அழைத்துப் பாராட்டும்.

*ம துரைராசா*



''ஒப்பனைத்தென்றல்'' என்னும் விருதின் பெயரால், கலையுலகம் நினைவு கூரும் துரைராசா ஒரு சிறந்த ஓவியருங்கூட. இவரது ஒப்பனையில் மெல்லிய அழகும், முதிர்ந்த கலைத்துவமும் இழையோடக் காணலாம். ஒப்பனையில் ஈடுபட்டால் சுற்றிவர நடப்பது எதுவுமே கவனத்தில் கொள்ளாமல் எடுத்த முயற்சியை முடித்துவைப்பார்.

இனிய பேச்சும், இளகிய மனமுங்கொண்ட இவரிடம், ஒப்பனைமூலம் கற்பனையின் எல்லைக்கோடுகளைத் தொடவேண்டுமென்ற துடிப்பையும் நாம் கண்டுகொள்ள முடியும்.

பாஷையூரில் அரங்கேறிய கூத்து, மேடை நாடகங்களில் ஒப்பனையால் புகழ்பெற்ற இவரின் ஒப்பனை பற்றிய மதிப்பீடுகளை 1968ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய ''கண்ணீர்'' என்ற எனது மேடை நாடகத்தின் மூலமே என்னால் கண்டுகொள்ள முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. பக்கப்பாட்டு!

தூண்டா மணிவிளக்கு ஒளிவீசித் துலங்குவதற்கும், தூண்டு கோல் தேவை என்பது நம்முன்னோரின் வாக்கு. நாட்டுக்கூத்து ஒரு கூட்டு முயற்சி என்பதில் இரு கருத்துக்கு இடமேயில்லை. அரங்கு நிகழ்வுகளை ஆற்றுகை செய்யும் வேளையில் கூத்தாளி ஒரு பாட்டைப் பாடுவார். கழிநெடிலோடு தொடர்ச்சியாகத் தரு வைப்பாடும் போது, ஆட்டமும் அங்கு நிகழ்வதால் அவருக்கு குரலில் தொய்வும், உடலில் களைப்பும் தென்படும். கூத்தாளி தன் களைப்பை ஆற்றிச் சுவைத்துக்கொண்டிருக்கும், பார்வை யாளர்களைக் கவருவதற்குக் கூத்தாளிக்குப் பக்க பலமாக இருப்ப வர்களே பக்கப்பாட்டு குழுவினர் என்பதை எல்லோரும் அறிவர்.

பக்கப்பாட்டு பாடுவதற்குக் குரல் வளமிருந்தால் மட்டும் போதாது. இசைஞானமும், தாள நிதானமும் தவிர்க்க முடியாதவை. இராகத்தை கொச்சைப்படுத்தியும், தாளத்தை முறித்துக் கொண்டும் கூத்தாளி பாட நேர்ந்தால் அதனைச் சமாளித்து, நிரவிவிடும் சாமர்த்தியம் பக்கப் பாட்டுக்காரரிடமுண்டு. கூத்தரங்கேற்றத்தில் பாடி நடிப்பவர்கள் கால் இடறிவிழும் வேளையில் கைதூக்கிவிடும் கருணைப்பிறவிகள் பக்கப் பாட்டுக்காரரே!

இன்னாசிமுத்து இராசதுரை, ஜேக்கப் சின்னத்துரை, முத்துத் துரை அலெக்சாண்டர், கபிரியேல் யோண்பிள்ளை, மடுத்தீஸ் குருசுமுத்து, குருசார் ஓவியத்துரை, முத்துராசா நடராசா, சூசைப்பிள்ளை அந்தோனி, யோசேப் தேவசகாயம்பிள்ளை, கபிரியேல் முத்துராசா, கயித்தான் கபிரியேற்பிள்ளை என்பவர்கள் பாஷையூர் கூத்தரங்கிற்கு எழுச்சியூட்டிய பக்கப்பாட்டுக்காரரில் குறிப்பிடத்தக்கவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. 1920க்குப்பின் பாஷையூர் கூத்து

### *முத்திரை குத்திவிட்ட கூத்தாளிகள்*

கூத்து வரலாற்றில் பாஷையூருக்குத் தனியிடம் உண்டென்பது அவதானிப்புக்களைக் கோர்வையாக்கித் தருகின்ற சுவைஞர் குழுமத்தின் தீர்ப்பாகும். கூத்து அரங்கேற்றத்தில் ஏற்படுகின்ற சவால்கள் தொடர்பான காய்நகர்த்தலில் முகாமையாளரின் பங்களிப்பு முக்கியமானது. ஏனென்றால் முகாமையாளர் தான் கூத்தரங்கின் உயிர்முடிச்சு. அண்ணாவியார், கூத்தாளிகளுடன் சேர்ந்து முகாமையாளரின் கரங்களைப் பலப்படுத்துவதில் தான் அவ்வாற்றுகை முயற்சி சிறப்படையும்.

இதில் சிறிய தவறுகள் நேர்ந்தாலும் அதனால் தலைகுனிவை மட்டுமல்ல, தடுமாற்றத்தையும் சந்திக்க வேண்டிவரும். எனவே கூத்தாளிகளின் அயராத உழைப்பும், ஈடிணையற்ற தியாகமும் தான் இந்த அவைக்காற்றுக் கலைக்கு உருவங் கொடுக்கின்றன. பாஷையூரில் தோன்றிய இத்தகைய கூத்தாளிகளுக்கு அறிமுகம் தேவையல்லவா?

### *மிக்கேல் பொன்னுத்துரை (அசேர்) (1891 - 1954)*



மிடுக்கான தோற்றத்தினாலும், கம்பீரமான நடையினாலும் பாஷையூரில் அரங்கேறிய நாட்டுக்கூத்துக்களில் பாடி நடித்துத் தனக்கென ஒரு சுவைஞர் வட்டத்தை வைத்திருந்தவர் தான் பொன்னுத்துரை. அலாதியான முகத்தோற்றமும், அப்பழுக்கற்ற குரல் வளமும் கொண்ட இவரை 1939ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கிறிஸ்தோப்பர் கூத்தே புடமிட்டுக்காட்டியது எனலாம்.

பப்பரவாகன், ஞானரூபன், அந்தோனியார் என்ற ஆற்றுகைகளும் இவருக்குக் கூத்துலகில் மறையாத புகழைக் கொடுத்தது. இவர் கூத்துக்களை நெறியாள்கை செய்து அரங்கேற்றுவதிலும் வல்லவராயிருந்தார். ஞானரூபன் கூத்தில் 1891ஆம் ஆண்டுபிறந்த இவர் பாடிய இனிமையான பாடல் இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்மேவு மார்பினனே! அதிக வாய்மை
தங்கிய இங்கிர்த மருவு தயவினாலே
வார்மேவு கும்பமுலை மயிலி னார்கள்
மதனெனப்பின் தொடரவரும் வடிவுள் ளோனே!
ஊரெது உனது அன்னை தந்தையர்க்
குற்றதிரு நாமென்ன உனக்கு வாய்த்த
பேரெது இங்கு வந்த வரலா றெல்லாம்
பின்னிதமற் றுன்னிதமாய் பேசு வீரே!

**(ஞானரூபன்)**

***தீயோ செபஸ்தியாம்பிள்ளை (சந்திரராசா 1894-1966)***



முறுக்கு மீசையும், இறுக்கமான தேகக் கட்டமைப்பும் கொண்ட சந்திரராசா, தீயோ ராசாத்தி என்பவர்களுக்கு மகனாக 1894ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 17ஆம் நாள் பாஷையூரிலே பிறந்தார். கணீரென்ற குரலும், நறுக்கான சொல்லுச் சரிப்பும் கொண்ட இவரை நாட்டுக்கூத்து சுண்டியிழுத்தது.

1921ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறியதும், அருச்சுனன் பாத்திரத்தில் பாடி நடித்ததுமான ''பவளக்கொடி'' தான் இவரது முதல் கூத்து. பாஷையூரில் 1926 ஆம் ஆண்டு மேடையேறிய வெடியரசன் கூத்தில் வீரநாராயணனாகத் தோன்றிய இவர், தொடர்ந்து 1938 ஆம் ஆண்டு பப்பரவாகன் கூத்திலும், சவீன கன்னி கூத்திலும் தோன்றித் தனது கூத்தாளுமையை வெளிக்காட்டினார். கூத்துக்காகவே வாழ்நாளை அர்ப்பணித்த இவர், 1966 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 3ஆம் நாள் உலகவாழ்வை நீத்தார். பவளக்கொடி கூத்தில் அருச்சுனனாகத் தோன்றிப் இவர் பாடிய பாடல் இது!

முருக்குப் பருத்துத் தூணாய்
முன்னிற்கு மோடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்புத்தூணை அரித்து
எடுக்குமோ கறையானோடா!
சவீனகன்னிக் கூத்தில் இவர் பாடிய பாடலிது!
ஈதென்னவோ தானறியேன்!
ஏந்தலென்னை அங்குவரச்
சாதித்திரு வீரர் தம்மைத்
தானனுப்பி விட்டனரே!
பூதலத்தில் ஆதி மக்கள்
புன்பவத்தை போக்க வெல்லைப் வெல்லைப்
பூதரத்தில் வந்து தித்த
புண்ணிய சர்வேஸ் பரனே!

**(சவீனகன்னி)**

## *கபிரியேல் அந்தோனி (பிராந்தர் - 1899 - 1960)*



இனிமையான குரலும், பெண்ணைப்போல ஒயிலான நடையுங் கொண்ட அந்தோனி பாஷையூரிலே 1899ஆம் ஆண்டு பிறந்து, கூத்துக்காகவே உழைத்தார். கூத்தரங்கில் இவரைக் காண்பதே சுவைஞர்களுக்கு ஓர் அலாதியான அனுபவம்!

மகிழ்ச்சி கொப்புளிக்கும் காட்சிகளில் தோன்றுவதைவிட அவலச்சுவை பிரவகிக்கும் காட்சிகளில் தான் இவரது பாடலும், நடிப்பும் நம்மைப் பிரமிக்க வைக்கும். 1933ஆம் ஆண்டு தொடக்கம் பாஷையூரில் மேடையேறிய வெடியரசன், சத்தியவந்தன், அந்தோனியார், பூதத்தம்பி, தேவசகாயமபிள்ளை என்ற படைப்புக்களில் தமது கூத்துத்திறனை இவர் முத்திரை குத்திச் சென்றுள்ளார்.

1953 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் பாஷையூரில் அரங்கேறிய தேவசகாயம்பிள்ளை கூத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. காற்றாடி மலையின் உச்சியிலே, பகைவர்களால் சுடப்படும் வேளையில் தேவசகாயம்பிள்ளையாகத் தோன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோனியின் மனமுருகும் பாடலையும், நடிப்பையும் கண்டு கண்களை நனைக்காதவர்கள் இருந்திருக்கமாட்டார்கள். அன்று கண்டதை இன்றும் கூட என்னால் மறக்க முடியவில்லை. இப்படிப்பட்ட அற்புதமான கலைஞனை ''அவலச் சுவைக்கு ஓர் அந்தோனி'' என்று அழைப்பதில் தவறிருக்க முடியுமா? தேவசகாயம்பிள்ளை கூத்தில் அவர் பாடிய ஒரு பாடல் இது!

சாத்திரச் சூத்திரச் சடங்கேன் - பேய்கள்
தன்னை வணங்கவும் தொடங்கேன் - உந்தன்
கோத்திரம் வந்தாலும் அடங்கேன் - என்னைக்
கும்பிட்டாலும் முன்னுயர் மடங்கேன்!

**(தேவசகாயம்பிள்ளை)**

***பெரியதம்பி அருளானந்தம் (1905 - 1967)***



பாஷையூர் அரங்கு கண்ட புகழ்பெற்ற கூத்துக் கலைஞன் என்று அன்றும் இன்றும் என்றும் சுவைஞர்களால் பேசப்படுபவர் தான் அருளானந்தம். பெரியதம்பி செல்லம் என்பவர் களுக்கு மகனாக இவர் 1905 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார்.

அஞ்சலீனா என்ற அக்காவின் தூண்டுதலினால் கூத்துத் துறைக்கு இவர் கொண்டுவரப்பட்டார். பாவங் கொட்டுக்கின்ற முகம், பவுத்திரமான நடிப்பு, உள்ளத்தைத் தொடுகின்ற ஒய்யாரம், உணர்ச்சியைக் கிள்ளுகின்ற வார்த்தை உச்சரிப்பு இவையாவுமே அருளானந்தத்திடம் அடைக்கலமாகி இருந்த தென்னவோ உண்மை. 1933ஆம் ஆண்டு தொடக்கம் பாஷையூரில் மேடையேறிய அலேசு, ஞானரூபன், கிறிஸ்தோப்பர், தேவசகாயம்பிள்ளை, ஞானசௌந்தரி, செபஸ்தியார் முதலிய வெற்றிக் கூத்துக்களில் இவர் பாடி அபாரமாக நடித்தமை இப்பொழுதும் நம் மனக்கண்களில் தெரிகிறது.

அரசபாத்திரத்திற்கென்றே பிறவியெடுத்தவரோ இந்த அருளானந்தம் என்று கூத்துலகம் இன்றும் கூடச் சொல்லிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றது. 1952ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய கண்டி அரசன் கூத்து இவரது கூத்துவளர்ச்சியில் ஒருமைல்கல். ''கழிநெடிலுக்கோர் அருளானந்தம்'' என்ற புகழொலி கூத்துக்கலை வாழும் நாள் வரைக்கும் தேயாது. கூத்துவானிலே வெற்றியுலா வந்த இந்தக் கதிரவன் 1967ஆம் ஆண்டு கூத்துலகம் கண்ணீர் வடிக்க மேற்றிசையில் போய் மறைந்துவிட்டான். நம்மையெல்லாம் அதிர்ச்சியில் உறையவைத்துவிட்டு அந்தக் கூத்து நாயகன் கொடிய சாவு என்னும் திரைக்குள் ஓடி ஒளிந்து கொண்டான். கண்டியரசன் கூத்தில் பெண்ணின் கழுத்தில் கல்லைக்கட்டிக் குளத்தில் தள்ளும்படி அரசன் ஆணை பிறப்பிக்கும் போது இவர் பாடிய ஒரு பாடல் இது!

மாவலியுடைய தீர மழுவோரே! நீங்களெந்தன்
ஏவலின்படியே செய்யவேன் மிகுசுணக்கம் கொண்டு
பாவமேபாரா வண்ணம் பாவையின் கழுத்தில் கல்லை
வேகரமாகக் கட்டி வீழ்த்துவீர் குளத்தில் தானே!

**(கண்டிஅரசன்)**

### *சின்னத்தம்பி அந்தோனி (1924 - 1999)*



சின்னத்தம்பி தங்கம் என்பவர்களுக்கு மகனாக 1924 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 24ஆம் நாள் பாஷையூரில் பிறந்தவர் தான் அந்தோனி. சிறுவயதிலிருந்தே கூத்துப் பாடல்கள் இவரைக் கவர்ந்திழுத்தன. அமுதமான குரல் வளமும், அன்னம் போல ஒயிலான நடையும், அர்த்த புஷ்டியான நடிப்பும் கொண்ட இவர் கூத்தரங்குகளில் பெண் பாத்திரங்களில் தோன்றிச் சுவைஞர்களை மயக்கி சொக்கவைப்பதில் வல்லவர்.

பாஷையூரின் அயற்கிராமங்களில் முப்பதிற்கு மேற்பட்ட கூத்துக்களை இயக்கி அண்ணாவியாராக விளங்கிய இவர், 1946 ஆம் ஆண்டு தொடக்கம் பாஷையூரில் அரங்கேறிய பூதத்தம்பி, அந்தோனியார், கனகசபை, நொண்டி என்ற கூத்துக்களிலும், 1949 ஆம் ஆண்டு நிகழ்ந்த செபஸ்தியார் கூத்திலும், 1952 ஆம் ஆண்டு நடந்தேறிய கண்டி அரசன் கூத்திலும் சிறப்பாகப் பாடி நடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரங்களோடு உணர்வுபூர்வமாக ஒன்றித் தனது அவைக்காற்று நிகழ்வினால், பார்வையாளரை மகிழ்விக்க இவர் தோன்றிய கூத்துக்களில் 1954ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய ஞானசௌந்தரி கூத்து குறிப்பிடத்தக்கது. அக்கூத்தில் ஞானசௌந்தரியாகத் தோன்றிச் சக்கைபோடு போட்டதை இன்றும் கூட என்னால் மறக்கமுடியவில்லை. தடைகளாகக் குறுக்கிட்ட சவால்கள் பலவற்றுக்கு, முகங்கொடுத்து தகர்த்தெறிந்துவிட்ட இவர் சாதனையாளராகவும் விளங்கினார். அர்ப்பணிப்புடனும், ஆளுமையுடனும் கூத்துத்துறைக்கு ஆற்றிய பணியைக் கௌரவிக்க 1975ஆம் ஆண்டு பாஷையூரில் யாழ். மாநகர துணைமுதல்வர் ஜே.எஸ். அழகையாயினால் இவருக்கு ''நாடகக் கலைமணி'' என்ற விருது வழங்கப்பட்டது.

செஞ்சொற்கலையாகிய கூத்தை நெஞ்சார நேசித்து வாழ்ந்த இவர், 1999 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 13ஆம் நாள் சாகாத கூத்துலகம் கலங்கியழ, சுவைஞர்கள் கண்களால் புஷ்பாஞ்சலி செய்ய மீளாத்துயிலில் ஆழ்ந்தார். 1949ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய சவீனகன்னி கூத்தில் மரிசியான் என்ற பாத்திமேற்று இவர் பாடிய பாடல் இது!

தேசுநிகர் அன்னைசொல் சூடிடுவேன் - வானார்
திங்களணி மங்கைமரி திருப்புகழ் பாடிடுவேன்
மாசில்லாத மார்க்கமும் தேடிடுவேன் - சுத்த
மாதவன் சந்தந்தோனிபாதமும் நாடிடுவேன்!

**(சவீனகன்னி)**

### *முத்தையா பிலிப் (1906 - 1988)*



முத்தையா செல்லம்மா என்பவர்களுக்கு மகனாக பிலிப் 1906ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். நிலமளந்த நடையும், நயன மொழிவிகற்பமும், வீணைக் குரலொலியும், வசீகரப்பேச்சும் கொண்ட இவரை நாட்டுக்கூத்து கவர்ந்திழுத்தது. 1936ஆம் ஆண்டுக்குப் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையூரில் அரங்கேறிய ஞானரூபன், அலேசு என்ற படைப்புக்களினூடாகத்தான் இவரது கூத்தின் முழுமை களைகட்டத் தொடங்கியது. தொடர்ந்து கிறிஸ்தோப்பர், பூதத்தம்பி, ஞானசௌந்தரி என்ற கூத்துக்களில் தோன்றிய இவர் தமது பாட்டாலும், பண்பட்ட நடிப்பாலும் சுவைஞர்களைச் சுண்டியிழுத்தார். 1952ஆம் ஆண்டு பாஷையூரில் நடைபெற்ற கண்டியரசன் கூத்தில் இவரேற்ற ''குமாரிகாமி" என்ற பாத்திரமே கூத்துலகில் இவருக்கு அழியாத புகழைக் கொடுத்தது எனலாம். அக்கூத்தில் இவர் பாடிய பாடல் இது!

மெய்யும் பதறுதே செய்வதறியேன் - பொன்னின்
மேனிதனை உரலில் பூணின் உலக்கை கொண்டு
ஊனும் பாதகிதந்த பாலும் வாயாலே
ஓடக் குத்துவேனோ பத்தா நின்றால்!

(கண்டிஅரசன்)

1938 ஆம் ஆண்டு பாஷையூரில் திரும்பவும் மேடையேறிய ஞானரூபன் கூத்தில் இளவரசியாக இவர் தோன்றிப் பாடிச் சுவைஞர்களைக் கவர்ந்த பாடலிது!

கொந்துலாவு தொடையிலங்கு குழல்மிளி களிலங்கவே
கோல ரெத்ன மீதழுந்தும் கொப்பு வாழியுலவே
சந்துலாவு புரிகுழலார் தயங்குகச்சு இலங்கவே
தனதந்த தனனமென்று தண்டை நிறையலம்பவே
கந்துலாவு செம்பொன்னொளிர் கடுக்கன் காதலம்பவே
கயிலைவென்ற அயிலையொத்த கருவிழி மையெழுதவே
மந்துவலாவு ரசவனமாதர்புடை சூழவே
வாமிகாமி நேரும் ஞானரூபி வந்து தோற்றினாள்!

(ஞானரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயித்தான் லோறன்ஸ் (முத்தையா அந்தோனிப்பிள்ளை
## (1915 - 2008)



விண்ணையிடிக்கும் தனது வெண்கலத்தொனியாலும், விசை பொருந்திய நடிப்பாலும் நாட்டுக் கூத்து அரங்குகளையும், நாலாதிக்கிலும் உள்ள சுவைஞர்களையும் கவர்ந்திழுத்தவர் தான் அந்தோனிப்பிள்ளை. 1915ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 15ஆம் நாள் பாஷையூரிலே பிறந்த இவர், பழைய கூத்துப் பாடல்களைப் பாடுவதில் சமர்த்தராகவிருந்தார்.

அரச பாத்திரத்திற்கே உரித்தான பீடுநடையும், ஆகாயத்தைத் தொடுகின்ற மலையை ஊடறுத்து ஓடிவரும் அருவி போன்ற குரலும், தங்குதடையற்ற உச்சரிப்பும், தரங்குன்றா நடிப்பும் கொண்டு இவர் கூத்தரங்குகள் பலவற்றைக் களைகட்டச் செய்தவர் என்பதை ஊரறியும்.

1938 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் மேடையேறிய கிறிஸ்தோப்பர், ஞானரூபன், அந்தோனியார், செபஸ்தியார் முதலிய கூத்துக்களில் தோன்றிச் சுவைஞர்களை மெய்மறக்க வைத்த இவர், 1946ஆம் ஆண்டு நிகழ்ந்த ஞானசௌந்தரி கூத்திலும் தனது கைவண்ணத்தை காட்டத் தவறவேயில்லை.

1952 ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய கண்டிஅரசன் கூத்தில் தான் இவரது முழுமைபெற்ற நடிப்பையும், மனங்கவரும் பாடல்களையும் கேட்டு மகிழ முடிந்தது. இம்மனுவல் கூத்தில் ''இம்மனுவல்'' என்ற பாத்திரமேற்று நடித்ததை இலகுவில் மறந்துவிட முடியாது. கண்டியரசன் கூத்தில் அமைந்த இவரின் வருகைப்பாடல் இது!

அகிலமும் புகழும் ஒய்கார உத்தமன்
முகிலமும் அடர்கொடையான தத்துவன்
சிகிவரு பரனடியான சித்தசன்
எகிநடை மாதர்கள் பார்வை பெற்றவன்
எங்கும் தொனிபெருகும் பம்பைக் கொடிகவிய
சங்கை பொங்கு கீர்த்தி சிங்கனும் நானே! **(கண்டிஅரசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலைப் பாடிக்கொண்டு, கண்டியரசனாக மேடையில் தோன்றும் அந்தோனிப்பிள்ளையைக் கண்டவர்கள் கண்படைத்த பேறு பெற்றவர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கூத்திற்காக வாழ்வை அர்ப்பணித்த இவர், 2008ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 06 ஆம் நாள் காலமானார் என்ற செய்தி கேட்டு, ஆயிரம் செந்தேள் கொட்டியது போலச் சுவைஞர்கள் உள்ளமெல்லாம் வேதனையால் அழுதது.

***இறப்பியேல் துரைராசா (1910 - 1978)***



இனிய குரலாலும், எடுப்பான தோற்றத்தாலும் கூத்து வரலாற்றில் தன்னை இணைத்துக் கொண்டவர் தான் துரைராசா. இறப்பியேல் அருமைமுத்து என்பவர்களுக்கு மகனாக, 1910 ஆம் ஆண்டு மாசித்திங்கள் 05ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவரை நாட்டுக் கூத்து தன்வசப்படுத்திவிட்டதென்றே சொல்ல வேண்டும்.

தொடர்ந்து பாஷையூரில் அரங்கேறிய ஞானரூபன், பூதத்தம்பி, கிறிஸ்தோப்பர், கண்டிஅரசன் முதலிய கூத்துக்களிலே இவர் தனது முத்திரையைப் பொறித்துள்ளார்.

1953ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 14ஆம் நாள் பாஷையூரிலே மேடையேறிய புனிதவதி என்ற கூத்தில் ''துர்க்குணன்'' எனும் பாத்திரமேற்று நடித்து, இவர் இறுதியில் தூக்கில் தொங்கிய அந்தக் காட்சியை என்னால் மட்டுமல்ல, எவராலுமே மறக்க முடியாது. நாட்டுக்கூத்து மாளிகையை வைரமணித் தூணாய்த் தாங்கி நின்று காத்த இவரை என்ன சொல்லிப்புகழ்வது. 1978ஆம் ஆண்டு தைத்திங்கள் 22ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்த இவர், 1948ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய செபஸ்தியார் கூத்தில் பாடிய சந்தவிருத்தம் இது!

திருவளர் மரகதம் திகழ்மணி மார்பக
திறல்புயனே! சரணம்
தெண்டிரை மண்டலம் எண்டிசை புகழ்செறி
செயனே! செயசரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவளர் கொலுமுகமதில் வெகு விரைவுடன்
வரவுரை விடுவதென்னோ?
மாற்றலர் தோற்றிய சீற்றமோ யாவையும்
மகிழ்ந்திடுவீர் சரணம்!

**(செபஸ்தியார்)**

### *கபிரியேல் முத்துராசா (பேயப்பு 1903-1968)*



எல்லோரையும் கவர்ந்திழுக்கும் குரலில் ''நானாண்டே'' என்ற பாட்டுடனும், எட்டுப்போடும் ஆட்டத்துடனும் பாஷையூர் கூத்தரங்கிலே, ஆஜானுபாகுவாகத் தோன்றிச் சுவைஞரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தவர் தான் முத்துராசா.

அரசனின் ஆணையைப் பறையறிவிப்போனாக வந்து கதையின் அறாத் தொடர்பினை நிகழ்த்துவோனாகவும் இவரை மேடையில் தரிசிக்கின்றோம். 1931 ஆம் ஆண்டு தொடக்கம் ஞானரூபன், கிறிஸ்தோப்பர், பூதத்தம்பி, கனகசபை, ஞானசௌந்தரி, செபஸ்தியார் என்ற ஆற்றுகைகளின் மூலமாகக் கூத்தரங்கில் தோன்றிக் கதைநகர்வுக்கு இவர் பங்களித்தார். நகைச்சுவையை அடித்தளமாகக் கொண்டு, கூத்துலகிற்கு இவர் ஆற்றிய பணி மறக்கக் கூடியதல்ல. ஞானரூபன் கூத்தில் இவரது பாடல் இது!

தெள்ளமுமிகும் பள்ளவயல் கதித்து என்றும்
தேன்குலவும் வெள்ளிகிரி உடுத்த நாட்டின்
விள்ளரிய வனப்புக்களை அறிவ தற்கு
வேந்தன் தேவலங்காரன் வருகை கூறக்
கள்ளருக்கு கஞ்சாவும் குடித்துத் துள்ளிக்
கண்டபடி பிதற்றிவழி கக்கிக் குக்கி
வள்ளுவனும் துள்ளிக் குதித்தாடி இன்று
வரைமுறைகொள் பறையறைய வந்துற் றானே!

**(ஞானரூபன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கபிரியேல் யோசேப்பு (1905-1969)



அருமையான குரல் பிழியும் பாடல், ஆளுமை சொல்லும் பாத்திரத்திறகு ஏற்ற நடிப்பு என்பவை துலங்கப் பாஷையூர் கூத்தரங்கிலே வெற்றிநடை போட்டவர் தான் யோசேப்பு. இளமைக்காலம் தொட்டு இனிய கூத்துப் பாடல்கள் இவர் மனதை ஆக்கிரமித்தன. இவர் ''தாழிசை'' பாடுகின்றார் என்றால் அழுகின்ற குழந்தை கூட வாய்மூடி அதனைக் கேட்டிருக்கும்.

1933ஆம் ஆண்டு தொடக்கம் அலேசு, பூதத்தம்பி, வெடியரசன், சவீனகன்னி முதலிய படைப்புக்களில் சுடர்விட்ட இவர், 1946ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய ஞானசௌந்தரி கூத்தில் பிலேந்திரனாகப் பாடி நடித்ததைச் சுவைஞர்கள் இலகுவில் மறந்திருக்க முடியாது. தானுமொரு தரமான கூத்தாளி என்பதை, ஆற்றிய பணிகளால் கூத்துலகிற்கு வெளிப்படையாகக் காட்டி நின்ற அவரது கலைப்பணியைப் பாராட்டத் தான்வேண்டும். சவீன கன்னியில் இவர் பாடிய பாடல் இது!

கலாம்பர மாலை மின்னக்
    கதிர்மணிக் கவசம் பூண்டு
நிலாம்பர திலத மிட்டு
    நிதியிரு குவளை சூட்டிக்
குலாம்பரம் திகழ நாட்டின்
    குறைமுறை உரைக்க வல்ல
துலாம்பர மதிவல் லோனும்
    துலங்கு மிச்சபை வந்தானே!

(சவீனகன்னி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அந்தோனிப்பிள்ளை சூசைப்பிள்ளை (முத்துராசா செல்லத்துரை 1914 - 1980)



பெண் பாத்திரத்திற்கேற்ற உடற்கட்டும், பேச்சிலே மயக்கத்தின் பிரவாகமும் கொண்ட செல்லத்துரை 1914 ஆம் ஆண்டு மாசித்திங்கள் 11ம் நாள் பாஷையூரில் பிறந்தார். கூத்துப் பாடல்களில் கொண்டபற்றினால் 1938ஆம் ஆண்டு தொடக்கம் கூத்துக்களில் பாடி நடித்து புகழைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து ஞானரூபன், சவீனகன்னி முதலிய படைப்புக்களில் இவர், தனது திறனை வெளிப்படுத்தியதனால் கூத்துலகின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டார். 1980ஆம் ஆண்டு சித்தரைத்திங்கள் 02ஆம் நாள் மீளாத்துயில் கொண்ட இவர், 1952ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கண்டி அரசன் கூத்தில் ரஞ்சித பூஷணியாகத் தோன்றிப் புகழின் உச்சியை எட்டிப்பிடித்துவிட்டாரென்பது பொய்யில்லை. ரஞ்சித பூசணியாக இவர் பாடும் ஓர் இன்னிசையைக் கேட்போமா!

தேங்குமணி வாகையுனை தேன்மொழியென் அக்காகேள்!
தூங்குமணி மஞ்சமதில் துயில்புரியத் தூர்க்கனவு
ஈங்குகண் டேனையோ என்னவிபரீத மென்னோ?
பாங்காகச் சொல்லுகிறேன் பட்சமுடன் கேட்டருளும்.

(கண்டிஅரசன்)

### குருசார் சின்னப்பு (காசிப்பிள்ளை 1909 - 1989)



குருசார் றோசம்மா என்பவர்களுக்கு மகனாக 1909 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்து, நாட்டுக் கூத்துக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர் தான் காசிப்பிள்ளை. கணீரென்ற குரல், கூத்தாளிக்கேற்ற மிடுக்கு இவைகளைக் கொண்ட இவர், 1937 ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய பப்பரவாகன் கூத்தில் முக்கிய பாத்திரமேற்றுப் பாடி நடித்தார். நொண்டி, வெடியரசன் என்ற கூத்துக்களிலும் தமது கைவண்ணத்தை இவர் காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தின் அழுத்தம் காரணமாகவும், மதக்கேலியாக இட்டுக்கட்டும் ஒரு சிலரின் விபரீதப் போக்கினாலும் நம்முன்னோரிடமிருந்து கைநழுவிப்போன ஆட்டக்கூத்து, எங்களுக்குள்ளே இன்னமும் அடங்கியிருக்கின்றதென்பதை இவர் நிரூபித்தார்.

1962 ஆம் ஆண்டு பாஷையூர் அழகையா முத்தமிழ் அரங்கில் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கும், கலையரசு க.சொர்ணலிங்கத்திற்கும் முன்னிலையில் காசிப்பிள்ளை, தனக்குப் பரிச்சயமான ஆட்டக்கூத்தை நிகழ்த்தியதைக் கண்டதும் அந்தக் கலையுலக மேதைகளே பிரமித்துப்போய் நின்றனர். அவ்வேளையில் அவர் உடலில் அன்று நிகழ்ந்த அசைவாட்டங்களைக் காணாத கண் என்ன கண்ணோ! செபஸ்தியார் கூத்தில் இவர் பாடிய பாடல் இது!

அதிகாரப் பெருக்கத் தோடு
    ஆட்சிசெய் மாட்சி வாய்ந்த
மதியாரும் தீயோக் கிலேசி
    மருவிலா நிருபம் தன்னை
சதிகார முடனே வந்து
    தடையின்றி உடைத்தாய் என்று
விதிகார முடனே கட்டி
    விரைவினில் வரச் சொன்னாரே!

**(செபஸ்தியார்)**

### *அந்தோனிப்பிள்ளை சிப்பிரியாம்பிள்ளை (1910 - 1965)*



இனிமையான குரலும், இங்கிதமான பேச்சும் கைவரப் பெற்ற சிப்பிரியாம்பிள்ளை 1910 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். இவரிடம் இயல்பாகவே காணப்பட்ட நாட்டுக்கூத்து ஆர்வத்தீ காலம் செல்லச் செல்லச் சுடர்விட ஆரம்பித்தது.

1946 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் பாஷையூரில் அரங்கேறிய சவீனகன்னி கூத்தில், சவீனகன்னியாகப் அற்புதமாகப் பாடி நடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரினதும் பாராட்டைப் பெற்றார். தொடர்ந்து 1953 ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த செபஸ்தியார் கூத்தில், ''பங்கிராஸ்'' என்ற வீர மறவனாகத் தோன்றிக் குணசித்திர நடிகனாயும் தம்மை முத்திரை குத்திக் கொண்டார்.

அலேசு, அந்தோனியார் என்ற கூத்துக்களிலும் தோன்றிக் கூத்துக்குப் பெருமை தேடித் தந்த இவர், பங்கிராஸ் என்ற பாத்திரமாக மாறி நடித்ததை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். செபஸ்தியார் கூத்தில் பங்கிராஸ் என்ற பாத்திரமேற்று இவர் பாடிய பாடல் இது!

மாறுதலுடன் அஞ்ஞான மன்னன் உத்தாரம் போலே
வீறுதலுடனே வீரர் விலங்கினுக் கிரையதாக்க
சீறுதலுடனே வேங்கை செறுத்திட வருகுதிப்போ
பேறுதல் நிறைந்தமோட்ச பேரின்ப மருளுவீரே.!

**(செபஸ்தியார்)**

### *செல்வராசன் கபிரியேற்பிள்ளை (1899 - 1963)*



கூத்திற்காகவே வாழ்வை அர்ப்பணித்த குடும்பத்தில் தான் கபிரியேற்பிள்ளை 1899 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். முறுக்குமீசை, மன உணர்வுகளை வெளிக்காட்டும் முகம், துள்ளுநடை, துல்லியமான பார்வை இவைகளின் கூட்டு உருவந்தான் கபிரியேற்பிள்ளை.

1933 ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய பப்பரவாகன், யூதகுமாரன் என்ற கூத்துக்களில் ஆட்டத்துடன் பாடி நடித்திருந்தாலும் கூட, 1940 ஆம் ஆண்டு பாஷையூரில் நடை பெற்ற கிறிஸ்தோப்பர் என்ற ஜனரஞ்சகமான படைப்பில், அமைச்சனாகத் தோன்றி எல்லோரையும் பிரமிக்க வைத்ததை இலகுவில் எவரும் மறந்துவிட முடியாது என்பதைச் சொல்லித் தானாக வேண்டும். அமைச்சனாக இவர பாடிவரும் அழகுப் பாடல் இது!

களங்கமில் மறையொழுகு கம்பீரமுடைய வேந்தன்
புளங்கிர்த வளங்கள் மெத்தப் புத்தியாய் உரைக்கும் வல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளங்கிர்த வித்தை தேர்ந்து பாமாலை சூடிப் பெற்ற
முளங்கிர்த முரசுஆர்ப்ப முதல் மந்திரி வருகின்றாரே!

(கிறிஸ்தோப்பர்)

### *யேக்கப் ஞானப்பிரகாசம் (சின்னத்துரை 1916 - 1989)*




1916 ஆம் ஆண்டில் யேக்கப் அன்னப்பிள்ளை என்பவர்களுக்கு மகனாகப் பாஷையூரில் பிறந்தவர் தான் ஞானப்பிரகாசம். சிறுவயதிலிருந்தே. கூத்தில், பெருவிருப்புக் கொண்ட இவர் பாஷையூர் கூத்தரங்கம் வளர்த்துவிட்ட ஒரு கூத்தாளி.

1935ஆம் ஆண்டு பவுலீனப்பர் கூத்திலும், 1939 ஆம் ஆண்டு பிலோமினம்மா கூத்திலும் இவர் சிறப்பாகப் பாடி நடித்துள்ளார். ஒத்திகையோ, வேறெந்தக் கூத்து முன்னெடுப்புக்களோ யாவற்றுக்கும் இவர் தோளோடு தோள் நின்றுழைப்பார். மதுரமான குரலில் இவர் இன்னிசை பாடக்கேட்டால் எவருமே மயங்கித்தான் போவர். 1940ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கிறிஸ்தோப்பர் கூத்தில் நடனமாதாகத் தோன்றி, இவர் பாடிய இன்னிசை மறக்கக்கூடியதா!

விம்மிப்புடைத் தெழுந்து வீறுபெற்றே மாந்து கெம்பும்
கும்மியிறு மாந்து தங்கக் குடமுடைய மடமுலையார்
உம்மிமயல் கொள்ளுதுரை உங்களின்மாசிங்கணைமுன்
நம்பிவரச் சொன்னகதை நரபதி நாயக முரையே!

(கிறிஸ்தோப்பர்)

### *சுவாம்பிள்ளை கபிரியேற்பிள்ளை (1904 - 1992)*



சுவாம்பிள்ளை, றோசம்மா என்பவர்களுக்கு மகனாக 1904ஆம் ஆண்டு கபிரியேற்பிள்ளை பாஷையூரில் பிறந்தார். குரல்வளம், கம்பீரமான நடை, இலாவகமான கைவீச்சு, இனிமையான பேச்சு இவை போன்ற நாட்டுக்கூத்துக்கு உயிரூட்டும் குணாம்சங்கள் இவரிடம் இளமையிலே குடிகொண்டிருந்தன.

நாட்டுக்கூத்தில் இயல்பாகவே நல்ல பற்றுக் கொண்ட இவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1933ஆம் ஆண்டு தொடக்கம் அலேசு, கனகசபை, அந்தோனியார், பூதத்தம்பி போன்ற கூத்துக்களில் சிறப்பாகப் பாடி நடித்தார். 1946ஆம் ஆண்டில் பாஷையூரில் அரங்கேறிய ஞானசௌந்தரி கூத்தில், அமைச்சனாகத் தோன்றிச் சுவைஞர்களைக் கவர்ந்த இவர் தானுமொரு கூத்தாளி என்பதை நிலைநாட்டினார்.

கூத்திலுள்ள பாடலோ, வசனமோ எதுவாயிருந்தாலும் தெளிவாக உச்சரிக்கும் இவர், வெடியரசன் கூத்திலே தன் ஆட்டத்தையும் சுவைஞர்களின் விழிகளுக்கு விருந்தாக்கினார். 1952 ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய, கண்டியரசன் கூத்தில் ஆங்கிலேய ஆள்பதியாகத் தோன்றி முத்திரை குத்தியதை இன்றும் கூட எவரும் புகழ்ந்து பேசுவர். கண்டி அரசன் கூத்தில் அவர்பாடிய பாடல் இது!

ஆலப்புளைக்கு இந்தத்தீங்கு விளைத்திட்டது
ஏதெனவே உரைப்பீர் எமக்கு
எல்லாம் வரையறை உண்மையாகவே
விண்டிடுவீர் கீர்த்தி சிங்கனே!

**(கண்டிஅரசன்)**

### *சவிரிமுத்து சிங்கராயர் (துரைச்சாமி 1914 - 1990)*



பாஷையூரின் புகழ்பெற்ற ‘‘நாட்டுக்கூத்து வேந்தன்” அண்ணாவியார் முத்தருடைய மகனான சிங்கராயர், 1914ஆம ஆண்டு கார்த்திகைத்திங்கள் 15ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். இளமை தொட்டே இவர் கூத்தில் ஆர்வம் கொண்டிருந்தார்.

பாஷையூரில் 1946ஆம் ஆண்டு மேடையேறிய செனகப்பு கூத்திலும், 1948 ஆம் ஆண்டு அரங்கேறிய சுளியார் கூத்திலும் தோன்றிய இவர் அற்புதமாகப் பாடி நடித்தார். இவரது குரல் கட்டையாக இருந்தாலும் பாடல்கள் இனிமையாக இருக்கும். ‘‘உன்ர கட்டைக்குரல் மாறுவதற்கு துண்டிக் கடற்கரைக்குப் போய்க் கத்தடா!” என்று தந்தை முத்தர் இவரிடம் கிண்டலாக கூறுவாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதானிருந்தாலும் 1952ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய, கண்டியரசன் கூத்தில் இவர் வர்த்தகனாகத் தோன்றிப் பாடி நடித்ததை எவரும் மறந்துவிடுவதற்கில்லை. சிறந்த கூத்தாளியான இவர், 1990 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 06 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். கண்டி அரசன் கூத்தில் இவர் பாடிய பாடல் இது!

வையவர்க் கோனே போற்றி! வருதலர்க் கரசே போற்றி!
வெய்யவனு லவுகண்டி விக்கிர்மத் துரையே போற்றி!
தையலர் கவரிவீசத் தவளமுக்குடை நிழற்றும்
ஐயனே எனையழைத்த தறிவிப்பீர் போற்றி! போற்றி!

(கண்டிஅரசன்)

### *மடுத்தீஸ் குருசுமுத்து (1916 - 1990)*



மடுத்தீஸ் லேனா என்பவர்களுக்கு மகனாக 1916 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த குருசு முத்து, ஆரம்பக் கல்வியை அயலிலுள்ள பாடசாலையில் கற்றார். கூத்துப் பாடல்களை எல்லா வேளைகளிலும் நெட்டுருப்போட்டதனால் கூத்துத் துறைக்குள் இழுக்கப்பட்டார்.

ஒளிபொருந்திய கண்கள், உருண்டு திரண்ட தோற்றம், எதற்குமே அஞ்சாத போக்கு, ஏறுபோன்ற நடை இத்தனையையும் தன்னகத்தே கொண்டு இவர் கூத்தரங்கிலேறிச் சுவைஞர்களைச் சிறைப்பிடித்தார் என்றே சொல்ல வேண்டும். ஆரம்ப காலத்தில் பாஷையூரில் நடைபெற்ற ஞானரூபன், எஸ்தாக்கியார் கூத்துக்களிலும், 1938ஆம் ஆண்டு பவுலீனப்பர் கூத்திலும், 1939 ஆம் ஆண்டு பிலோமினம்மா கூத்திலும் தோன்றிச் சிறப்பாகப் பாடி நடித்தார்.

அமைச்சனாக நடித்ததினால் மக்களின் பாராட்டுக்களை அள்ளிச் சென்ற இவர் 1946ஆம் ஆண்டு ஞானசௌந்தரி கூத்திலும், 1949ஆம் ஆண்டு தேவசகாயம்பிள்ளை கூத்திலும் பாடி நடித்துப் புகழைத் தோற்காத ஒரு கூத்தாளியாக தன்னைப் பதிவு வைத்தார். 1952ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியரசன் கூத்தில் அமைச்சன் முள்ளிக் கொடையாக வந்து போன காட்சி இன்றும் கூட மனக்கண்ணில் தெரிகிறது. கண்டி அரசன் கூத்தில் இவர் பாடிய பாடல் இது!

கடலெழும் இரவிகண்ட காளம்போல் முகமும் மாறி
திடமற்று மயக்கமாகி தேர்வேந்தே இருப்ப தென்ன?
வடமுற்ற மார்பாவந்த வகைதனை எனக்கிப் போது
நடைமுறையி தையாநீங்கள் நவிலுவீர் அறியத்தானே!

**(கண்டிஅரசன்)**

## *அருமைமுத்து குருசுமுத்து (1918 - 1981)*



1918 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த குருசுமுத்து சிறுவயதில் தானே கூத்தில் பற்று வைத்தவராயிருந்தார். கட்டையான உருவம் குறுகுறுத்த பார்வை, கொத்தளக் கற்கோட்டை உறுதி, கொண்டலின் முழக்கம் இவைகள் தான் இவரின் வார்ப்பு. தளபதி எனறதும் பார்வையாளரின மனத்திரையில் தவறாமல் வந்து போவார் இந்தக் குருசுமுத்து. இவரின் கூத்துப்பாட்டு என்ன, குதித்தாடும் ஆட்டம் என்ன எல்லாமே விறுவிறுப்பு கொண்டவையாகத் தானிருக்கும்.

1938ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் அரங்கேறிய தேவசகாயம்பிள்ளை, செபஸ்தியார், ஞானசௌந்தரி, கண்டியரசன், கற்பலங்காரன் என்ற கூத்துக்களில் சிறப்பாகப் பாடி நடித்த இவர் தானொரு, திறமைமிக்க கூத்தாளி என்ற பதிவைச் சுவைஞரிடையே விட்டுச் சென்றுள்ளார். 1947ஆம் ஆண்டு பாஷையூரில் நடைபெற்ற ஞானரூபன் கூத்தில், இவர் தோன்றிய தளபதி பாத்திரமே கலானுபவமாகவும், கனகச்சிதமாகவும் அமைந் திருந்தது. அந்த ஞானரூபன் கூத்தில் இவர் பாடிய ஒருபாடல் இது!

மறைசெழுந்திலங்கும் இந்தமான நகர்புரக்கும் கோவே!
நறைசெழுந்திலங்கு கோமுன் நான்திறை கேட்டதற்கு
திறையளந்திடுவ தில்லை சீக்கிரமார்ப் பரித்து
பறைசெழுந்திடு சமர்தான் பண்ணிடச்சொன்னார் மன்னா!

**(ஞானரூபன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெந்தீஸ் சவிரிமுத்து (தங்கவர்ணம் 1892 - 1966)*



1892ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த சவிரிமுத்து கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் தமது ஆரம்பக்கல்வியைக் கற்றார். தம் மூதாதையரிடமிருந்து பெற்றுக் கொண்ட கூத்தார்வத்தினால் கூத்துத் துறைக்குள் நுழைந்தார்.

சிவந்த தேகம், செம்பட்டைமயிர், இலாவகமான நடை, லயிக்கவைக்கும் நடிப்பு இவைகள்தான் இவரைக் கூத்தரங்கிற்கு அறிமுகஞ்செய்தன. பாஷையூர் தந்த கூத்தாளிகளுக்குள்ளே சிலர் பெண் பாத்திரத்திற்கென்றே பிறந்து வந்தவர்கள் என்று கூடச் சொல்லிவிடலாம். அந்தச் சிலரில் இவர் குறிப்பிடக்கூடியவர். ''காதல்'' என்ற உருப்படியை, இவர் தனது கனிவான குரலில் பாடினால் கேட்டுக் கொண்டிருக்கலாம் போல் தோன்றும்.

பாஷையூரில் 1940 ஆம் ஆண்டு நடைபெற்ற கிறிஸ்தோப்பர் கூத்திலும், 1945ஆம் ஆண்டு அரங்கேறிய கவீனகன்னி கூத்திலும், 1946ஆம் ஆண்டு மேடையேறிய புனிதவதி கூத்திலும் பெண்பாத்திரமேற்றுப் பாடி நடித்துப் பெரும்புகழைத் தட்டிக் கொண்டார். என்னதானிருந்தாலும் 1947ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய ஞானரூபன் கூத்தில், பூக்காரியாக வந்து ஆட்டத்துடன் மாக்கோலம் போட்டதைப் பாராட்டாத சுவைஞர்களே இல்லை என்று துணிந்து கூறலாம். ஞானரூபன் கூத்தில் இவரது பாடல் இது!

செந்தாமரைப் பூவும் வெண்டாமரைப் பூவும்
செங்கழணிப் பூவும் பங்கழணிப் பூவும்
பந்து முலையாரே! இந்தா இருக்குது
பார்த்துக்கொள்ளும் விலைதீர்த்துக் கொள்ளும் தாறேன!

(ஞானரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அந்தோனி மடுத்தீஸ் (1913 - 1982)



பெண்ணுக்கேற்ற குரலும், பாத்திரத்திற்கேற்ற நடிப்பும் கைவரப்பெற்று பாஷையூர் கூத்தரங்கைக் களைகட்டவைத்த மடுத்தீஸ், 1913ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். நாட்டுக் கூத்திற்கே தன்னை அர்ப்பணித்த இவர், பாஷையூரில்1937ஆம் ஆண்டு அரங்கேறிய வாளபிமன்னன் கூத்திலும், 1945ஆம் ஆண்டு நடைபெற்ற கனக சபை கூத்திலும் சிறப்பாகப் பாடி நடித்துள்ளார்.

1946ஆம் ஆண்டு மேடையேறிய ஞானரூபன் கூத்தில் தாசியாக நடித்தது ஒரு திருப்பம் என்றே கூறவேண்டும். 1954ஆம் ஆண்டு திரும்பவும் மேடையேறிய ஞானசௌந்தரி கூத்தில், லேனாள் என்ற கொடியவளாகத் தோன்றிப் பாடிநடித்த காட்சிகள் அந்தப் பிஞ்சுவயதிலேயே என்நெஞ்சைக் கொள்ளை கொண்டுவிட்டன. அன்று நான் பார்த்த அவரது நடிப்பும், பேச்சும் எனது பிற்கால நாடக முயற்சிகளை வளர்த்தெடுக்க ஓர் உந்துசக்தியாய் அமைந்ததை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. இதோ கடலாயி உங்கள் முன் வருகின்றாள். அருளானந்தர் கூத்தில் அவரது பாடல் இது!

ஈதென்ன சூழ்நிலையோ - எங்களுக்கு
இப்படி ஏன் வரவோ
மூதுள்ளோர் செய்வினையோ - இப்போதிங்கு
மூண்டது எப்பழியோ!
மாயக்காரன் பிறிட்டோ - வந்தானிந்த
மறவநாட்டைக் கெடுத்தான்
தூயக்காரன் என்றல்லோ - மக்களவன்
சூதில் விழுந்துவிட்டார்!

(அருளானந்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தம்பிராசா யேமிசிங்கம் (1911 -1996)*



1911ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 3ஆம் நாள் பாஷையூரில் பிறந்த யேமிசிங்கம், இளமையிலிருந்தே நாட்டுக்கூத்தின் மீது பற்றுக் கொண்டவராயிருந்தார். சிலரினால் கூத்து கவரப்படுகிறது. ஆனால் கூத்தினால் சிலர் கவரப் படுகின்றனர். அப்படியே கூத்தினால் கவரப்படட ஒரு சில கூத்தாளிகளுள் யேமிசிங்கமும் ஒருவர்.

புலவர்கள் கூத்துக்களை ஆக்கிப் பாத்திரங்களைப் படைக்கும் போது, ஒரு சில கூத்தாளிகளை முன்னிறுத்தித்தான் தங்களின் எண்ணக் குதிரைகளைத் தட்டிவிடுகிறார்கள் போலும்!

அறிவுரைகூறும் அமைச்சனா, பொறுப்புள்ள கணவனா இதில் எந்தப் பாத்திரமானாலும் ஏற்று நடிப்பதற்கு இவர் பொருத்தமானவர் என்றே கூறுவேண்டும். 1939ஆம் ஆண்டு தொடக்கம் பாஷையூரில் மேடையேறிய கிறிஸ்தோப்பர், பூதத்தம்பி, செபஸ்தியார், கனகசபை, ஞானசௌந்தரி முதலிய கூத்துக்களில் பாடி நடித்துத் தன்திறனைத் துலாம்பரமாக வெளிக்காட்டியுள்ளார். இவர் 1996ஆம் ஆண்டு கார்த்திகைத்திங்கள் 23ஆம் நாள் மீளாத்துயிலில் கலந்துவிட்டார் என்ற துயரச் செய்தி கேட்டுக் கூத்துச் சுவைஞருலகம் அழுதது. 1952ஆம் ஆண்டு மேடையேறிய கண்டிஅரசன் கூத்தில், அமைச்சன் ஆலப்புளையாகத் தோன்றிச் சுவைஞர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய இவர் 1948ஆம் ஆண்டு பாஷையூரில் மீண்டும் அரங்கேறிய, ஞானரூபன் கூத்தில் அமைச்சனாக வந்து சிறப்பாக நடித்து இவர் பாடிய விருத்தம் இது!

காராளி சூழுலக மனைத்தும் நிற்கும்
    கற்றவிய முற்றவனே! கவினு லாவும்
ஓராளி செலுத்தி அரசாளும் கோவே!
    ஒளிரும் முடிவய வேந்தே! உரைக்கொண்ணாத
போராளி ஆசனத்தில் வீற்றி ருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருவலர்கள் அடிபணிந்து போற்ற நாளும்
நேராளி மார்கள் தங்கள்வருகை காண
நீதிமன்றம் மீது தமக்கேயே தானே!

(ஞானரூபன்)

***சூசை தம்பிப்பிள்ளை (1898 - 1969)***




மலையெனத் திரண்ட தோள்களும், மரணிக்காத குரல்வளமும், பீடுநடையும், பொருத்தமான நடிப்பும் கொண்டு பாஷையூர் கூத்தரங்கில் நடைபோட்டவர் தான் தம்பிப்பிள்ளை. 1898ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர், 1938ஆம் ஆண்டு நிகழ்ந்த பப்பரவாகன் ஆட்டக்கூத்திலும், 1946ஆம் ஆண்டு நிகழ்ந்த வெடியரசன் கூத்திலும் இவரது கூத்தின் ஆளுமையைப் புகழாதவர் எவரும் இல்லை எனலாம்.

இராவணன் வதம் கூத்தில் இராவணன் பாத்திரமேற்று சிறப்பாகப் பாடி இவர் நடித்துள்ளார் என்ற செய்தியையும் அறிய முடிகின்றது. இவர் இராவணன் பாத்திரமேற்றுப் பாடிய பாடல் இது!

மதியைப் பழிக்கும் வதனமும் - துள்ளும்
மானைப்போல் அழகான சாயலும்
பதியின்றிக் கிடக்கவும் ஆச்சுதோ - அதைப்
பார்த்திருக்க ஆண்மை போச்சுதோ

(இராவணன்வதம்)

***சவிரிமுத்து எமிலியானுஸ் (குலசேகரம் - 1902 - 1986)***



நல்ல சாரீரத்தாலும், நடிப்பாற்றலாலும் நாட்டுக் கூத்தில் பிரகாசித்தவர் எமிலியானுஸ். 1902ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 07 ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர் குணசித்திரப் பாத்திரத்தைக் கச்சிதமாய் செய்து முடிப்பதிலே ஒரு தனிப்பிறவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய அலேசு கூத்திலும், 1940ஆம் ஆண்டு மேடையேறிய தொன்நிக்கிலார் கூத்திலும் சிறப்பாகப் பாடி நடித்து தானொரு மூத்த கூத்தாளி என்பதை உறுதிப்படுத்தினார். 1986ஆம் ஆண்டு பாஷையூரில் மீண்டும் நிகழ்ந்த, ஞானரூபன் கூத்தில் இளவரசியின் தாய், ராணியாகத் தோன்றி அற்புதமாகப் பாடி நடித்து எல்லோராலும் பாராட்டப் பெற்றார். இவர் 1968ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 13ஆம் நாள் இறந்தார். அந்த ராணியாகத்தோன்றிய இவர் பாடிய பாடலிது!

பாங்கி துணையும் அன்னை பற்றுதலும் நந்தயவும்
ஓங்கு புகழும் கவினுமுற்ற மதிமந்திரிபோல்
தாங்குகளி மடமுமது தாசி எனவே சுறுக்கில்
மாங்குயிலே! தேர்ந்துவழி நடந்து செல்வீரே!

(ஞானரூபன்)

*செல்லர் இராயப்பு (1900 - 1969)*



1900ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இராயப்பு உயர்ந்த தோற்றமும், உன்னதமான நடிப்புத்திறனும், இனிய குரல்வளமும் கொண்டவர். நாட்டுக்கூத்தில் இயல்பாகவே கொண்ட பற்றினால் இவர் பாஷையூர் கூத்தரங்கினுள்ளே நுழைந்தார். பாஷையூரில் 1938ஆம் ஆண்டு நிகழ்ந்த அந்தோனியார் கூத்திலும், 1950ஆம் ஆண்டு நிகழ்ந்த கத்தறினாள் கூத்திலும், 1953ஆம் ஆண்டில் நிகழ்ந்த செபஸ்தியார் கூத்திலும் இவர் தனது சிறப்பான கலையாளுமையை வெளிப்படுத்திச் சுவைஞரின் மனங்களைச் சிறைப்பிடித்தார்.

இவர் ''குறம்'' பாடினால் சுவைத்துக் கேட்க ஒரு கூட்டமே கூடிவிடும். செபஸ்தியார் கூத்தில், வேடனாகத் தோன்றி இவர் பாடிய பாடல் இன்றும் கூடக் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அந்தப் பாடல் இது!

சாகரம் சுற்றும் பூவில் சண்டமாருதம்போல் வேட்டை
வேகரமுடனே ஆடும் வீரரே! விளம்பக்கேளீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீகரமுடை யோனான செபஸ்தியான் தனையிப்போது
சேகரமுடனே எய்து சீக்கிரம் வருகுவீரே!

(செபஸ்தியார்)

*தீயோ அருளப்பு (உலகபாஸ் 1909 - 1970)*



1909ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த அருளப்பு, இளவயதிலே நாட்டுக் கூத்தில் ஆர்வம் கொண்டவராய் இருந்தார். வீணையின் நாதம் போன்ற குரலும், விறுவிறுப்பான நடிப்பாற்றலும் வாய்க்கப்பெற்ற இவர் 1935 ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய, அழகவல்லி கூத்தில் உலகபாஸ் என்ற பாத்திரமேற்று நடித்ததினால் அருளப்பு என்ற பெயருடன் உலகபாஸ் வந்து ஒட்டிக் கொண்டது.

தொடர்ந்து அரங்கேற்றம் கண்ட ஞானரூபன், அந்தோனியார், செபஸ்தியார் முதலிய கூத்துக்களில் தோன்றிச் சுவைஞர்களின் மனதில் இடம்பெற்றார்.

1947ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய அருளானந்தர் கூத்தில், மனைவியாகப் பாடி நடித்துச் சுவைஞர்களை மயக்கம் கொள்ள வைத்துவிட்டார். மயக்கந்தரும் அப்பாடல் இது!

இப்படியோர் கற்பனையோ நெஞ்சம் - மாற்றி
எங்களை ஏமாற்றிவிடக் காண்பதென்ன வஞ்சம்
செப்படி வித்தைகளென்ற பஞ்சம் - நீங்கிச்
சேமமுடன் வாழ்வளித்த தேவையுணர் கொஞ்சம்!

(அருளானந்தர்)

*தீயோ பாவிலுப்பிள்ளை (1897 - 1946)*



1897ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த பாவிலுப்பிள்ளை நல்ல குரலோடு, நடிப்புத் திறனும் கொண்டு விளங்கினார். கூத்தில் இயல்பாகவே நாட்டங் கொண்ட இவர், 1936ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய பப்பரவாகன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஆட்டக்கூத்தில் தோன்றிக் கூத்துத்துறையில் தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

திடகாத்திரமான தேகக்கட்டும், துடிப்பான சொல்வீச்சும் கைவரப்பெற்ற இவர், கொச்சகத்துடன் தொடுத்துக் தருவைப்பாடி முடிப்பதில் வல்லவர் என்பதை ஊரறியும். 1936ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த சவீனகன்னி கூத்தில் அரசனாகத்தோன்றிப் பாடித் தன் கூத்துப் புகழை வளர்த்துக் கொண்டார் என்றும் அறியமுடிகின்றது. சவீனகன்னி கூத்தில் இவர் பாடிய பாடல் இது!

இளம்பெற மதியவான திலங்குனம மாரிபெய்ய
வளம்பெற எஸ்பானிய தேச வனப்பெல்லாம் உரைக்கக்கேட்டு
உளம்பெற மகிழ்ச்சியானேன் உயர்பரன் பதத்தை நாளும்
தளம்பெற வணங்கி வாழ்த்தித் தகுமரசியற்றுவோமே!

**(சவீனகன்னி)**

### *தீயோ பொனிப்பாஸ் (1898 - 1964)*



1898ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 24ஆம் நாள் பாஷையூரில் பிறந்த பொனிப்பாஸ் நாட்டுக்கூத்து அபிமானம் கொண்டவராயிருந்தார். வரப்பிரசாதமாக அமைந்த குரல், வாட்ட சாட்டமான உடல்வாகு, வீச்சடங்காத நடிப்பு, வீறுமிக்க பேச்சு இவைகள்தான் பாஷையூர் கூத்தரங்குக்கு இவரை இழுத்துவிட்டதெனலாம்.

1936ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் மேடையேறிய சுளியார், பூதத்தம்பி, மீகாமன் என்ற கூத்துக்களில் தோன்றிய இவர், பப்பரவாகன் என்ற ஆட்டக்கூத்திலும் நடித்து தானுமொரு திறமைமிக்க கூத்தாளி என்பதை நிரூபித்தார். இன்னிசை, காதல் என்ற உருப்படிகளைப் பாடுவதிலும் இவர் வல்லவராயிருந்தார்.

1947ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த சவீனகன்னி கூத்தில் யூதனாகப் பாடி நடித்துச் சுவைஞர்களின் மனங்களையெல்லாம் சுண்டியிழுத்த பொழுதை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். இதோ அவர் பாடிய அந்தப்பாடல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணமோடு செறிந்த நாற்குணங்கள் ஓங்கும்
நாரியரே! ஓர்வசனம் வழுத்தக் கேளீர்
ஆணழகனாக நான் இருக்கும் போது
ஆவதொரு தீதுவரப் போமோ கண்ணே!
வேணதுயர் பட்டழுது வருந்த வேண்டாம்
வேந்தனிடம் சென்று வெற்றிகொண்டு வாறேன்
காணரிய கலாபமணி மனையின் மீது
கவனமுடன் இருப்பீர் சுகமாய் தானே!

**(சவீனகன்னி)**

1964ஆம் ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10ஆம் நாள் மீளாத்துயில் கொண்ட இவரின், சுவையான பாடல்களைக் கேட்டவரின் மகிழ்ச்சியை அளவிட்டுச் சொல்ல முடியுமோ!

### *கபிரியேல் தர்மராசா (1911 - 1969)*



1911ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த தர்மராசா, நாட்டுக்கூத்தில் கொண்ட ஈடுபாட்டால் கூத்தாளியாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டார். கடிதம் பரிமாறும் ஒட்டன், அரச ஊழியம் புரியும் சேவகன் போன்ற சிறிய பாத்திரங்களில் தோன்றிய இவர் சுவைஞர் களைக் களிப்பில் ஆழ்த்தி வந்தார்.

நல்ல குரலாலும், நவரசம்ததும்பும் நடிப்பாலும் 1938ஆம் ஆண்டு தொடக்கம் ஞானரூபன், கிறிஸ்தோப்பர், கண்டிஅரசன் முதலிய கூத்துக்களில் தோன்றிச் சிறப்பாகப் பாடி நடித்துள்ளார். 1947ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய கிறிஸ்தோப்பர் கூத்தில் துவேசியாகத் தோன்றி இவர் பாடிய பாடல் இது!

தந்திட்டேன் எனவுரைத்த தபோ நிதியே!
தகைமையுறு பால்தேன் பொழியும் செல்வம்
வந்துற்ற கனானென் ஜெனன நாடு
வருகுபெரு தேகபலம் வாய்ந்த என்பேர்
நந்துற்ற வாகைபுனை துவேசி என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானிலத்தில் புகலிடுவார் யானும் கந்த
கொந்துற்ற சிலுவைமன்னன் தனக்குத் தொண்டு
கொள்ளவந்தேன் விள்ளிடுமக் கோனூர் தன்னை!

**(கிறிஸ்தோப்பர்)**

### *அருமைமுத்து சின்னத்துரை (1907 - 1971)*



இனிய குரலும், ஒயிலான நடையுங்கொண்ட சின்னத்துரை 1907ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். நாட்டுக்கூத்துப் பாடல்களைப் பாடுவதில் அதீத விருப்பங் கொண்ட இவர், 1936 ஆம் ஆண்டுக்குப் பின்னர், கூத்தரங்கில் தோன்றிப் பெண்பாத்திரமேற்றுப் பாடிநடித்துச் சுவைஞர்களைக் கவர்ந்தார். 1946ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய வாளபிமன்னன் கூத்தில் கண்ணை உருட்டிக் காரியம் சாதிக்கும், வஞ்சகப் பெண்ணாக நடித்துப் பார்வை யாளரின் மனங்களைக் காந்தம் போல இழுத்ததை இன்றும் கூட நினைவிலிருந்து அகற்ற முடியவில்லை.

ஞானசௌந்தரி கூத்தைத் தொடர்ந்து 1952ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த கண்டி அரசன் கூத்திலும், 1948ஆம் ஆண்டு நிகழ்ந்த புனிதவதி கூத்திலும் தோன்றிச் சிறந்த கூத்தாளி என்ற தகைமையைப் பெற்றார். 1950ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த செபஸ்தியார் கூத்தில், அபிரா என்ற பாத்திரத்தில் தோன்றிய இவர் நடிப்பைக் கூத்துலகம் தனக்குள் பதிவு செய்து கொண்டது. அபிராவாக இவர் பாடும் பாடல் இது!

மன்மதவீரா! மடவார்கள்
மயங்கு சிங்காரா!
என்மனத்தீரா! இனியொன்றாய்
இருப்போமே சீராய்!

**(செபஸ்தியார்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***குருசார் பாவிலுப்பிள்ளை (நேசத்துரை 1924 - 2001)***



வசீகர முகம், வீச்சுக் கொண்ட நடிப்பு, தெளிந்த குரல், தரமான உச்சரிப்பு என்ற கூத்து விழுமி யங்களைத் தன்னகத்தே கொண்ட பாவிலுப்பிள்ளை, குருசார் றோசம்மா என்பவர் களுக்கு மகனாக 1924ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 10ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் கற்ற இவருக்குக் கல்வி ஒரு கண்ணாக விளங்க மறுகண்ணாக நாட்டுக்கூத்து விளங்கியது.

1948ஆம் ஆண்டு பாஷையூரில் மீளவும் அரங்கேறிய ஞான சௌந்தரி கூத்தில் பிலேந்திரனாகவும், 1952ஆம் ஆண்டு நிகழ்ந்த கற்பகமாலா கூத்தில் கற்பகமாலாவாகவும் பாடி நடித்துச் சுவைஞர் களைக்கவர்ந்து, கூத்தேட்டில் தன்னையொரு புதியவரவாகப் பதிவுவைத்த இவர் 2001ஆம் ஆண்டு தைத்திங்கள் 31ஆம் நாள் மீளாத்துயிலில் கலந்தார்.

தொடர்ந்து நொண்டி(1955) கிறிஸ்தோப்பர் (1956) முதலிய கூத்துக்களிலும், மண்டைக்கல்லாறில் அரங்கேறிய அந்தோனியார் கூத்திலும் (1957) பாடி நடித்துச் சுவைஞர்களின் ஏகோபித்த பாராட்டினைப்பெற்றார். 1965ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த கலைஞர் கௌரவிப்பில் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை யிடமிருந்து ''கூத்துவிறலோன்'' என்ற விருதையும் பெற்றுக் கொண்டார். பலகூத்துக்களை இயக்கி மேடையேற்றியுள்ள இவர் சவீனகன்னி கூத்தில் சவீனகன்னியாகத்தோன்றிப் பாடிய பாடலிது!

படிதனில் இரச வீணை
　　பாங்கு செங்கரத்தி லேந்தி
வடிவுறு கானம் பாடும்
　　வயங்குமென் மகனாக நேற்று
துடியுடன் அழைத்துக் கூட்டி
　　தொடர்ந்தனை எனவே கேட்டேன்
கெடுமதி செய்யா வண்ணம்
　　கிருபையோ டருளு வாயே! **(சவீனகன்னி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வெலிச்சோர் அந்தோனிப்பிள்ளை (சின்னத்துரை 1929......)***



கூத்துப்பலம் முற்றிப்பழுத்து, மூத்து நின்ற குடும்பத்திலே வந்த அந்தோனிப்பிள்ளை 1929ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 02ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். கொழும்புத்துறை பாடசாலையில் கற்ற கல்விக்கு முழுக்குப் போட்டாலும், கூத்துப்பாடல்களைத் தலை முழுகும் துணிவு இவரிடம் இருக்கவில்லை.

1945ஆம் ஆண்டு மண்ணித்தலையில் அரங்கேறிய கற்பகமாலா கூத்தில் ஞானதீபனாகத் தோன்றி நடித்துச் சுவைஞர்களை மகிழவைத்தார். தொடர்ந்து 1946ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய பூதத்தம்பி கூத்தில் அவுறோன் மன்னனாகவும், பூதத்தம்பியின் மனைவி அழகவல்லிக்குத் தந்தையாகவும் பாடி நடித்துப் புகழ்பெற்றார். 1954ஆம் ஆண்டு பாஷையூரில் நடைபெற்ற கண்டிஅரசன் கூத்தில் அமைச்சன் முள்ளிக்கொடையாகத் தோன்றிப் பார்வையாளர்களைப் பரவசத்தில் மிதக்கவைத்தார்.

மெல்லிய தோற்றமும், கிண்கிணி நாதம் போன்ற குரலும், மனதிற்கினிய நடிப்பும், மறக்கமுடியாத அரங்க ஆளுமையும் கொண்ட இவர் தொடர்ந்து பாஷையூர் சந்தித்த சவேரியார் கூத்தையும்(1975), சற்குணானந்தன் கூத்தையும் (1981), இலங்கையர்கோன் கூத்தையும்(1985), கற்பகமாலா கூத்தையும் (2005) நெறியாள்கை செய்து அரங்கேற்றிய பெருமை இவருக்குண்டு. கண்டிஅரசன் கூத்தில் முள்ளிக்கொடையாகத் தோன்றி இவர் பாடிய பாடலிது!

பிரமித் தளையின் அருந்தவத்தினால்
பெற்ற புத்திரி மற்றோர் உத்தமி
பரிவுற் றிடுகும் குமாரி காமிகாண்
பத்தா வானவர் ஆலப்புளை உத்தமரையா!

**(கண்டிஅரசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வயித்தி சீமோன்பிள்ளை (1905 - 1970)***



கட்டையான தோற்றமுடையவராயிருந்தாலும், கனிவான குரல்வளம் சீமோன் கொண்டிருந்ததாலே கூத்தரங்கு அவரை இழுத்துக் கொண்டதெனலாம். 1905 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர், 1939ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் நிகழ்ந்த பப்பரவாகன், ஞானரூபன், செபஸ்தியார் முதலிய கூத்துக்களில் அமைச்சனாகப் பாத்திரமேற்றுப் பாடலுடன் தனக்குரிய ஆட்டமும் கலந்து எல்லோருக்குமே கலைவிருந்தளித்தார்.

1949ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த அருளானந்தர் கூத்தில், இளவரசன் பாத்திரமேற்றுப் பாடிநடித்த, இவருக்கு மக்களின் பாராட்டுக்கள் மலைபோலக் குவிந்தன. இவர் பாடிப் புகழ் பெற வைத்த பாடல் இது!

கட்டாரி யிட்ட மணிக்கவசம் எல்லாம்
கணப்பொழுதில் காற்றுமுன் பஞ்சு போலே
விட்டாவி பறந்திடவே செய்வேன் எந்தன்
வேதகுரு வடிவானோன் தனைப் பகைத்தால்
எட்டாத கொம்புத்தேன் கிடைக்கும் என்று
எண்ணியெண்ணி விண்ணோக்கிப் பார்த்த வாறு
கொட்டாவி விட்டவொரு முடவன் போலே
குன்றிவிடும் உன்வாழ்க்கை அரசுந் தானே!

**(அருளானந்தர்)**

***வயித்தி நசரேற் (1910 - 1964)***



பெண்பாத்திரத்திற்கென்றே அமைந்த தோற்றம், பொருத்தமான நடிப்பு, இனிமையான குரல் என்பவைகளை நசரேற் கொண்டிருந்ததனால் தான் பாஷையூர் கூத்தரங்கு அவரைப் பயன்படுத்தியது. 1910 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர் கூத்துப் பாடல்களைச் சரளமாகப் பாடும் சக்திபடைத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945ஆம் ஆண்டுக்குப் பின்னர் நொண்டி, கனகசபை, பூதத்தம்பி முதலிய கூத்துக்களில் பாடிநடித்துத் தன் புகழைத் தக்கவைத்துக் கொண்டார். 1949ஆம் ஆண்டு பாஷையூரில் நடைபெற்ற, சவீனகன்னி கூத்தில் இவர் வர்த்தகனாகத் தோன்றிச் சிறப்பாக நடித்ததைச் சொல்லவா வேண்டும். இவர் பாடிய அந்தப் பாடல் இது!

முத்தொடு ரத்தினமுற்று சரிகை பொற்பாகையுமே இலங்க
முன்னியங் குலிகளில் பொன்னவிரிடுபல மோதிரமே அலங்க
பத்தரை மாற்றுயர் சித்திரமாலைகள் பனிசரமே கிலுங்க
பவளகண்டிகை கழல்தவழ பீதாம்பரப்பட்டுடையே துலங்க
எத்திசை புகழ்நவரத்தின வைர வைடூரிய மரகதங்கள்
இலங்கிடு பலவித கமலமும் கற்களும் எழில்மிகு திரவியங்கள்
உத்தமமோடு நல்விற்பனைபுரியு றிச்சாட்டெனும் வர்த்தகனும்
ஊழியகாரனும் மேனியுறும் சபைமீதினில் வந்தனரே!

**(சவீனகன்னி)**

### *பேதுரு சின்னத்தம்பி (சுல்தான் 1922 - 1971)*



கணீரென்ற குரலோடும், காற்றுப்போல நெளிந்து துள்ளியாடும் உடலோடும் அரங்குக்கு ஒருவர் வருகிறாரென்றால் அவர் சின்னத்தம்பியாகத்தான் இருப்பார். 1922ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர், 1949ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரங்குகளில் நிகழ்ந்த பல கூத்துக்களில் நடித்துப பங்காற்றியுள்ளார்.

1951ஆம் ஆண்டு பாஷையூரில் நடைபெற்ற தேசிங்குராசா கூத்தில், முஸ்லிம் சுல்தானாக தோன்றியமையினால் சுல்தான் என்ற பட்டப் பெயரும் இவருடன் வந்து ஒட்டிக்கொண்டது. தொடர்ந்து கனகசபை, நொண்டி முதலிய கூத்துக்களில் தோன்றிய இவர், சுவைஞர்களால் ஆற்றலுள்ள கூத்தாளியாக இனங் காணப்பட்டார். 1953 ஆம் ஆண்டு நடைபெற்ற தேவசகாயம்பிள்ளை கூத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணனாகத் தோன்றி இவர் பாடிய ஒரு பாடல் இது!

முன்னைநாள் உதித்த தெல்லாம் முழுப் பசாசென உரைத்தாய்!
சன்னைசெய் தெமையிகழ்ந்து தாறு மாறாகச் சொன்னாய்!
தன்னையே நிகர்க்கும் வீரன் தானின்றித் தரணி ஆளும்
மன்னன் பிரதானிக் கிந்த வகைசொல்லி மிகச் செய்வோமே!

**(தேவசகாயம்பிள்ளை)**

***தம்பித்துரை சின்னப்பு (துலுக்கன் 1909 - 1981)***



1909 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த சின்னப்பு, கூத்துப் பாடல்களில் பெருந்தாகங் கொண்டவராயிருந்தார். திடகாத்திரமான தேகம், தண்ணீரெனச் சலசலத்துப் பாயும் தலை சிறந்த நடிப்பும், தடுமாற்றமில்லாப் பேச்சும் கொண்ட இவரின் தோற்றம் அரங்கிற்கு எடுப்பாகத் தானிருக்கும்.

1946 ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய ஞானசௌந்தரி கூத்தில், றோமாபுரியை ஆளும் தருமராசாவுக்கும் பகைவனான துலுக்க மன்னனுக்கும் யுத்தம் நடப்பதாக ஒருகாட்சி வருகின்றது, அக்காட்சியில் துலுக்க மன்னனாகத் தோன்றி நடித்த இவர் சுவைஞர்களிடையே புகழ்பெற்றார். கழிநெடில் பாடுவதில் சமர்த்தரான இவர் தொடர்ந்து பூதத்தம்பி, கனகசபை, வெடியரசன் முதலிய கூத்துக்களிலும் தோன்றித் தனது கூத்தாற்றலை நிரூபித்தார். 1951 ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய தேவசகாயம்பிள்ளை கூத்தில் இவர் குருவாக நடித்துப் பாடிய மதுரமான பாடல் இது!

தப்பாத மொழிகள் பேசித் தரணிகளதனை யாள்மன்னர்
எப்போதும் புகழ்வாகை எய்திடுகற் பித்தானே!
ஒப்பாக இரண்டுபேரும் உசாவியே விசாரமுற்று
இப்போதான் வந்த செய்தி இன்னதென் றியம்புவீரே!

**(தேவசகாயம்பிள்ளை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. 1945 க்குப் பின்னர் பாஷையூர் அரங்கின் கூத்தாளிகள்

மண்ணின் பாடல்கள் என்று சொல்லி மார்பு தட்டிப் பெருமைப்படக் கூடிய, நாட்டுக்கூத்துப் பாடல்கள் எல்லாம் நமது பண்பாட்டுக் கோலங்களையே பிரதிபலித்து நிற்கின்றன, கூத்துப் பாடல்களை உயிர்த்துடிப்புள்ள பாடல்கள் என்று விமர்சனக் கண்கொண்டு கூத்து நோக்காளர்கள் கூறி வருவது கவனிக்கத் தக்கது. சாதாரண மக்களால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய தாகக் கூத்துப் பாடல்கள் அமைவதனாலே தான் இப்பாடல்கள் காலங்கடந்து நிலைத்து வாழ்கின்றன. எளிய பாடல்கள் எவ்வளவு தூரம் மக்களைக் கவருகின்றன என்பதற்கு, நாடகத் தந்தை சங்கரதாஸ் சுவாமிகள் நுளம்பைப் பற்றி எழுதிய ஒருபாடலைக் குறிப்பிடலாமென நினைக்கின்றேன்.

"மோகன ராகம் போலச் சத்தம் - போட்டு
முன்னே நின்று செய்திடும் யுத்தம்"

இப்படிப்பட்ட பாடல்களைத்தான் கூத்தை ஆக்கும் புலவர்களும் எழுதுகிறார்கள். அந்தப் பாடல்களைத் தான் கூத்தாளிகளும் எந்த அரங்குகளிலும் பாடி நடித்துச் சுவைஞர்களின் பாராட்டினைப் பெறுகின்றனர். கொடூரமான சவால்களுக்கு மத்தியில் கூத்தை, நலிந்து போகவிடாமல் கைக்குள் குழந்தையாக மெய்க்குள் போர்த்து மூடி வளர்த்துவிட்ட பெருமை கூத்தாளிகளுக்குண்டு. மூத்த கூத்தாளிகளிடமிருந்து பெற்ற கூத்தைத் தொடர்ந்து இன்றுவரை பேணியவர்களைத் தொட்டுக் காட்ட வேண்டியது நம்முன்னுள்ள காத்திரமான பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அண்ணாவியார் மடுத்தீஸ் பாவிலுப்பிள்ளை (1928 - 1979)



எங்கே தாள சுத்தியுடன் கானாமிர்தமான குரல் கேட்கிறதோ அங்கே பாவிலுப்பிள்ளையின் பிரசன்னம், தவிர்க்க முடியாததாகும் என்ற சுவைஞர்களின் ஏகோபித்த பாராட்டினைப் பெற்ற பாவிலுப்பிள்ளை. புகழ்பூத்த அண்ணாவியார் ஞானப்பு மடுத்தீஸ் - செல்லாச்சி என்பவர்களுக்கு மகனாக 1928 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 6ஆம் நாள் பாஷையூரிலே பிறந்தார். கருவிலே திருவைப் பெற்றார் என்று கற்றோர்கள் மெச்சிக் கூறும் அமுதமொழி, கூத்தைப் பொறுத்த மட்டில் இவருக்கு பொருத்தமானதாக அமையும்.

இளம் வயதிலே கூத்தைத் தன்னுடன் வரித்துக் கொண்ட இவரிடம் வளமான குரலும், வலுவான உடற்கட்டும், அரங்கையாளும் திறனும், ஒப்புயர்வற்ற நடிப்பும் பொலிந்து விளங்கின. ஞானரூபன், கிறிஸ்தோப்பர், பூதத்தம்பி, அந்தோனியார், தேவசகாயம்பிள்ளை, புனிதவதி, வெடியரசன் என்ற ஆரம்ப காலக் கூத்துக்களைப் பாஷையூர் அரங்குகளில் கண்ட இவரது கூத்து வீரியம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

அதன் விளைவாக ஞானசௌந்தரி கூத்தில் பிலேந்திரனாகவும் (1951), கண்டியரசன் கூத்தில் மன்னனாகவும் (1954), கற்பகமாலா கூத்தில் வீரசிம்மனாகவும் (1952) தோன்றித் தமது கூத்தாளுமையை வெளிப்படுத்தினார். 1961 ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கட்டபொம்மன் கூத்தை நெறியாள்கை செய்த இவர், 1978ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 10ஆம நாள் யாழ். மாவட்டக் கூத்தாளிகளை ஈடுபடுத்திக் கண்டியரசன் கூத்தைப் பாஷையூரில் மேடையேற்றித் தானுமொரு அண்ணாவியார் என்பதைக் கோடிகாட்டினார். இக்கூத்தைக் கண்டுகளித்த மூதறிஞர் சொக்கன், ''கூத்து வல்லோன் பாவிலுப்பிள்ளை'' என்று பாராட் டியது என்னால் மறக்கமுடியாத நிகழ்வாகிவிட்டது.

1970 ஆம் ஆண்டு நொண்டி கூத்தை இலங்கை வானொலியில் ஒலிபரப்பி, எல்லோரினதும் செவிகளைக் குளிரவைத்த இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்துறை, வட்டுக்கோட்டை, மாதகல், சில்லாலை, தாளையடி, செம்பியன்பற்று முதலிய இடங்களிலும் மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களிலும் கூத்துக்களை நெறியாள்கை செய்து மேடையேற்றுவதிலும் வெற்றிகண்டார் என்பது வெறும் புகழ்ச்சியல்ல.

கூத்து வானத்தின் கிழக்குவெளுத்த வேளையிலே, இளங்கதிரவனாய் எழுந்து வந்த பாவிலுப்பிள்ளை 1979ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 8ஆம் நாள் சுவைஞருலகம் கண்ணீர் சிந்த மரணத்திரையினுள் மறைந்தார். பாஷையூரில் நிகழ்ந்த அருளானந்தர் கூத்தில் (1958) அருளானந்தர் பாத்திரத்தில் தோன்றி அவர் பாடிய ஒரு சுவையான பாடல் இது!

அனைத்தையும் படைத்துக் காக்கும்
அமலனே! ஞான மேலோர்
மனத்தையும் படைத்தே பொல்லார்
மமதை சங்கரிப்பீர் இன்று
சினத்தினால் என்னை வதைக்கச்
செய்த சூனியங்கள் எல்லாம்
கனத்தினால் அழிந்து போகக்
காட்டுவீர் யேசு நாதா!

**(அருளானந்தர்)**

### *கபிரியேல் யோண்பிள்ளை (1918 -1967)*



1953 ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். ''துள்ளி யாடுதென் உள்ளமே! விரைவினில் துள்ளியாடுதென் உள்ளமே'' என்று பாடிக் கொண்டே செல்லும் வழிப்போக்கனாக யோண் பிள்ளை, ஆட்டத்துடன் பாஷையூர், கூத்தரங்கில் தோன்றிச் சுவைஞர்களைக் கவருவது கற்பகமாலா கூத்தில் இடம்பெறுகிறது. 1918 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவரிடம் கூத்தாளுமை இளம்வயதிலேயே காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமையான குரலும், எல்லை காணாத நடிப்புத்திறனும் கொண்ட இவர் 1952ஆம் ஆண்டு கண்டி அரசன் கூத்திலும், 1953 ஆம் ஆண்டு கிறிஸ்தோப்பர் கூத்திலும், 1955 ஆம் ஆண்டு புனிதவதி, அந்தோனியார் கூத்துக்களிலும் பாத்திரமுணர்ந்து நடித்துப் பலரின் பாராட்டைப் பெற்றார். நவரசங்களுள் ஒன்றாகிய நகைச்சுவையை பாஷையூர் கூத்தரங்குகளில் காணவைத்த பெருமையும் இவருக்குண்டு. 1950 ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய ஞானரூபன் கூத்தில் சேவகனாகத் தோன்றி இவர் பாடிய பாடல் இது!

ஆரடா நீயொருத்தன் தனித்துக் குந்தி
அதிங்கிமுளி பிதுங்கி ஒன்றும் அறியார் போலே
காரடா இவ்வேளையிலே மவுன மாகக்
கனயோக்கியன் போலிருந்தாய் கருத்தி லென்ன
ஊரடா ஏது உந்தன் நாமம் ஏது
உன்மடியில் வெகுகனமாய் ரொக்க மென்ன
பாரடா இவன் மடியைச் சோதித்து நன்றாய்
பார்த்த பின்பு படும்பாடு படுத்து வோம்! **(ஞானரூபன்)**

***நல்லையா முடியப்பு (1921 - 1992)***



பொன்னாஞ்சி என்று ஊரில் செல்லமாக அழைக்கப்படும் முடியப்பு, கூத்தரங்கில் சிலாகித்துப் பேசப்படும் ஒருவர். 1921 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவரிடம் கூத்துஞானம் நிறையவே அப்பிக் கிடந்தது. சிவந்தமேனி, செழுமையான குரல்வளம், நிலமளந்த நடை, நயக்கவைக்கும் நளினம் இப்படிப்பட்ட பெண்பாத்திரத்திற்குத் தேவையான கலைப்பண்புகள் இவரிடம் இருப்பதைக் கூத்துலகம் அறிந்து கொண்டதில் வியப்பொன் றுமில்லை.

1946 ஆம் ஆண்டு தொடக்கம் பாஷையூரில் அரங்கேறிய கிறிஸ்தோப்பர், பூதத்தம்பி, கனகசபை முதலிய கூத்துக்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடி நடித்த இவர் 1952ஆம் ஆண்டு கற்பகமாலா கூத்திலும், 1953ஆம் ஆண்டு புனிதவதி கூத்தில் தாசியாகவும் நடித்துப் புகழேணியின் உச்சிக்கு ஏறிச் சென்றார். 1992 ஆம் ஆண்டு இவ்வுலகவாழ்வை நீத்த இவர், 1947ஆம் ஆண்டு மேடையேறிய ஞானரூபன் கூத்தில் இளவரசியாகத் தோன்றிப் பாடிய இன்னிசை இது!

பொய்ப்பட்ட துள்ளிடையாய் பூவைமட மாதேகேள்!
மெய்ப்பட்டங் கொண்டு விளங்குமந்த வாலிபனை
கைப்பட்டமாகக் கலந்த ணைந்தால் அல்லாது
மைப்பட்ட தென்னுடைய மாளிகைக்கும் வாரேன்!

(ஞானரூபன்)

### *சூசைமுத்து கெலிசித்துரை (1921 - 1985)*



1921 ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த கெலிசித்துரை, இளம் வயதிலேயே கூத்துப் பாடல்களை இனிமையாகப் பாடும் வல்லமை பெற்றிருந்தார். பாஷையூரில் 1946ஆம் ஆண்டு மேடையேறிய அந்தோனியார் கூத்திலும், 1950ஆம் ஆண்டு நிகழ்ந்த செபஸ்தியார் கூத்திலும் இவர் சிறப்பாகப் பாடி நடித்துள்ளார்.

1952ஆம் ஆண்டு மேடையேறிய கற்பகமாலா கூத்தில் வீரசிம்மன் என்ற பாத்திரமேற்றுக் கவரும் ஆட்டத்துடன் பாடி நடித்ததை எவரும் இலகுவில் மறந்துவிடமுடியாது. தொய்வடைந்து தேயும் நிலையிலிருந்த ஆட்டக்கூத்து, இக்காலகட்டத்தில் மீண்டும் முளைவிடுவதை அவதானிக்கக் கூடியதாயிருந்தது. வீரசிம்மன் பாத்திரமேற்று இவர் பாடிய பாடல் இது!

பாரில் எனக்கின்ப சார பரிமள
பாக்கிய சலாக்கியமே மணியே!
நேரில் உனக்கிணை யாரோ புவிதனில்
சீராய் எடுத்துரைப்பாய் கிளியே!
கோக நதமென்ன வாக இலங்கிடு
வசீகர மாமதன மணியேயுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகனப் பார்வைகள் ஆரோ மயங்கிட
சீராய் எடுத்துரைப்பாய் கிளியே!
சிற்றின்ப ஆசைகொள் மற்றின்ப ஆசைகள்
தேசத்தில் பேசஉண்டோ பெண்ணாளே!
மற்றொன்றும் பேசாது கிட்டே வாராய்நீ
மர்மத்தை நானறியப் பெண்ணாளே!

**(கற்பகமாலா)**

### *யோசேப்பு தேவசகாயம்பிள்ளை (1916 - 1971)*



1916ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த தேவசகாயம்பிள்ளை, கூத்துப் பாடல்களைச் சுவையாகப் பாடுந் திறனைச் சிறுவயதிலேயே பெற்றிருந்தார். இவர் 1950ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த ஞானசௌந்தரி கூத்தில் தளபதியாகவும், 1951ஆம் ஆண்டு நிகழ்ந்த கிறிஸ்தோப்பர் கூத்தில் முனிவராகவும் தோன்றிச் சிறப்பாக நடித்தார்.

1952ஆம் ஆண்டிற்குப் பின்னர் கண்டி அரசன், பூதத்தம்பி, கனகசபை முதலிய கூத்துக்களில் சிறப்பாகப் பாடி நடித்துத் தானுமொரு கூத்தாளி என்ற புகழைத் தக்கவைத்துக் கொண்டார். "சங்கைபொங்கிய துங்கனேன் அழைத்தான்" என்று இவர் பாடும் தளபதியின் வருகைப் பாடல் இன்றும் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. 1971 ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 19 ஆம் நாள் மீளாத்துயிலில் கலந்துவிட்ட இவர், 1948ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கிறிஸ்தோப்பர் கூத்தில் முனிவன் பாத்திரமேற்றுப் பாடிய இப்பாடலிலே இனிமை சொட்டுகின்றது.

சடாமுடி சரிந்துஆட சாத்வீகம் மனதிற் கண்ட
மடாதனர் மாய்கையோட மரிசெப மாலை நீட
விடாச்செப தவமேகொண்டு விமலருக்காய் நிஷ்டை பூண்ட
அடாத்தன மில்லா ஞான அருந்தவ முனிவந்தாரே!

**(கிறிஸ்தோப்பர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *தம்பாப்பிள்ளை அந்தோனியப்பு (1920 - 1971)*



சாரீர வளமும், சாரீரதிடமுங் கொண்ட அந்தோனியப்பு 1920ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். பாலவயது தொடக்கமே கூத்துப் பாடலை எப்போதுமே இவர் பாடிக்கொண்டிருப்பார். சாதுவான தோற்றம், தெளிவான குரல், சுவையான நடிப்பு இவைகள் தான் இவரைக் கூத்தரங்கிற்குக் கொண்டு வந்தன.

1953ஆம் ஆண்டில் பாஷையூரில் அரங்கேறிய அந்தோனியார் கூத்தில், மடுத்தீன் என்ற பாத்திரமேற்று மகிழ்ச்சியில் சுவைஞர்களைத் திளைக்கவைத்தார். 1954ஆம் ஆண்டுக்குப் பின்னர் பூதத்தம்பி, நொண்டி என்ற கூத்துக்களிலும் பாடி நடித்துப் புகழின் உச்சியை எட்டிப்பிடித்தார். 1951ஆம் ஆண்டு நிகழ்ந்த செபஸ்தியார் கூத்தில் இவர் வீரனாகத் தோன்றிப் பாடிய பாடல் இது!

முடிபெற்ற துரையெல்லோர்க்கும் முதன்மை வாய்ந்திடு மொய்யாரம்
கெடிதுற்று விளங்கு தீயோக்கிலேசி மன்னவனே போற்றி!
படிவற்ற கெறுவந் தன்னால் பட்டயம் உடைத்த பொல்லாத்
துடியுற்ற பங்கிராசைத் துரிதமாய்க் கொடு வந்தோமே!

**(செபஸ்தியார்)**

### *அருமைமுத்து இராயப்பு (தர்மலிங்கம் 1907 - 1991 )*



பாஷையூரில் நாட்டுக்கூத்து வேர்விட்டு விழுதெறி வதற்குக் காரணமாயிருந்தவர்களில் தர்மலிங்கம் குறிப்பிடத்தக்கவர். 1907ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 07 ஆம் நாள், பாஷையூரில் பிறந்து 1947ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரங்கேறிய பூதத்தம்பி, சவீனகன்னி, புனிதவதி முதலிய கூத்துக்களில் தோன்றிப் பிரகாசித்த இவர் 1991ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 17ஆம் நாள் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

குரலும், ஏற்ற நடிப்பும் கொண்ட இவர் 1953ஆம் ஆண்டில் நிகழ்ந்த செபஸ்தியார் கூத்தில் பங்கிராஸ் என்ற பாத்திரமேற்றுப் பாடிய பாடல் இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிபடைக் கவசம் பூண்டு குற்றேவல் புரியும் வீரர்
அடிபட உதைத்துத் தள்ளி அதிகார நிருபந் தன்னை
பொடிபட உடைத்தெறிந்து பொல்லாதார் கெறுவம் போக்கி
நொடிதனில் அண்ணர் வாசம் நோக்கியே செல்லுவோமே!

**(செபஸ்தியார்)**

### *அந்தோனி பறுநாந்து (செல்லன் 1928 .......)*



பெண்ணுக்குரிய ஒயிலான நடை, பேசும் முகபாவம், பிழிந்த தேனாய் இனிக்கும் குரல் இவைகளெல்லாம் பறுநாந்திடம் சரணடைந்திருந் தமையினால் தான் கூத்துலகில் பிரகாசமான ஓர் எதிர்காலம் இவருக்குக் காத்திருந்தது. 1928ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர் 1951ஆம் ஆண்டு தொடக்கம் மேடையேறிய பூதத்தம்பி, ஞானசௌந்தரி, செபஸ்தியார் முதலிய கூத்துக்களில் சிறப்பாகப் பாடி நடித்தார்.

1961ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கட்டபொம்மன் கூத்தில் ஜக்கம்மாவாகத் தோன்றிச் சுவைஞர்களைக் கவர்ந்த இவர் 1953ஆம் ஆண்டு நிகழ்ந்த செபஸ்தியார் கூத்தில் பபியோலா என்ற பாத்திரத்தில் தோன்றிப் பாடிய கொச்சகம் இது!

வாடாமதியின் முகப்பிரபை வடிவந் துலங்கும்படி யமைந்த
சூடாமணியார் திருமேனி சேர்பந்தணிக்கும் சோபிதமாய்
மூடாத்துமங்கள் கரையேற மொழியும் அமிர்த வாசகங்கள்
ஈடாயெதனை எடுத்துரைப்பேன் இருக்கும் கோல மிப்படியோ!

**(செபஸ்தியார்)**

### *மத்தேசு மனுவல் (வீரசிங்கம் 1920 - 1992)*



நெடிய தோற்றமும், நிகரில்லாத குரல்வளமும், பொடிவைத்துப் பேசும் முகபாவமும், பொருத்தமான நடிப்பும் கொண்ட மனுவல் 1920ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 10ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். நாட்டுக் கூத்திலே இயல்பாகவே நாட்டங்கொண்ட இவர், 1950ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் அரங்கேற்றம் செய்யப்பட்ட அந்தோனியார், பூதத்தம்பி, செபஸ்தியார், கனகசபை முதலிய கூத்துக்களில் உணர்வினைக் கிளறும் தனது ஆடல் பாடல் களினால் கூத்துச் சுவைஞர்களின் உள்ளத்தைத் தொட்டு விட்டார் என்றே கூறவேண்டும்.

கூத்துப்பலம் பெற்ற தொம்மையப்பர் குழுவினால் 1961ஆம் ஆண்டு கட்டபொம்மன் கூத்து பாஷையூரில் மேடை யேற்றப்பட்டது. அக்கூத்தில் பிறப்பால் தமிழனாகி, இருப்பால் துரோகியாகி வாழ்ந்து முடிந்த எட்டப்பன் பாத்திரத்தை ஏற்றுப் பாடி நடித்துப் பெரும் புகழை அறுவடை செய்தார். இக்கூத்திலே இவரது பாடலும், பொருத்தமான நடிப்பும் கூத்து விமர்சகர்களின் கண்களை அகல விரியவைத்துக கவனத்தை ஈர்த்துள்ளன.

1992ஆம் ஆண்டு மரணமடைந்த இவர், 1953ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேற்றிய ஞானரூபன் கூத்தில், நரேந்திர மன்னனின் தளபதியாகத் தோன்றிப் பாடிய இப் பாடலை இன்றுங்கூட நினைத்தாலும் சொட்டுகின்ற தேனாக இனிக்கின்றது.

சங்கினம் முழங்கும் சோழ நாட்டரசன்
    தனது மாபடைகள் சூழ
இங்கித முடனே அழகை நாடேகி
    இலங்கிய படைகள் இறங்கிடவே
அங்கது கண்டு அதிக கோபத்தால்
    அலங்காரன் தானும் தன்படை சூழ
பொங்கியே இருதிறத் தாரும் ஒன்றாய்
    பொருதிடத் துணிந்திட் டாரே!

**(ஞானரூபன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***முத்துத்துரை அலெக்சாண்டர் (1917-2008)***



கூத்தரங்கில் ஒருவரைக் கண்டு கூடி இருந்த சுவைஞர்கள் எல்லாம் வயிறுகுலுங்கச் சிரிக்கின்றனர் என்றால் அங்கே அலெக்சாண்டரின் தரிசனம் கிடைக்கும். நவசரங்களுள் ஒன்றான நகைச்சுவை தேன் தடவிச் சுவைஞர்களுக்கு மருந்தளிக்கும் நல்ல மருத்துவனான இவர் 1917ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 17ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். பாதியிலே கல்வியை நிறுத்திவிட்டு மீதி வாழ்நாளை கூத்திற்கென்றே அர்ப்பணித்த இவர் தனது எட்டாவது வயதில் (1925) முதன்முதலாகப் புனிதவதி கூத்தில் தோன்றிப் இத்துறைக்குள்ளே நுழைந்தார்.

தொடர்ந்து 1948ஆம் ஆண்டு மீகாமன் ஆட்டக்கூத்திலும் பங்கேற்றார். 1952ஆம் ஆண்டில் நிகழ்ந்த கண்டிஅரசன் கூத்தில் கதை நகர்த்துவோனாகவும் (பபூன்), அரசனின் மனைவியாகவும் பாடிநடித்துப் தன்கூத்துத்திறனை வெளிப்படுத்திய இவர் 2008ஆம் ஆண்டு புரட்டாதித்திங்கள் 28ஆம் நாள் இறந்தார்.

1968ஆம் ஆண்டு எஸ்தாக்கியார், கற்பகமாலா என்ற கூத்துக்களில் தோன்றி இவர், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, செம்பியன் பற்று, தாளையடி, ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் செபஸ்தியார், அந்தோனியார் முதலிய கூத்துக்களை நெறியாள்கை செய்து மேடையேற்றினார் இவரைப்பாராட்டி கலையரசு க.சொர்ணலிங்கம் கூத்துவேந்தன் என்ற விருதை வழங்கினார். இம்மனுவல் கூத்தில் (1989) கடைசியாகத் தோன்றிய இவர் செபஸ்தியார் கூத்தில் வேடனாக வந்து (1956) பாடிய பாடலிது!

எடுத்துப் பிடித்து நெடிய வில்லினை
இழுத்துக் குறிப்புத் தவறிடாமலே
தொடுத்துச் சரங்கள் விடுத்தே துட்டனைத்
துடித்திடும்படி துளைத்தே விடுவோம்!
பட்டிமையுறுந் துட்ட யேசுவை
பணிந்த பயனைத் துணிந்து காணவே
கெட்டி சேருடல் நட்டணையுறக்
கீறுதேகணை பீறுதேயடா! (செபஸ்தியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *இறப்பியேல் இம்மனுவல் (1915 - 1986)*



நாட்டுக்கூத்து வேம்பாகக் கசந்த நாற்பது களிலும், கல்விப் புலத்தில் பணியாற்றியவர் களையும் கூத்து கவர்ந்திழுக்கத் தவறவில்லை என்ற செய்தியையும் இங்கு சொல்லித் தானாக வேண்டும். 1915ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர் ஒரு கூத்து ஆர்வலராகவே இருந்தார். எங்கு கூத்து ஒத்திகைகள் நடைபெறுகின்றதோ அங்கு இவரின் பிரசன்னத்தைக் காணலாம்.

நல்ல குரலும், நடிப்புத்திறனும் கொண்ட இவர், 1946ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஞானரூபன், கிறிஸ்தோப்பர், வெடியரசன் முதலிய கூத்துக்களில் தோன்றிச் சுவைஞர்களின் நெஞ்சில் இடம்பிடித்தார். 1986ஆம் ஆண்டு மீளாத்துயில் கொண்ட போதும், 1948ஆம் ஆண்டு மீளவும் பாஷையூரில் மேடையேற்றம் கண்ட ஞானரூபன் கூத்தில் அமைச்சனாகத் தோன்றிப் பலரைக் கவர்ந்த வேளையில் ஆசிரியர் இம்மனுவல் பாடிய பாடல் இது!

*கஞ்சிகைக் கவசம் பூட்டி கலிங்கப் பட்டாடை கட்டி*
*மஞ்சரி வாகை மாட்டி மனதாரக் கலைமை யூட்டி*
*இஞ்சிசேர் தெலிங்கதேசம் இயல்பெல்லாம் உரைக்கும் தீரப்*
*பிஞ்செனும் மதிநுதல் சேர்பிரதானி சபைவந்தாரே!*

**(ஞானரூபன்)**

### *கயித்தான் இறப்பியேல் (1928 - ................)*



1928ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 28ஆம் நாள், பாஷையூரில் பிறந்த இறப்பியேல் தெளிவான குரலும், தரமான நடிப்பும் கொண்டு கூத்தரங்கிற்கு அறிமுகமானார். 1948ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய சவேரியார் கூத்துத்தான் இவர் தோன்றி நடித்த முதற் கூத்தாகும். தொடர்ந்து 1960ஆம் ஆண்டு கனகசபை கூத்தில் சாட்சிக் காரனாகவும், 1953ஆம் ஆண்டு ஞானசௌந்தரி கூத்திலும் தோன்றிக் கூத்து வரலாற்றில் தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952ஆம் ஆண்டு மேடையேறிய கற்பகமாலா கூத்திலும் தோன்றிய இவர், 1953ஆம் ஆண்டு நிகழ்ந்த செபஸ்தியார் கூத்தில் வேடனாக நடித்த வேளையில் பாடிய இனிய பாடல் இது!

அன்னமே! பெண்ணே! அழகுள்ள
அபிரா என் கண்ணே!
சொர்ணமே! தேனே! ஒன்றாகச்
சொகுசுடன் வாழ்வோம்!
வல்லமை யெது புல்லனே உடல்
வடிவமே துளைபடவே அம்புகள்
துல்லியமுடன் வல்லிய மெனத்
தொடுக்கிறோம் இன்று விடுக்கிறோமடா!

**(செபஸ்தியார்)**

### *ஆசீர்வாதம் பிலிப்பையா (1928 - 1988)*



கேட்டுக் கொடுக்காமலே, அடுத்துவரும் சந்ததிக்கு நாட்டுக் கூத்தை அர்ப்பணிக்க வேண்டும் என்ற இலட்சிய உணர்வுகளோடும், இளமைக் கனவுகளோடும் திரியும் இளைய குலத்தோரின் கையிலே கூத்தை ஒப்படைத்தவர் தான் பிலிப்பையா. இளவயதில் கூத்திலே பற்றுக் கொண்ட இவர், 1928ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 24ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார்.

1951ஆம் ஆண்டு நிகழ்ந்த செபஸ்தியார் கூத்திலும், 1953ஆம் ஆண்டு நிகழ்ந்த கற்பகமாலா கூத்திலும் தோன்றிய இவர், பாஷையூர் கூத்தரங்குகளைக் களைகட்ட வைத்தாலும் 1949ஆம் ஆண்டு நடைபெற்ற சவீனகன்னி கூத்துத்தான் இவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றதென்பதை யாவரும் அறிவர். அக் கூத்தில் மரிசியான் என்ற பாத்திரமேற்று இவர் பாடிய பாடல் இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணத்தின் உட்பொருளாம் சோதி - எங்கள்
அம்பரனைத் தந்தமரி புகழை ஓதி
தாரணியில் வாழ்வோம் மனப்பீதி - யாவும்
தங்கிடாது விட்டகலும் சத்தியங்காண் நீதி!

(சவீனகன்னி)

1950ஆம் ஆண்டு மண்ணித்தலையில் அரங்கேறிய, செபஸ்தியார் கூத்தில் செபஸ்தியார் பாத்திரமேற்று இவர் பாடிய பரணியை நினைத்தால் இன்றுங்கூட இனிக்கின்றது.

மின்னைநிகர் மன்னனுரை போலே வீரர்
மேவுகள்ளி மரத்திலென்னை அடுக்கும் வேளை
நின்னையொரு தூணிலன்று கட்டி வைத்த
நினைவெனக்கு நீங்காது யேசு நாதா!

(செபஸ்தியார்)

குரல் வளத்தோடு கூத்தாளுமையும் கொண்ட இவர் ஞானசௌந்தரி, கற்பகமாலா, அந்தோனியார், சவேரியார் என்ற கூத்துக்களை இயக்கிப் பாஷையூரில் மேடையேற்றி அண்ணாவியார் என்ற பெருமையையும் பெற்றார். நான் என்ன சொன்னாலும், 1988ஆம் ஆண்டு மாசித் திங்கள் 16ஆம் நாள் மீளாத்துயிலில் கலந்துவிட்ட பிலிப்பையா நாட்டுக் கூத்துக்கு வாழ்வளித்தவர் என்பதை நாடே சொல்லும்.

## *அந்தோனி மாணிக்கத்தம்பி (1926 - 1995)*

"மங்கை ஐக்கம்மா மாற்றலர் சேனை
வந்துற்றாரே! சமர் செய்ய வந்துற்றாரே"



இப்பாடலைக் கேட்டதும் மாணிக்கத்தம்பி என்ற கூத்தாளியின் உருவம் நம் மனத்திரை யிலே வந்து போகிறது. 1961ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேற்றப்பட்ட கட்டபொம்மன் கூத்தில் தான் இவரின் பிரசன்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குக் கிடைக்கிறது. 1926ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவருக்குக் கூத்துப் பாடல்கள் என்றால் கரும்பாக இனிக்கும்.

1958ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் தொடர்ந்து மேடையேறிய அந்தோனியார், கண்டியரசன், செபஸ்தியார் முதலிய கூத்துக்களில் அரச பாத்திரங்களில் தோன்றிய இவர் பூதத்தம்பி கூத்திலும் சிறப்பாகப் பாடி நடித்துள்ளார். 1958ஆம் ஆண்டு மேடை யேறிய செபஸ்தியார் கூத்தில் மன்னனாகத் தோன்றி, இவர் பாடிய பாடல் இன்றளவும் சுவைஞர்களின் நெஞ்சில் இடம்பிடித்து நிற்கின்றது. இவரது சாயாத குரல் வளம் இப்பாடலிலே தேயாமல் தெரிகின்றது.

விண்டலம் குமுற வானம் விரிசுடர் பரந்திடும்பூ
மண்டலம் குமுறும் எந்தன் மகத்துவ நாமங் கேட்டால்
மிண்டுடல் பதறாதெந்தன் மேன்மையை நகைத்த வுந்தன்
கண்டலம் சிதறக் கொய்வேன் கடிதுண்மை பகருவாயே!

(செபஸ்தியார்)

***மருத்தீஸ் பவளத்துரை (1925 - 1997)***



தரமான நடிப்பு, தறித்துவைத்த உச்சரிப்பு, திரும்பவும் கேட்கத் தூண்டும் குரலினிமை இவையெல்லாம் 1925ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த பவளத்துரையிடம் சங்கமித்திருந்தன என்றால் பொய்யில்லை, நாட்டுக் கூத்தில் இயல் பாகவே பற்றுக்கொண்ட இவர், 1961ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கற்பகமாலா கூத்தில் சிறப்பாகப் பாடி நடித்துள்ளார்.

1963ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ந்து அரங்கேறிய புனிதவதி, கனகசபை முதலிய கூத்துக்களிலும் தோன்றிச் சுவைஞர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். 1964ஆம் ஆண்டு நடைபெற்ற சவீனகன்னி கூத்தில் யூதனாகத் தோன்றி இவர் பாடிய பாடலை இப்பொழுது நினைத்தாலும் மனம் கிளுகிளுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசொலி முழங்க ஒன்னார் முடிரணகளத்தில் வீழ்த்தும்
அரசனுத்தரவை மீற அவனியில் ஆராலாகும்
பிரசநல் வசனியாமென் பிரியவள் தனக்கோர் வார்த்தை
இரசமாய்ப் பேசிவாறேன் இவ்விடம் இருந்திடீரே!

**(சவீனகன்னி)**

***சூசைப்பிள்ளை பிலிப் (பாலன் 1927 - ................)***



கூத்துக்கு அடிநாதமாக இருப்பது இசை யென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. 1927ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 27ஆம் நாள் பாஷையூரில் பிறந்த பிலிப், இளமைப் பிராயத்திலே கூத்தின் இனிமையினால் கவரப்பட்டார். 1948ஆம் ஆண்டிற்குப் பின்னர் கூத்தரங்கில் தோன்றிய புது முகங்களுள் குறிப்பிடத்தக்க இவர் தன் இனிய குரலாலும், இணையற்ற நடிப்பினாலும் பூதத்தம்பி, அந்தோனியார், கனகசபை முதலிய கூத்துக்களிலும் சிறப்பாகப் பாடி நடித்துப் புகழ்பெற்றார்.

1952ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கற்பகமாலா கூத்தில் வீரசிம்மனாகத் தோன்றி நடித்துச் சுவைஞர்களையும் மகிழவைத்ததைக் கூத்தில் ஒரு பாய்ச்சல் என்றே கூறவேண்டும். 1953ஆம் ஆண்டு பாஷையூரில் நிகழ்ந்த செபஸ்தியார் கூத்தில் பங்கிராஸ் என்ற பாத்திரமாகத் தோன்றிய இவர் பாடிய பாடல் நெஞ்சைப் பிழிவதாக அமைந்திருந்நது.

காளத்தின் வளமை ஓங்கிக் கதித்திடும் றோமை நாட்டை
ஆளத்தான் உரிமை பூண்ட அதிகார நிருப னான
வேழத்தின் மீது உலாவும் வீர விற்பன்னா போற்றி!
மீளத்தான் அடியேன் தன்னை மேவி இங்கழைத்த தேதோ!

**(செபஸ்தியார்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *யோவான் சூசைப்பிள்ளை (1929- ..................)*



செம்மலர்த் தேகம், சங்கீதக் குரல் வளம், சுவடளந்த நடை, சுத்தமான உச்சரிப்பு இத்தனை கூத்து விழுமியங்களும் சூசைப்பிள்ளை என்ற கூத்தாளியிடம் குடிகொண்டிருந்தமையால் தான் இவர் கூத்துலகில் புகழின் உச்சியை எட்டிப் பிடித்தார்.

1929ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர், 1955ஆம் ஆண்டுக்குப் பின்னர் புனிதவதி, செபஸ்தியார், கனகசபை முதலிய கூத்துக்களில் தொடர்ந்து நடித்துத் தனது நடிப்புத் திறனை வெளிப்படுத்தினார். 1952ஆம் ஆண்டு நிகழ்ந்த கற்பகமாலா கூத்தில் தாசியாகவும், 1961ஆம் ஆண்டு நடைபெற்ற கட்டபொம்மன் கூத்தில் வெள்ளையம்மா ஆகவும் பாடி நடித்துத் தன் புகழைத் தக்கவைத்துக் கொண்டார்.

1954ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய சவீனகன்னி கூத்தில் இவர் பெண் பாத்திரமேற்றுப் பாடிய இன்னிசை இது!

வில்லிருக்கும் வல்லபுய வீர ரணமாரன் என்ற
சொல்லுரைக்கக் கண்ட தல்லால் தோற்றமதைக் காணேனே!
இல்லிருப்பாய் என்றெனக்கு இன்பமொழி கூறி வந்தீர்
எல்லிருக்கப் போகு துங்கள் எண்ண மென்ன கண்ணாளா!

**(சவீனகன்னி)**

### *தம்பித்துரை இரட்டினதுரை (1928 -2009)*



கணீரென்ற குரலும், கச்சிதமான நடிப்பும் கைவரப் பெற்ற இரட்டினதுரை 1928ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். 1954ஆம் ஆண்டிற்குப் பின்னர் பாஷையூரில் மேடையேறிய ஞானசௌந்தரி, கனகசபை, செபஸ்தியார் முதலிய கூத்துக்களில் இவரது பாடலையும், நடிப்பையும் சுவைஞர்கள் மெச்சி மகிழ்ந்தனர். இவர் 2009ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 09ஆம் நாள் இறந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952ஆம் ஆண்டு நிகழ்ந்த கற்பகமாலா கூத்தில் அருமைநாத பிரபுவாகவும், 1961ஆம் ஆண்டு நிகழ்ந்த கட்டபொம்மன் கூத்திலும் தோன்றித் தனது கூத்தாளுமையை வெளிப்படுத்தியுள்ளார். கூத்தின் பல்வேறு தளங்களில் கால் பதித்துள்ள இவர், 1953ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய சவீனகன்னி கூத்தில் வர்த்தகனாகத் தோன்றிச் சுவைஞர்களைக் கவரவைத்த பாடல் இது!

தரைதனில் எனக்கன்பான சற்குணச்சீஷனே கேள்!
புரைதனில் உள்ள இரத்தினப் பொருட்களை எடுத்துக்கொண்டு
வரைதனில் உதித்த யேசு வடிவலர் பதத்தைப் போற்றி
விரைவினில் கிரயத்தோடு விற்று நாம் வருகுவோமே!

**(சவீனகன்னி)**

### *பெஞ்சமின் பாக்கியையா (1920 - 1984)*



மெலிந்து உயர்ந்த தோற்றம், மெல்லெனப் பழகும் நடை, தெளிந்த குரல், தேடல் சொல்லும் முகபாவம் கொண்ட பாக்கியையா 1920ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். 1961ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கட்டபொம்மன் கூத்தில் ஜக்கம்மாவாகத் தோன்றிய இவர் சிறப்பாகப் பாடி நடித்துள்ளார்.

தொடர்ந்து அந்தோனியார், நொண்டி, செபஸ்தியார் முதலிய கூத்துக்களில் தோன்றிய இவர், 1952ஆம் ஆண்டு நிகழ்ந்த கண்டி அரசன் கூத்தில் குமாரியாமியாகத் தோன்றிப் பாடிய பாடல் இது!

தடைக்கஞ்சாத பாம்புக் காணையில்லை - சாந்தமற்றிடு
நடைப் பிசகுறும் மூர்க்கர்க் கிடமில்லை
மடைத்தனம் கொண்டு என்னசெய்வானோ - மனஞ்சலிக்குதே
மைத்துனரும் இத்ததி இங்கில்லையே!

**(கண்டிஅரசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சலமோன் பறுநாந்து (1931 - ...............)***



கூத்துலகமே ஒருங்குசேர ராசி என்று செல்லமாக அழைக்கும் பறுநாந்து, இனிமையான குரல்வளம் கொண்ட ஒரு சிறந்த கூத்துக் கலைஞன் எனலாம்.

1931ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 14ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர் தனது இளம் வயதில் தோன்றிய முதற் கூத்து சவேரியார்.

உயர்ந்து திரண்ட தோற்றமும், ஈடில்லாத பாட்டுத் திறமையும் கொண்ட இவர் நாட்டுக் கூத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தவர். 1949ஆம் ஆண்டு தொடக்கம் பாஷையூரில் மேடையேறிய ஞானரூபன், ஞானசௌந்தரி, கண்டி அரசன் முதலிய கூத்துக்களில் தோன்றிப் பாடி நடித்தமையினால் சுவைஞர்களை மகிழ்ச்சியில் மிதக்கவைத்தார்.

கலைஞானி என்ற விருதைப் பெற்று, 1961ஆம் ஆண்டு நிகழ்ந்த கட்டபொம்மன் கூத்தில் பானர்மென்னாகவும், 1963ஆம் ஆண்டு நடைபெற்ற கற்பகமாலா கூத்தில் ஞானதீபனாகவும் தோன்றிய இவர் இன்னிசை, குறம், சந்தவிருத்தம் என்ற கூத்து உருப்படிகளைப் பாடுவதில் சமர்த்தராய் விளங்கினார். அத்துடன் கூத்துக்களைச் சிறுவர்களுக்குக் கற்பித்து இயக்குவதிலும் முன்னின்று உழைத்தார். 1949ஆம் ஆண்டு நிகழ்ந்த ஞானரூபன் கூத்தில் அமைச்சனாகத் தோன்றி இவர் பாடிய பாடல் இது!

பாட்டளி முரல மாலை பளீர் பளீரெனவே மின்ன
தாட்டிமை யுடனே சட்டை தாள்பூட்டி தலைப்பா சூடி
மாட்சிமை செறிந்தென் னாளும் வளங்கொளிர் அரசன் வாசல்
தீட்டிமை சேர்புகழ் மந்திரி சிறப்புடன் சபை வந்தேனே!

**(ஞானரூபன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *கபிரியேல் யோசேப் (இராசதுரை 1931 - 2006)*



கூத்துக்கெனவே வாழ்ந்து முடிந்த குடும்பப் பின்னணியில் யோசேப் 1931ஆம் ஆண்டு தைத்திங்கள் 10ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். 1954ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் மேடையேறிய அந்தோனியார், புனிதவதி, கனகசபை முதலிய ஆரம்பகாலக் கூத்துக்களில் தோன்றிச் சுடர்விட்ட கூத்தாளி இவராகும். நல்ல குரல், நிமிர்ந்துவிட்ட தோற்றம், நினைவில் நிற்கும் நடிப்பு, நிறைவான பேச்சு இவைகள் இவரோடு துணை வந்தால் கூத்தாளியாக மாறுவதற்கு வேறென்ன தயக்கம்.

1960ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய கண்டி அரசன் கூத்தில் தோன்றிப் பரபரப்பை ஏற்படுத்திய இவர், 1963ஆம் ஆண்டு நிகழ்ந்த கற்பகமாலா கூத்தில் வீரசிம்மனாகத் தோன்றிச் சுவைஞர்களின் நெஞ்சுகளைக் கொள்ளையடித்தார். கழிநெடில் சொல்லிப் பாட்டெடுப்பதில் எல்லோரின் கருத்தைக் கவரும் இவர், 2006ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 14ஆம் நாள் மீளாத்துயிலில் கலந்தார். 1962ஆம் ஆண்டு நிகழ்ந்த சவீனகன்னி கூத்தில் வர்த்தகனாகத் தோன்றி இவர் பாடிய பாடல் இது!

தேவனைப் பெற்ற தாயின் திகழ்பெறு மமிர்தமான
பாவினைப் பாடக் கேட்டுப் பரவசமானேன் பாலா!
பூவினில் உங்கள் வாழ்க்கைப் பொழுதெல்லாம் வழுவில்லாமல்
சீவியம் புரிய வேண்டிச் சிறப்புடன் துணை செய்வேனே!

**(சவீனகன்னி)**

### *நல்லதம்பி பொன்னுத்துரை (1924 - 1993)*

பாஷையூரின் கூத்துப்புலத்தைச் செழுமைப் படுத்த விழைந்த அண்ணாவிமார்களை என்ன சொல்லி எப்படி பாராட்டுவதென்றே தெரிய வில்லை. கதாபாத்திரங்களையும், வில்லன் வில்லி பாத்திரங்களையும் தேர்ந்தெடுப்பதில் அவர்களுக்கு நிகர் வேறு யாருமில்லை. இப்படிப்பட்ட கூத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பன்னர்கள் வளர்ததுவிட்ட கூத்தாளி பொன்னுத்துரை 1924ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார்.

பெண் பாத்திரத்திற்கேற்ற நடை, பேசும் பாங்கு, முறுவல் தவழும் முகபாவம், மெச்சத்தக்கதான நடிப்பு இவையெல்லாம் நிறையப் பெற்றிருந்த இவர், 1954ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் அரங்கேறிய புனிதவதி, கண்டி அரசன், கனகசபை முதலிய கூத்துக்களில் தோன்றித் தனது கூத்தாளுமையைச் சுவைஞர்களின் தரிசனத்தில் வைத்தார்.

1956ஆம் ஆண்டு நிகழ்ந்த கற்பகமாலா கூத்திலும், 1961ஆம் ஆண்டு நிகழ்ந்த கட்டபொம்மன் கூத்திலும் தோன்றி நடித்த இவர், 1953ஆம் ஆண்டு நடைபெற்ற செபஸ்தியார் கூத்தில் அபிராவாகத் தோன்றிப் பாடிய பாடல் இது!

வெற்றிதரு வில்மகிமை வீரனெனும் தீரனே கேள்!
பெற்றி நிகரும் செபஸ்தி பேர்வழங்கும் தளபதியை
முற்றுசெய்யக் கொண்டுவந்தீர் மோச முறாதே அவரைப்
பற்றுதலாய்க் காத்து வைத்தால் பலன் அதிகம் உண்டாமே!

**(செபஸ்தியார்)**

### *அந்தோனி பொன்னுத்துரை (1924 - 2005)*



கூத்தில் பற்றுக் கொண்டவரான பொன்னுத் துரை 1924ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். 1951ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற புனிதவதி, கனகசபை என்ற கூத்துக்களில் தோன்றிய இவர், தன்னை ஒரு கூத்தாளியாகப் பதிவு செய்து கொண்டார். சிறிய பாத்திர மேற்றாலும் இவர் கரிசனை கொண்டு தனது திறனை வெளிப்படுத்துவார்.

தொடர்ந்து கற்பகமாலா கூத்தில் தோன்றிச் சுவைஞர்களைக் கவர்ந்த இவர், 1961ஆம் ஆண்டு நிகழ்ந்த கட்டபொம்மன் கூத்தில் எட்டப்பனின் கையாளாக நடித்துப் புகழின் உச்சியைத் தொட்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே துணிந்து குறிப்பிடுவது தவறாகாது. 1949ஆம் ஆண்டு நடைபெற்ற கிறிஸ்தோப்பர் கூத்தில் துவேசியாக நடித்த வேளையில் பாடி எல்லோரின் பாராட்டுதலையும் பெற்ற பாடல் இது!

மகிதல மன்னரெல்லாம் வந்தடி பணியப் பெற்ற
அகியுறு புயத்தோர்க்கு யான் அடிபணிந்திடுவ தல்லால்
சுகிதமேயுள்ள மன்னர் தன்னிடம் தரிக்க மாட்டேன்
வகிர்செய்வேன் யானுமெங்கள் வாஞ்சையின் படியதானே!

**(கிறிஸ்தோப்பர்)**

***ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை (சிங்கம் 1929 - 2008)***



கணீரென்ற குரல், கடூரமான முகபாவம், பயங்கரச் சிரிப்பு, பொருத்தமான நடிப்பு இத்தனையும் கைவரப்பெற்ற சூசைப்பிள்ளை 1929ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள 20ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரில் மேடையேறிய ஞான சௌந்தரி, தேவசகாயப்பிள்ளை முதலிய கூத்துக்களில் சிறிய பாத்திரமேற்று இவர் பாடி நடித்த வேளையிலே பார்வையாளரின் நெஞ்சங்களைப் பறித்துக்கொண்டார்.

தொடர்ந்து 1961ஆம் ஆண்டு நிகழ்ந்த கட்டபொம்மன் கூத்தில் பானர்மென் என்ற பாத்திரமேற்றுச் சிறப்பாக நடித்தமை கூத்து வளர்ச்சியில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. கலைப் பிரக்ஞை கொண்ட கூத்தாளியென்ற தினவோடு 2000ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 5ஆம் நாள் மீளாத்துயிலில் கலந்துவிட்ட இவர், 1954ஆம் ஆண்டு பாஷையூரில் மீளவும் அரங்கேறிய ஞானரூபன் கூத்தில் தளபதி பாத்திரமேற்று பாடிய சந்தவிருத்தத்தை நினைத்துப் பார்த்தால் இன்றைக்குமே நெஞ்சம் இனிக்கின்றது.

நந்து பரந்து இருந்து சிறந்து நலங்கொழு நன்னகரை
நாடரசாள் துரையேவிரைவொடு நான்நவில் மொழிதனைக் கேளாய்!
மந்தரமென்ன வளைந்து குவிந்து மதர்த்தெழு மாமுலைதோய்
மாரனை நேருருவான நரேந்திர மகிபனுரைத் திடுசொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமில்லுன் னகரந்தனி லெந்தனை இந்த நல்வேளை சென்று
அழகிய திறையாமது தரவிலையாம் அணிசமரணி ரணியாய்
மந்த நடந்து தொடர்ந்து முழங்கி வழங்கியதாய்
முரணமர் புரியவே அரைநொடி தனிலுனை வரநிருபதி யுரையே!

**(ஞானரூபன்)**

***மாணிக்கமுத்து அந்தோனிப்பிள்ளை (1934 - 1997)***



கூத்தில் இயல்பாகவே பற்றுக்கொண்ட அந்தோனிப்பிள்ளை 1934ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். தரமான குரலினிமையும், நல்ல நடிப்பும், தெளிவான உச்சரிப்பும் கொண்ட இவருக்குக் கூத்தில் நல்லதொரு எதிர்காலம் காத்துக் கிடந்தது. 1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூரிலுள்ள இளந்தலைமுறையினரிடம் கூத்து ஆர்வம் மேலோங்கியிருந்ததைக் காணமுடிந்தது.

களைசொட்டும் முகபாவம் கொண்ட இவர் தொடர்ந்து மேடை யேறிய ஞானசௌந்தரி, செபஸ்தியார், கற்பகமாலா என்ற கூத்துக் களில் தோன்றித் தனது திறமையைப் பதிவு செய்துள்ளார். 1961ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய கட்டபொம்மன் கூத்தில் இவர், பாடி நடித்த மோகனவீச்சைச் சுவைஞர்கள் மறந்திருக்க மாட்டார்கள். 1953ஆம் ஆண்டு நிகழ்ந்த சவீனகன்னி கூத்தில் யூதனாகத் தோன்றிப் பாடிச் சுவைஞர்களைக் கவர்ந்திழுத்த ஒரு பாடல் இது!

சங்கமணி மண்டபங்கள் சார்ந்திருக்கும்
தகைமையுறும் அகழிமதில் சூழ்ந்திருக்கும்
தங்கமணிக் கோபுரங்கள் உயர்ந்திருக்கும்
தானமிகு சத்திரங்கள் நிறைந்திருக்கும்
பொங்குவனப் பூஞ்சோலை பொலிந்திருக்கும்
புகலரிய குலோனிய மாநகரைத் தேடிப்
பங்கமில்லா தேகுதற்கு முதன்மை வாய்ந்த
பாதையிது தானறியப் பகர்ந்திட்டேனே!

**(சவீனகன்னி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சவிரிமுத்து ஏபிரகாம் (பிலேந்திரன் 1928 - 2003)***



குரல் வளமும், கூத்தாளிக்குப் பொருத்தமான தோற்றமும், நடிப்போடு தரமான நகைச்சுவைப் பாவமும் கொண்ட ஏபிரகாம், சவிரிமுத்து மரியை என்பவர்களுக்கு மகனாக 1928ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். பெண் பாத்திரத்தை ஏற்றுச் செய்வதில் சுவைஞர்களுக்குப் பிரமிப்பையூட்டும் கூத்தாளியான தந்தையை வழிகாட்டியாகக் கொண்டு, கூத்துலகில் நுழைந்த இவருக்கு அரங்குகள் பல களம் அமைத்துக் கொடுத்தன.

1964ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய செபஸ்தியார் கூத்தில் பபியோலா என்ற பெண்பாத்திரமேற்று, கூத்தரங்கில் தோன்றிய இவர் புலவர் சூசைப்பிள்ளை படைந்த சற்குணானந்தன் (1961), கிளியோபாத்திரா (1976), மரியகொறற்றி (1971) , கலாவதி (1980) என்ற கூத்துக்களிலும், புலவர் ஆ. தேவசகாயம்பிள்ளை ஆக்கிய இம்மனுவல் (1955), மனோகரா (1986) என்ற கூத்துக் களிலும் சிறப்பாகப் பாடி நடித்துத் தானுமொரு கூத்தாளி என்ற பதிவைத் தந்துள்ளார். மேற்கூறிய புலவர்களின் கூத்துக்களுக்கு மெட்டுக்களைக் கொடுத்துதவிய இவர், பாடல்களிலும் தன் கைவண்ணத்தைக் காட்டியுள்ளார் என்பதை அறியமுடிகின்றது.

கல்விப் புலத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், இசை நாடக அபிமானியாய் இருந்தார் என்பதைவிடக் கூத்திற்காகத் தன்னை அர்ப்பணிதது வாழ்ந்தார் என்பதில் பொய்யில்லை. 2003ஆம் ஆண்டு மாத்தளையில் இவர் காலமான செய்திகேட்டு கற்றோரும், கூத்தாளிகளான மற்றோரும் கண்ணீர் விட்டழுதனர். செபஸ்தியார் கூத்தில் பபியோலாவாகத் தோன்றி இவர் பாடிய பாடல் இது!

முன்னீரு வட்டுமலை ஈன்ற
முத்தொளிர் இரத்தினச் சித்திரனை
நன்னேர்மை கொண்டவனாம் சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகனை எங்கு தேடுவேனோ!
பாரப் படைதிரண்ட போரில்
பாதுகாப் பாளனாய் நின்றருளும்
வீரத் தியாகமணி இன்று
வேடரால் வீழ்ந்த இடமறியேன்!
வம்பரும்மைப் பிடித்தாரோ மரத்தில்
வரிந்திறுகத் தொடுத்தாரோ கொடிய
அம்பினால் எய்து அடித்தாரோ மன்னன்
ஆக்கினை போல் முடித்தாரோ!

**(செபஸ்தியார்)**

### *கபிரியேல் நேசத்துரை (1923 - ................)*



உயர்ந்த தோற்றம், இனிமையான குரல், எத்துணை சிறந்த நடிப்பு இத்தனையும் கொண்ட நேசத்துரை 1923ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்தார். 1952ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ந்து மேடையேறிய ஞானசௌந்தரி, கனகசபை, தேவசகாயம்பிள்ளை முதலிய கூத்துக்களில் தோன்றி நாட்டுக்கூத்தில் தமது வரவைப் பதிவு செய்து கொண்டார்.

பாஷையூரில் 1961ஆம் ஆண்டு மேடையேறிய கட்டபொம்மன் கூத்தில் தோன்றிய இவர், 1952ஆம் ஆண்டு நிகழ்ந்த கண்டிஅரசன் கூத்தில் குணரத்தினம் என்ற பாத்திரத்திலும் தோன்றிச் சுவைஞர்களின் மனதைக் கிள்ளியெடுத்த பாடல் இது!

பாகம் செய்யும் வீட்டு வேலைக்காரனுக்கு
பார்த்தீரோ மந்திரி பத்தினி தந்திட்ட
வேகமுறு மொட்டன் வேலையைத் தந்திட்டார்
வேகுதே கால்கையும் நோகுதே ஐயையோ!

**(கண்டிஅரசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *சின்னப்பு பறுநாந்து (1934 - 1991)*



கட்டையான தோற்றமும், கணீரென்ற குரலும் கொண்ட பறுநாந்து 1934ஆம் ஆண்டு பாஷை யூரில் பிறந்தார். இரும்பைக் கவரும் காந்தம் போல, இளைய கூட்டம் நாட்டுக்கூத்தை நாடிவந்து கொண்டிருந்த காலகட்டத்திலே கூத்தரங்கிற்கு அறிமுகமான இவர் செபஸ்தியார், கனகசபை, புனிதவதி, ஞானசௌந்தரி முதலிய கூத்துக்களில் பாடி நடித்துச் சிறந்த கூத்தாளி என்ற புகழைப் பெற்றார்.

1961ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய கட்டபொம்மன் கூத்தில் சிறப்பாக நடித்துப் பலரின் பாராட்டைப் பெற்ற இவர், 1953ஆம் ஆண்டு மண்ணித்தலையில் அரங்கேறிய செபஸ்தியார் கூத்தில் அதிகாரியாகத் தோன்றிப் பாடிய பாடல் இது!

பூவிலென்னைச் சற்றேனும் மதித்திடாமல்
புறக்கணித்தே வெறுத்துவிட்டாய் மணமேசெய்ய
மாவீர சூரனென்று செபஸ்தியாரை
மதித்து மிகத்துதித்து நின்றாய் மண்ணிலுந்தன்
நாவினிமேல் அவனுடைய நாமந்தன்னை
நாடாது முடிய முற்றும் நடத்திவைப்பேன்!
சேவித்திடு செபஸ்தியாரை மறந்துகொண்டால்
சேமமுடன் நீயிருக்கப் போகுந்தானே!

**(செபஸ்தியார்)**

### *யோசேப் ஆசைத்துரை (1926 - 1990)*



சுருதியோடு கூடிய பாடல், சாந்தமான முகபாவம், சுத்தமான உச்சரிப்பு, கூத்தாளிக்குத் தேவையான இவைகள் ஆசைத்துரையிடம் அடைக்கலம் கேட்டு நின்றன. 1926ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர், 1948ஆம் ஆண்டு நிகழ்ந்த சவேரியார் கூத்தில் நடித்துப் பலரின் பாராட்டைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1953ஆம் ஆண்டு நடைபெற்ற கற்பகமாலா கூத்தில், முனிவனாகத் தோன்றிய இவர் தொடர்ந்து நிகழ்ந்த புனிதவதி, பூதத்தம்பி முதலிய கூத்துக்களிலும் தோன்றித் தனது கூத்தாளுமையை மெருகிட்டுக்கொண்டார். 1954ஆம் ஆண்டு பாஷையூரில் நடைபெற்ற செபஸ்தியார் கூத்தில் செபஸ்தியாராகத் தோன்றி இவர் பாடிய பாடல் இது!

தளபதியெனவே உரைநரபதியே! தங்கமா தடங்கொள் பூபதியே!
தாரணிதனையே தவளமுக்குடைக்கீழ் தனியரசாள் நராதிபனே!
வளபதியெனவே வருபெரும் செல்வ வாணிபம் காணிவை வேண்டேன்!
வலிதங்கு ராசபதவியும் விரும்பேன்! வாழ்க்கை நீர்க்குமிழியை நம்பேன்!
இளமதிதவழும் ஒளிசுடர் வானத் திறைவனாம் கிறிஸ்தெனும் பெருமான்
இரட்சை செய்தெமையே அர்ச்சிக்கக் குரிசில் இரத்தமே சிந்திய மறைபால்
களமதியின்றி ஒழுகுவதல்லால் காலமுமுன் வழிக்கிணங்கேன்!
கருது நின்மனம்போல் எதுவிதந்தானும் கட்டளை இட்டருள்கடனே!

**(செபஸ்தியார்)**

## *சிங்கத்துரை குணசிங்கம் (1925 - 1983)*



கூத்து காலத்தை வென்று மூத்து வாழ வேண்டும், காத்திருக்கும் இளைய நெஞ்சங்களில் மலைவிளக்காகப் பிரகாசிக்க வேண்டும் என்ற ஆர்வமேலீட்டினால் தூண்டப்பட்டுக் கூத்தரங்கிற்கு வந்தவர் தான் குணசிங்கம். 1925ஆம் ஆண்டு பாஷையூரில் பிறந்த இவர் 1951ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரங்கேறிய அந்தோனியார், செபஸ்தியார், நொண்டி என்ற கூத்துக்களில் தோன்றித் தன்னிடமுள்ள கூத்துத்திறனை நாடு காணவைத்தார்.

1962ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ந்து பூதத்தம்பி, சங்கிலியன், கருங்குயில் குன்றத்துக் கொலை என்ற சிறந்த கூத்துக்களைப் பாஷையூரிலும், யாழ். மாவட்டத்திலுள்ள ஊர்கள் தோறும் பாடி நடித்து மேடையேற்றிச் சிறந்த கூத்தாளியென்று பாராட்டப் பெற்றார்.

கணீரென்ற குரல் வாய்க்கப் பெற்ற இவர் இன்னிசை, காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உருப்படிகளை இனிமையாகப் பாடித் தன்முத்திரையைப் பொறித்துக் கொண்டார். 1983ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 04ஆம் நாள் மண்ணைவிட்டு இவர் மறைந்ததைத் தாங்கமுடியாமல், "ஓருறங்கும் பொழுதுதானும் அவனோடுள்ளம், உறவாடி கிடப்போமே அமுதவெள்ளம்" என்று கூத்துலகம் கலங்கித் தவித்தது. 1963ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய தேவசகாயம்பிள்ளை கூத்தில், தேவசகாயம்பிள்ளையாகத் தோன்றி நடித்துச் சுவைஞர்களைக் கவர்ந்த பாடலின் வரிகள் இவை!

கட்டியடித் திழுத்துக் கன்னத் துமிய வஞ்சத்
துட்டர்கைக் குட்பட்டதெங்கள் தொல்வினையை வெல்லவல்லோ!
மட்டில்லான் நன்மைபுரிவல்லோன் சுதன்ஞானக்
கட்டழகா! முத்தர் பணி கர்த்தனே! காரணனே!
கொத்துண்ட ரத்தங் குமுறவடி பட்டமெய்யிற்
பொத்துண்ட கண்ணுடைய பொல்லான்கை வல்லையத்தால்
குத்துண்டு அங்கவன்றன் கோலவிழி ஈந்தகர்த்தன்
பித்துண்டார் மட்டை பிழிசாற தாகாதோ!

**(தேவசகாயம்பிள்ளை)**

### *யோசேப் பாக்கியன் (1936 - 1994 )*



இளைய தலைமுறையைக் கூடத் தன்னிடம் இழுத்துக் கொண்ட பெருமை நாட்டுக்கூத்திற்கு உண்டு. பசிதீர்க்கும் பழக்குரல், பார் என்றே கவர்ந்திழுக்கும் நடிப்பு, துள்ளுதமிழின் ஆலோலம், துழாவியெடுக்கும் முகபாவம் இத்தனையும் கொண்டு 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூர் கூத்தரங்கிற்கு அறிமுகமானவர் தான் பாக்கியன்.

1936ஆம் ஆண்டு தைத்திங்கள் 25ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர் 1962ஆம் ஆண்டுக்குப் பின்னர் சவேரியார், அந்தோனியார், செபஸ்தியார் முதலிய கூத்துக்களில் தோன்றினார். 1966ஆம் ஆண்டு மனோகரனின் மாண்பு என்ற கூத்தில் சிறப்பாகப்பாடி நடித்த இவர் தனது கூத்து வலுவை வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும். பாஷையூர் கூத்தரங்கும், கலைஞர்களும் கண்ணீர்விட்டழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்1994ஆம் ஆண்டு ஆ,வணித்திங்கள் 25ஆம் நாள் மண்ணைவிட்டு மறைந்தார். 1993ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய அரிச்சந்திரா கூத்தில், இவர் அரிச்சந்திரனாகத் தோன்றிச் சுவைஞர்களின் விழிகளை நனைய வைத்துச் சிறப்பாகப் பாடிய பாடல் இது!

புண்ணியவதியே! உன்னைப் புலையனார் கள்ளியென்று
எண்ணியே சதியும் செய்ய எனக்கருள் தந்து சென்றார்
பண்ணிய வினையுமுண்டு பாவியான் உன்னைவெட்ட
நண்ணியே வாளையேந்தி நங்கையே வந்துநின்றேன்!

(அரிச்சந்திரா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. நாட்டுக்கூத்தில் இளைய தலைமுறை

கவிதை நெய்யூற்றிக் கூத்தெனும் காவிய விளக்கேற்றிநின்ற, புலவர் பெருமக்கள் பலர் வாழ்ந்து முடிந்த பூமி இந்தப் பாஷையூர் மண். எதுகையும், மோனையும் எங்கேயாவது இணைந்து விட்டால் கவிதை பிறந்துவிடும் என்ற தவறான கருத்தைத் தளமாகக் கொண்டு படைப்புக்களை ஆக்குவோர் மத்தியில், பாஷையூர் புலவர்கள் தமிழ்வீச்சுக் கொண்டு கம்பீரத்துடன் உயர்ந்து நிற்கின்றார்கள். மனித சமூகத்தின் நெழிவு சுழிவுகளை மடியிலே சுமந்து இந்த மண்ணிலே வாழ்ந்த புலவர்கள் தமது கூத்துப் பாடல்களைப் பிரசவித்துள்ளனர்.

நாட்டுக்கூத்து நெடுங்காலமாக நிலைத்து நின்று, வாழவேண்டு மென்ற ஆவலினால் தம்மையே மெழுகுவர்த்தியாக உருக்கிக் கொண்ட நம்மவர்களை இன்று நினைக்கின்றோம். கலைமகளின் விருந்தாகப் படைக்கப்பட்டதும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததுமான கூத்துக்களை இன்றுவரை கண்ணைப்போல் காத்துப் பொழுதெல்லாம், அவற்றைப் பாடிப்பாடி வளர்த்துக்கொண்டிருக்கும் எமது மண்ணின் மைந்தர்களாகிய இளந்தலைமுறையினரை, இங்கு தொட்டுக் காட்டுவது நன்றி மறவாமைக்குப் பொருத்தமுடையதென நினைக்கின்றேன்.

***அந்தோனி பாலதாஸ் (1940 - ............)***



குரலினிமையும், கொள்ளைகொள்ளும் நடிப்பும் கொண்டு 1952ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய, கண்டி அரசன் கூத்தில் குழந்தை நடிகராகத் தோன்றிய பாலதாஸ், அன்று தொட்டு இன்று வரையும் கூத்துக்கெனவே தம்மை அர்ப்பணித்து வாழுகின்றார். 1940ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 26ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர்,1961ஆம் ஆண்டு நிகழ்ந்த கட்டபொம்மன் கூத்தில் தோழியாகவும், சிப்பாயாகவும் தோன்றித் தன்னையும் ஒரு கூத்தாளியாக நிலைநிறுத்திக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 1962ஆம் ஆண்டு மேடையேறிய, ஞானரூபன் கூத்தில் தோழியாக வந்து சுவைஞர்களின் பாராட்டைப் பெற்ற இவர், 1970ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய முத்தா மாணிக்கமா கூத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் பாத்திரத்தில் தோன்றிப் பாடி நடித்தது மட்டுமன்றி, அண்ணாவியாராகவும் பணியாற்றி யுள்ளார். 1971ஆம் ஆண்டு தாளையடியில், அந்தோனியார் கூத்தை இயக்கிப் பெரும் புகழ் பெற்ற இவர் பல கூத்துக்களை ஆக்கிய புலவராயும் விளங்குகின்றார்.

கலாபூஷண விருது பெற்ற இவர் நீ ஒரு பாறை, அனைத்தும் அவரே, பத்திரிசியார், எஸ்தாக்கியார் முதலிய கூத்துக்களை எண்பது தொண்ணூறுகளில் ஆக்கி மேடையேற்றியுமுள்ளார். 2003ஆம் ஆண்டு சவுலன் சின்னப்பர் கூத்தை எழுதி இயக்கியதோடு பாஷையூரில் மேடையேற்றியும் வைத்தார். முன்னர் வீரத்தளபதி கூத்தை நூலாக்கிய இவர், சவுலன் சின்னப்பர் என்ற கூத்தையும் 2003ஆம் ஆண்டு நூலாக்கியுள்ளார். கண்டி அரசன் கூத்தில் இவர் பாடி நடித்த இந்தப் பாடல் இன்றும் என் மனதிலே நிழலாடி நிற்பதென்னவோ உண்மை.

கருணைநிறை திருபாதங்கள் காலைக் கும்பிட்டோமே
கட்டகத்தால் வெட்டாதையா கடவுளும்மைக் காப்பார்
கால்கையெல்லாம் பதறியிரு கண்ணீரோடுதையோ!
கலைத்துவிடும் ஓடியெங்கும் பிழைத்திடுவோம் நாமும்!

**(கண்டிஅரசன்)**

### *வஸ்தியாம்பிள்ளை அல்விறெட் (1939 - .................)*



தலைநிமிர்ந்த செருக்கோடும், துள்ளி யெழுந்த மகிழ்வோடும், நாட்டுக்கூத்தை வளர்க்கவேண்டும் என்ற முனைப்போடும் கூத்த ரங்கிற்கு அறிமுகமானவர்தான் அல்விறெட். 1939ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 07ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர், 1954ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய புனிதவதி கூத்தில் அரசனாகப் பாத்திரமேற்றுச் சிறப்பாகப் பாடி நடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நிகழ்ந்த பூதத்தம்பி கூத்தில் அந்திராசியாகவும், தேவசகாயம்பிள்ளை கூத்தில் அரசனாகவும், கட்டபொம்மன் கூத்தில் கட்டபொம்மனாகவும் பாடி நடித்துச் சுவைஞர்களின் பாராட்டைப் பெற்றார். சிம்மக்குரலாலும், சிறப்பான நடிப்பாலும் இவர் தனக்கென ஒரு சுவைஞர் வட்டத்தைப் பெற்றிருந்தார்.

1978ஆம் ஆண்டு பேராசிரியர் சு. வித்தியானந்தனால் ''தேசிய கலைவேந்தன்'' பட்டமும், 1979ஆம் ஆண்டு கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரையால் ''கலைப் பொக்கிஷம்'' பட்டமும், 1981ஆம் ஆண்டு மறைந்த ஆயர் வ. தியோகுப்பிள்ளையால் ''சிம்மக்குரலோன்'' பட்டமும், 1982ஆம் ஆண்டு வண. குலாஸ் அடிகளால் ''எழிலிசை மன்னன்'' பட்டமும், 1988ஆம் ஆண்டு வண. சாள்ஸ் அடிகளால் ''கலைக்குரிசில்'' பட்டமும், 1999ஆம் ஆண்டு பேராசிரியர் அ.சண்முகதாசினால் ''பத்மஸ்ரீ'' பட்டமும், 2000ஆம் ஆண்டு வண. ஜெறோம் அடிகளால் ''கலைமாமணி'' பட்டமும், 2001ஆம் ஆண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் ''கலைஞான கேசரி'' பட்டமும், 2002ஆம் ஆண்டு யாழ். பிரதேச கலாசாரப் பேரவையால் ''யாழ்ரத்னா'' பட்டமும், 15.12.2007 அன்று கலை, கலாசாரத் திணைக்களத்தால் ''கலாபூஷணம்'' பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது. நாட்டுக் கூத்தில் 157 இராகங்கள் இருப்பதாகக் கூறும் இவர், பல கூத்துக்களை இயக்கி மேடையேற்றிய அண்ணாவியுமாவார்.

1988ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய தேவசகாயம்பிள்ளை கூத்தில் அரசனாகத் தோன்றிப் பாடிய இக்கலைஞனைச் சுவைஞர்கள் மறந்திருக்க நியாயமில்லை.

முந்திடுமொன்னார் சென்னி முடியுடன் இடறிவாகை
சிந்திடு மதிகள் தேர்ந்து செப்பு மந்திரியே கேளாய்!
வெந்திடுங் கனல்போல நீயும் விழிகடை சிவப்ப வெம்பி
வந்திடுங் கருமந்தன்னை வகைபெற உரைசெய்வாயே!

**(தேவசகாயம்பிள்ளை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஞானப்பிரகாசம் தேவதாசன் (1939 - ..........)



1990ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 04ஆம் நாள்! அன்று பௌர்ணமி என்று நினைக்கின்றேன். கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத் திறந்த வெளியரங்கில் புலவர் தேவதாசனின் ''வித்துக்கள்'' என்ற கூத்து அரங்கேற்றம் செய்யப்பட்டது. அண்ணாவியார் வ. அல்விறெட் நெறியாள்கை செய்த இப்படைப்பு கூடியிருந்த சுவைஞர்களையும், என்னையும் கூடச் சுண்டியிழுத்ததென்றால் அது மிகையல்ல.

ஞானப்பிரகாசம் மரியை என்பவர்களுக்கு மகனாக 1939ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 26ஆம் நாள், பாஷையூரில் பிறந்த இவரால் படைக்கப்பட்ட கூத்துக்களுள் வித்துக்களுக்கு ஒரு தனியிடம் உண்டு. சாதாரண அறிவுடன் மற்றவர்கள் கூத்துத் துறையில் நுழைந்ததைவிட, கற்றவர்கள் அத்துறைக்குள்ளே புகுவது நாட்டுக்கூத்துக்கு ஏற்பட்ட ஒரு பிரகாசமான எதிர்காலம் என்றே சொல்லிக்கொள்ளலாம்.

நாட்டுக் கூத்திலுள்ள நல்ல பல இராகங்களைத் தெரிந்து வைத்துக் கொண்ட இவர் புனித அச்சியார் (1987), வித்துக்கள் (1990), எல்லாளன் (2002) முதலிய கூத்துக்களையும் எழுத்துரு வாக்கஞ் செய்து, தனது கூத்துப் புலமையின் பரிமாணத்தைச் சுவைஞர்கள் கண்டானந்திக்கச் செய்தார். இம்மூன்று கூத்துக் களையும் நூலுருவாக்கிய இவர், 2000ஆம் ஆண்டு ''கலாபூஷணம்'' விருதையும் பெற்றார். புதுமையாக எதையாவது ஆக்கவேண்டும் என்ற பேரவாக் கொண்ட இவர், கூத்தின் முதல் தரச் சுவைஞரு மாவார். பாஷையூரின் புகழ் பெற்ற அண்ணாவிமார்களான ம. பாவிலுப்பிள்ளை, சி. அந்தோனி என்பவர்களின் பாடலைக் கேட்டு இவர் மெய்மறந்து போவார்.

எடுத்த செயலைத் தொடுத்து முடிக்கும் ஆற்றல் கொண்ட, இவரது கூத்து முயற்சிகளின் கொடுமுடியாக ''வித்துக்கள்'' படைப்பு விளங்குகின்றது. அதில் அப்பாமுதலியின் வரவுப் பாடல் உள்ளது. கற்பனை அழகும், கருத்தாழமுமுள்ள இப்பாடலைக கேட்கும் எவரும் இவரது கவியாளுமையால் கவரப்படாமலிருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையோடும் எழில் மேவும் நகரமாம் - மக்கள்
அறிவிற்கு அகிலத்தில் சிகரமாம் - எங்கும்
கலைதரும் மாடங்கள் கானங்கள் கேட்டிடும்
கனிகாணும் புரத்துக்கு ஏகுவேன் நானே!

**(வித்துக்கள்)**

### *வெலிச்சோர் மிக்கேல் (1945 - ..........)*



வெலிச்சோர் காணிக்கைமுத்து என்பவர்களுக்கு மகனாக மிக்கேல் 1945ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில், கல்வி கற்ற இவரிடம் கலையுணர்வும், கவியெழுதும் ஆற்றலும் நிறைந்து காணப்பட்டன.

ஆரம்பத்தில் வசன நாடகம், இசைநாடகம் என்பவற்றில் முத்திரை பதித்து வளர்ச்சி கண்டிருந்த இவரை, முன்னோர் தொட்டு வளர்த்த நாட்டுக் கூத்தின் ஆளுமை வந்து ஒட்டிக் கொண்டது.

1991ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய, கிளைகள் என்ற கூத்து இவரது அரங்க நுழைவிற்கு வழிதிறந்தது எனலாம். கூத்தை நெறியாள்கை செய்வதில் தனித்திறமை கொண்ட இவர், 1993ஆம் ஆண்டு புனித அருளானந்தர் கூத்தை எழுதி அரங்கேற்றியதனால் தானுமொரு முழுமைபெற்ற கூத்துப் புலவன் என்பதைச் சுவைஞர்களின் மனத்தளத்தில் பதியவைத்தார்.

அடக்கமும், அர்ப்பணிப்பும், ஆழமான கலைவீச்சும், அன்பொழுகும் பேச்சுத்திறனும் கொண்ட இவரது அரங்க நிகழ்வுகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன. கூத்தில் புதிய பரிமாண எல்லைகளைச் சென்று தொடவேண்டும் என்ற, இவரது களமுயற்சிகள் இளைய வட்டத்தினருக்கு வரப்பிரசாதமாக அமைந்ததெனலாம். கூத்துலகமும், சுவைஞர் கூட்டமும் இவரைப் போன்றோரிடம் காலத்தாலும் அழியாத, காத்திரமான கலைமுயற்சிகளை இனிமேலும் எதிர்பார்த்திருக்கும் என்பதைச் சொல்லி வைக்கத்தானே வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைஞர்களின் இதயத்து ஆழத்தில் ஊடுருவிச் சென்று சுவையுணர்வுகளைக் கிளறிவிட்டதோடு, அரங்க முயற்சிகளில் காணாத பதிவுகளையும் ஏற்படுத்திய இவரது அருளானந்தர் கூத்தில் ஒலித்த அருமையான பாடல் இது!

கேட்டின் வழியே சென்றுலகம்
    கேட்பார் இன்றிப் பெருநரகக்
கூட்டில் விழுவார் தமக்கிரங்கிக்
    குருவாய் வந்தீர்! கலைமானின்
கோட்டின் நடுவே குருசிருந்தீர்!
    குறையா நிறைவே! திருமோட்ச
வீட்டின் பேறு பலனடைய
    வேண்டு கின்றேன் இறைமகனே!

**(அருளானந்தர்)**

### *முடியப்பு அருட்பிரகாசம் (1944 - ..........)*



கனிவான தொனியும், கச்சிதமான நடிப்பும் கொண்ட அருட்பிரகாசம் 1944ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 07ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். ஊக்கமும், நாட்டுக்கூத்தை மனதார நேசித்து வளர்க்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கமும் கொண்ட இவர், 1954ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய ஞானசௌந்தரி கூத்தில் தோழியாகத் தோன்றிக் கூத்துத்துறையில் நுழைந்தார்.

தொடர்ந்து சந்தியோகுமையோர் படைவெட்டில் தளபதியாகவும் (1955), ஜெயசீலனில் கதாபாத்திரமாகவும் (1965), மனோகராவில் மனோகரனாகவும் (1982), யோசப்வாசில் தளபதியாகவும் (1985), சற்குணானந்தனில் விஜயசிம்மனாகவும் (1990), இலங்கேஸ்வரனில் கதாபாத்திரமாகவும் (1991), சங்கிலியனில் சங்கிலியனாகவும் (1992), குருதியில் மலர்ந்த அன்பு மறையில் வேங்கை மாறனாகவும் (1994), புலவனுக்குத் தலையீந்த புரவலனில் குமணனாகவும் (1996),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவசகாயம்பிள்ளையில் கப்பித்தானாகவும் (1999), பண்டாரவன்னியனில் குமாரவன்னியனாகவும் (2001), விடுதலைப் பயணத்தில் மோசேசாகவும் (2003) தோன்றிப் புகழ் பெற்றார்.

சம்மிக்கேல், சங்கிலியன், குருதியில் மலர்ந்த அன்புமறை, புலவனுக்குத் தலையீந்த புரவலன், விடுதலைப் பயணம், இவரே உலகின் ஒளி, நாவழியா நாயகன், பண்டார வன்னியன் முதலிய கூத்துக்களை ஆக்கிய புலவரான இவர், இவற்றில் சிலவற்றை இயக்கிய அண்ணாவியாராகவும் விளங்குகின்றார். இவர் ஆக்கிய மண்ணின் மைந்தர்கள் கூத்து நூலுருவாகி (2006) வெளிவந்துள்ளது.

இவர் கலைச்செல்வன் (2002), கூத்திசைப் பாவலன் (2003), மரபுக் கலைச்சுடர் (2004), யாழ் ரத்னா(2008) என்ற விருதுகளையும் பெற்றுப் புகழடைந்தார். இவர் ஆக்கிய பண்டாரவன்னியன் கூத்தில் தோன்றும் கைலாய வன்னியனின் வரவுப் பாடல் இது. பாடலும், நடிப்பும் சுவைஞரின் விழிகளுக்கு நல்ல தேடலாகவே இருக்குமென்பதைச் சொல்லவா வேண்டும்.

கதிர் தந்திடும் மழையால் கழனி நிறைந்திட
புதிர் தந்திடு செந்நெல் விளைந்து செழித்திட
நதி பொங்கிட நிதிதங்கிட........
எதிர் வந்திட மதிமந்திரி அவையில் வந்தேனே!

**(பண்டாரவன்னியன்)**

### *அருளப்பு அல்போன்ஸ் (1951 - .............)*



நல்ல குரல் வளமும், நயமான நடிப்பும், நாட்டுக் கூத்து அபிமானமும் கொண்ட அல்போன்ஸ் 1951ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 27ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். கூத்துப் பாடல்களால் கவர்ந்திழுக்கப்பட்ட இவர், 1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாஷையூர் கூத்தரங்கிற்கு அறிமுகமானார்.

1992ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய முத்தா மாணிக்கமா கூத்தில் கோவலனாகத் தோன்றி நடித்துச் சுவைஞர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டைப் பெற்றார். தொடர்ந்து ஞானசௌந்தரியில் பிலேந்திரனாகவும் (1993), வெ. மீக்கேல் ஆக்கிய கிளைகளில் குருவாகவும் (1996), நாவழியா நாயகனில் அந்தோனியாராகவும் (1997), மனுநீதிச் சோழனில் முனிவராகவும் (1998), சவுலன் சின்னப்பரில் முடியப்பராகவும் (2005) பாடி நடித்துக் கூத்து வரலாற்றில தன்னைப் பதிவு செய்து கொண்டதுடன், 1998ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 08ஆம் நாள் நிகழ்ந்த, வடமாகாண நாட்டுக் கூத்துப்போட்டியிலே முத்தா மாணிக்கமா கூத்தில் கோவலனாகத தோன்றிய இவர் பார்வையாளர்களைப் பிரமிக்கவைத்தார். கோவலன் பாத்திரமேற்று இவர் பாடிய குறம் சுவைஞர்களின் விழிகளை உசுப்பி நனைய வைக்கத் தவறவில்லை.

கோலமயில் ஏறுசிவ பாலவடிவேலா! - எந்தன்
குறை தவிர்த்தாண்டருள் புரிவாய் தருமதைநூலா!
விலை மகளின் வலைதனிலே வீணன் விழுந்தேனே!
குலமகளே! கண்ணகிஎன் குற்றம் பொறுப்பாயோ!

**(முத்தா மாணிக்கமா)**

### *பிரான்சிஸ் யூல்ஸ் கொலின் (1955 - ...............)*



மண்ணின் புகழ் பூத்த கூத்தாளி மைந்தர்களான பெரியதம்பி அருளானந்தம், கபிரியேல் அந்தோனி என்பவர்களின் கூத்துப் பாடல்களால் கவரப்பட்டுக் கூத்துலகிற்கு அறிமுகமானவர் தான் யூல்ஸ்கொலின். ஜெசிமன் என்று செல்லமாக அழைக்கப்படும் இவர், 1955ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 23ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். எடுப்பான குரலும், அரங்கு காணாத நடிப்பாற்றலும் கொண்ட இவரது கூத்து அரங்கப் பிரவேசம் 1976ஆம் ஆண்டுக்குப் பின்னரே நிகழ்ந்தது.

இவர் தனது கன்னிக் கூத்தான இம்மனுவலில் (1978) கள்ளனாகத் தோன்றிச் சுவைஞர்களைப் பிரமிக்கவைத்தார். தொடர்ந்து பாஷையூரில் மேடையேறிய கட்டபொம்மனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாக்சனாகவும் (1992), முத்தா மாணிக்கமா கூத்தில் நெடுஞ்செழி யனாகவும் (1998), அன்னை வேளாங்கண்ணியில் முக்கிய பாத்திரமாகவும் (இலுப்பைக் கடவை - 1996), சோழன் மகனில் அரசனாகவும் (1998), அந்தோனியாரில் பேயாகவும் (1999), யூலியஸீஸரில் புறூட்டசாகவும் (2002), சவுலன் சின்னப்பரில் நடிப்புடன் நெறியாளராகவும் (2005) செயற்பட்டு நாட்டுக்கூத்தில் தனது பிரசன்னத்தைப் பொறித்துக் கொண்டார்.

பாஷையூர்-பிரான்ஸ் நட்புறவுக் கழகத்தினால் பல்கலை ரத்னா விருதையும் (2005), பாசெய்யூர் கலையகத்தால் கலைஞான வித்தகர் விருதையும் பெற்றார். முத்தா மாணிக்கமா கூத்தில் நெடுஞ்செழியனாகத் தோன்றி கேட்ட மக்களையே சொக்கவைத்து இவர் பாடிய பாடல் இது!

இப்படிப்பொய் சொல்லலாமோடா
படுபாதக மூடனே!
தப்பிதக் குணங்கள் போமோடா
இங்கென்னை அண்டியே வந்து மெலிந்திடு
புல்லனே! வெஞ்சினமாகுது நீயறி....!

**(முத்தா மாணிக்கமா)**

***அகஸ்ரின் அன்ரன் (1958.............)***



தானாடாவிட்டாலும் தசையாடும் என்ற முதுமொழிக்கேற்ப, பாஷையூர் மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கூத்தின் மீது தணியாத பற்றுண்டென்பதை வலியுறுத்தினாற் போல் அகஸ்ரின் அருளம்மா என்பவர்களுக்கு மகனாக 1958ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 29ஆம் நாள் அன்ரன் பிறந்தார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில், கல்வி பயின்ற இவரது மனத்தில் நாட்டுக்கூத்தின் இசையலைகள் பொங்கிப் பிரவாகித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவசகாயம்பிள்ளை, கனகசபை, அந்தோனியார், கண்டி அரசன் முதலிய ஆரம்பகாலக் கூத்துக்களின் மேடையேற்றத்தைப் பார்த்துச் சுவைத்த, இவருக்குக் கூத்தின் மேலுள்ள மோகம் கொஞ்சமும் குறையாமல் வளர்ச்சியடைந்தது. 1975ஆம் ஆண்டு சலமோன் பறுநாந்து (ராசி) நெறிப்படுத்திப் பாஷையூரிலே மேடையேற்றிய ஞானசௌந்தரி கூத்திலும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த புனிதவதி கூத்திலும் தோன்றிச் சுவைஞர்களைக் கவர்ந்தார். ஒத்திகையின் போதும், அரங்கேற்றத்தின் போதும் இவரிடமுள்ள கூத்தபிமானம் பீறிட்டு வெளிக்கிளம்பியதை என்னால் அவதானிக்க முடிந்தது. புலம்பெயர்ந்து சென்றாலும், கூத்தோடு இரண்டறக் கலந்து விட்ட இவரது உணர்வலைகள் கூத்து, கூத்து என்றே ஒலியெழுப்புகின்றன.

நல்ல கூத்தாளியாகவும், நெறியாளனாகவும் இயங்கியதோடு மட்டுமல்ல 2005ஆம் ஆண்டு தொடக்கம் ஈழத்துச் சிவந்தமண், வரிபுலித்தேவன், இராஜராஜ சோழன், மோயீசன் போன்ற கூத்துக்களையும் எழுத்துருவாக்கினார். 2008ஆம் ஆண்டு அமரஜோதி என்ற கூத்தையெழுதிப் பிரான்சில் அரங்கேற்றினார். இனிய குரலும், ஏற்றமிகு நடிப்பும் கொண்ட இவரால் கூத்துலகம் பெருமைப்பட நியாயமுண்டு. அமரஜோதி கூத்தில் இவர் எழுதிய இனிய பாடல் இது!

நீதி நெறிகளெல்லாம் சாய்ந்து போச்சு தோழா!
நீசர் கொடுமையெல்லாம் நிறைந்து போச்சு தோழா!
ஆணவம் ஒரு நாளில் ஆட்டம் காணும் தோழா!
ஆண்டவன் சரியான தீர்ப்புக் கொடுப்பான் தோழா!

(அமரஜோதி)

### *யோசப் வின்ஸ்லோ (டினேஸ் 1968 - ............)*



1991ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பாஷையூரில் அரங்கேறிய, கட்டபொம்மன் கூத்தில் தோன்றிய வின்ஸ்லோவுக்கு அதுவே முதல் கூத்தாகவும் அமைந்தது. துடிப்பான உடல் வாகுவும், கலப்பில்லாத தொனி வளமும் கொண்ட இவர் 1968ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 19ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்தை உயிராக நேசிக்கும் கூத்தாளியான இவர் தொடர்ந்து மேடையேறிய தியாகத்தாயில் தளபதியாகவும் (1991), கண்டி அரசனில் ஆங்கிலேய தளபதியாகவும் (1992), பாதையின் படிக்கற்களாய் கூத்தில் வழிப்போக்கனாகவும் (1992), கிளைகளில் மனேஜராகவும் (1993), விக்கிரமாதித்தனில் கதாபாத்திரமாகவும் (1993), புனிதவதியில் தளபதியாகவும் (1994), ஞானசௌந்தரியில் துலுக்க மன்னனாகவும் (1994), பண்டாரவன்னியனில் ஆள்பதியாகவும் (1995), அருளானந்தரில் அரசனாகவும் (இலுப்பைக் கடவை 1997), சங்கிலியனில் சங்கிலியனாகவும் (நாச்சிக்குடா 1999), வீரத்தளபதியில் கதாபாத்திரமாகவும் (மூன்றாம்பிட்டி 2002), சவுலன் சின்னப்பரில் சூழ்ச்சிக்காரனாகவும் (2005), கற்பகமாலாவில் வீரசிம்மனாகவும் (2005), புலவனுக்குத் தலையீந்த புரவலனில் முக்கிய பாத்திரமாகவும் (2007) தோன்றிச் சிறப்பாகப் பாடி நடித்துச் சுவைஞர்களின் பாராட்டைப் பெற்றார்.

இவரது கூத்துத் திறனைவியந்து பாஷையூர் கலையகம் இன்னிசை வேந்தன் என்ற விருதை வழங்கியது. (2002) கற்பகமாலா கூத்தில் வீரசிம்மனாகத் தோன்றிப் பாடிய பாடல் இவரை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும்.

மாணிக்கம் போலொளி மேவும் பல மாடம்
ஆணிப்பொன் முத்துக்கள் ஆடும் பலபீடம்
பேணிக்கொள் என்று விளங்கும் உயர்கோடம்
காணிக்கை கண்களோர் ஆயிரம் வேண்டுமே!

**(கற்பகமாலா)**

### *செபஸ்தியாம்பிள்ளை சுவக்கீன்பிள்ளை (பாலையா 1942 - ....)*



கூத்தாளியான சந்திரராசாவின் உந்துதல் தான் சுவக்கீன்பிள்ளையைக் கூத்து அரங்கிற்கு அறிமுகம் செய்து வைத்தது. 1942ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 16ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர், 1961ஆம் ஆண்டு கண்டி அரசன் கூத்தில் முதன்முதல் தோன்றித் தனது கூத்தாளுமையைச் சுவைஞர்களுக்கு விருந்தாக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பாஷையூரில் அரங்கேறிய ஞானசௌந்தரியில் தருமராசாவாகவும் (1963), எஸ்தாக்கியாரில் கப்பற்காரனாகவும் (1965), படைவெட்டில் சுல்தானாகவும் (1970), கனகசபையில் பொலிஸ் அதிகாரியாகவும் (1971), புனிதவதியில் அரசனாகவும் (1994), அந்தோனியாரில் அரசனாகவும் (1994) தோன்றி நடித்த இவருக்கு "நாட்டுக்கூத்துக் கலைவேந்தன்" என்ற விருதைப் பாசெய்யூர் கலையகம் வழங்கியது. (2002).

இனிமையான குரலும், ஈடிணையற்ற நடிப்பும், ஏறுபோன்ற நடையும் கொண்ட இவரது அவைக்காற்று அளிக்கைகள் சுவைஞர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன. ஞானசௌந்தரி கூத்தில் தருமராசாவாகத் தோன்றிக காட்டிற்கு வேட்டையாடப் போவதற்கு, மகளிடம் கேட்கும் இப்பாடலில் மோதும் பாச உணர்வுகள் பீறிட்டுக்கிளம்புவதை எவராலும் எளிதில் இணங்கண்டு கொள்ளமுடியும்.

ஊரார் குடிசனங்கள் - வந்து
உத்தாரம் செய்தனர் என்மகளே!
விளைந்த பயிர்களையே - காட்டு
வேங்கை விலங்கினம் ஆனதெல்லாம்
அழித்ததென்று உத்தாரம் செய்தனர் என் மகளே!

**(ஞானசௌந்தரி)**

***கிறேசியன் டேமியன் (1969 - ......)***



அண்ணாவியார் மு. அருட்பிரகாசத்தின் குரலினிமையும், கூத்தாற்றலும் தான் டேமியனை அரங்கிற்கு இழுத்து வந்ததெனலாம். 1969ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 29ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர், 1994ஆம் ஆண்டு முற்றுகையை முறியடிப்போம் என்ற கூத்தில் அகதியாக முதன்முதலில் தோன்றினார்.

தொடர்ந்து மேடையேறிய பாதையின் படிக்கற்களாய் கூத்தில் கதாபாத்திரமாகவும் (1996), முத்தா மானிக்கமா கூத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியனாகவும் (1997), பண்டார வன்னியனில் அரசனாகவும் (1998), அந்தோனியாரில் அரசனாகவும் (1999), புனித அசீசியாரில் கதாபாத்திரமாகவும் (2000), விக்கிரமாதித்தனில் சிவனாகவும் (1998) தோன்றிச் சுவைஞர்களைச் சுண்டியிழுத்தார்.

பொன்னான குரலாலும், புதுமையான நடிப்பாலும் இளைய சுவைஞர் வட்டத்தையே கவர்ந்திழுத்த இவர், புனித அருளானந்தர் கூத்தில் பேரரசனாகத் தோன்றிப் பாடிய இப்பாடலை இலகுவில் எவராலும் மறக்கமுடியாது.

அதியுயர் புகழிசை பாடும் மன்னனாம்
கதிகலங்கிடும் எனது ஆணை கண்டதும்
சரியென மதிதரும் பாதையில் செல்பவன்
விதி தடுத்திடும் போது கொள்பவன்!

**(அருளானந்தர்)**

### *ஞானப்பிரகாசம் யுவராசா (1953 - ..........)*



தோற்றப் பொலிவும், தேனையூற்றும் குரலினிமையும், நெஞ்சைத்தொடும் நடிப்பும் கொண்ட யுவராசா, 1953ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 11ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். கூத்தின் மேற்கொண்ட காத்திரமான நேசிப்புத்தான் இவரைக் கூத்தரங்கிற்கு இழுத்து வந்ததெனலாம். 1995ஆம் ஆண்டு பாஷையூரில் மேடை யேறிய இவரது, முதற்கூத்தான கட்டபொம்மனில் ஆங்கிலேய மாக்ஸ்வெல்லாகத் தோன்றி அற்புதமாக நடித்துச் சுவைஞர்களின் பாராட்டையும் பெற்றார்.

தொடர்ந்து அரங்கேறிய சங்கிலியனில் போராளியாகவும் (1998), கிளைகளில் அரசனாகவும் (2002), எல்லாளனில் கதாபாத்திரமாகவும் (2002) தோன்றித் தன் ஆற்றுகை நிகழ்வை எல்லோரும் வியக்கும்படி செய்தார். கட்டபொம்மன் கூத்தில் மாக்ஸ்வெல்லாகத் தோன்றி மக்களைக் கவர்ந்த இவரின் இப்பாடலை மறக்கமுடியாது தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகுவேன் நானே - எட்டப்பன்முன்
ஏகுவேன் நானே!
எட்டயபுரத்தைக் கிட்டி அணுகுவேனே!

**(கட்டபொம்மன்)**

***அந்தோனிப்பிள்ளை அலெக்சாண்டர் (யோகராசா 1959 -.......)***



கூத்தாளி நெல்சனின் வழிகாட்டுதலிலே, நாட்டுக்கூத்துக்கு ஒரு புதிய வரவாகக் கிடைத்த அலெக்சாண்டர் 1959ஆம் ஆண்டு மாசித் திங்கள் 24ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார். நாட்டுக்கூத்து விரிவான நோக்கில், சரியான திசையில் செல்ல வேண்டுமென எண்ணித் தனது ஆற்றுகைகளை இவர் வெளிக்கொணர்ந்தார்.

1992ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய தியாகத்தாய் கூத்தில், இவர் போராளியாகத் தோன்றிச் சிறப்பாக நடித்ததினால் சுவைஞர் நெஞ்சங்களில் இடம் பிடித்துக்கொண்டார்.

1993ஆம் ஆண்டு நிகழ்ந்த பாதையின் படிக்கற்களாய் என்ற கூத்தில் போராளியாகத் தோன்றிய இவர் கூத்தெழுத்துரு வாக்கத்தில் மட்டுமல்ல, அருளப்பர் (1994), ஒளிபிறந்தது (1995) என்ற கூத்துக்களையும் இயக்கி மேடையேற்றியுள்ளார். சிறுவர்கள் பாடி நடித்த இவரது அருளப்பர் கூத்தில் இடம்பெற்ற பக்தியருட்சியான பாடல்களால் எத்தனையோ நெஞ்சங்களை ஈர்த்துவிடலாம் அல்லவா!

ஆண்டவனால் அனுப்பப்பட்ட அருளப்பமுனி நானல்லோ!
பாவத்தை விட்டு விலகவேண்டுமென்று உரைப்பவன் நானல்லோ!
ஏரோது மன்னன் மனதை மாற்ற
அரண்மனை நோக்கிச் செல்லுகிறேன்!
அவனின் கொடிய செயலை நீக்க
அருள் தருவாய் ஆண்டவா!

**(அருளப்பர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***யேமிசிங்கம் மிக்கோர்சிங்கம் (1957 - ...........)***



பழம்பெரும் கூத்தாளியான தந்தை யேமிசிங்கத்திடமிருந்து, நாட்டுக்கூத்துக் கொடையைப் பெற்றுக் கொண்டவர் தான் மிக்கோர்சிங்கம். 1957ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 16ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர், 1970ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 30ஆம் நாள் மண்ணித் தலையில் மேடையேறிய அந்தோனியார் கூத்தில் முதன்முதலாக நடித்துக் கூத்துத்துறையில் காலடிவைத்தார்.

தொடர்ந்து பாஷையூரில் நிகழ்ந்த ஞானரூபனில் தேவலங்காரனாகவும் (1971), செபஸ்தியாரில் கதாபாத்திரமாகவும் (1989), சங்கிலியனில் பரராசசேகரனாகவும் (1992), யோசவ்வாசில் யுவாமாகவும் (1992), பண்டார வன்னியனில் ஆங்கில மந்திரியாகவும் (1995), பத்துக்கட்டளையில் முக்கிய பாத்திரமாகவும் (2002), நாவழியா நாயகனில் மடுத்தீனாகவும் (2003), கட்ட பொம்மனில் தானாபதிப்பிள்ளையாகவும் (2004), கற்பகமாலாவில் தந்தையாகவும் (2004), சவுலன் சின்னப்பரில் பவுலாகவும் (2005), புலவனுக்குத் தலையீந்த புரவலனில் பெருந்தலைச் சாத்தனாராகவும் (2005), அரிச்சந்திராவில் நட்சத்திர ஐயராகவும் (2006) தோன்றிச் சிறப்பாக நடித்த இவர் தியாகத்தாய், பாதையின் படிக்கற்களாய் முதலிய கூத்துக்களிலும் நடித்துப் பலரின் பாராட்டுக்களையும் பெற்றார்.

ஏற்ற பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்வதில் ஆற்றலுள்ள நடிப்போடு, இனிமையான குரல் வளமும் கொண்ட இவர் 1992ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய புனித அருளானந்தர் கூத்தில் பாடிய நெஞ்சையள்ளும் பாடலிது!

நான் செய்த பாவம் எதுவோ
கண்முன்னே துயரின் உருவோ
நல்லோர்கள் வாதையின் நெருப்பினால்
எரித்தார் தான் யாரோ!
தாய்நாட்டில் யாவும் துறந்தே
தமிழ் நாட்டில் பணியைத் தொடர்ந்தேன்!

**(அருளானந்தர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானப்பிரகாசம் லோறன்ஸ் (வீரன் 1956 - ............)



சிறந்த கூத்தாளியான அமரர் செல்லக்குமார் சின்னக்குமாரன் கதாபாத்திரமேற்று நடித்து, 1976ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய பூதத்தம்பி கூத்து சுவைஞரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. அதனை ஒரு தூண்டலாகக் கொண்டு துலங்கியமையினால் தான் லோறன்ஸ் கூத்தரங்கிற்கு அறிமுகமானார்.

1956ஆம் ஆண்டு தைத் திங்கள் 23ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர், 1976ஆம் ஆண்டு நிகழ்ந்த பூதத்தம்பி கூத்தில் முதன்முதலாகத் தோன்றி நடித்தார்.

தொடர்ந்து இவர் கட்டபொம்மனில் முக்கிய பாத்திரமாகவும் (1988), பண்டார வன்னியனில் அரசனாகவும் (1989), ஞான சௌந்தரியில் தருமராசாவாகவும் (1990), புனிதவதியில் அமைச்சனாகவும் (1992), அந்தோனியாரில் தச்சன் மகனாகவும் (1993), முத்தா மாணிக்கமா கூத்தில் பொற்கொல்லனாகவும் (2003) தோன்றித் தனது கூத்தாளுமையை வெளிக்காட்டத் தவறவில்லை.

இவரது பாடலைக் கேட்டால் பாலெல்லாம் நல்லாவின் பாலாகுமா என்பதை மாற்றிக் குரலெல்லாம் லோறன்சின் குரலாகுமா என்று சொல்லத்தோன்றும். நல்ல குரல்வளமும், நயங்கனிந்த நடிப்புப்பலமும் இருக்கும்வரை இவர் கூத்தரங்கில் தோல்வியடைய நியாயமில்லைத்தான். பண்டாரவன்னியன் கூத்தில் இவர் பாடிய பாடல் இது!

வன்னி மன்னன் ஏனழைத்தார் அறியேன்
உன்னி நான் சென்றவர்முன் அறிவேன்
விரைவாய் சென்றுமே மகிழ்வாய் அவருடன்
விபரம் அனைத்தையுமே அறிந்து வருவேனே!

(பண்டாரவன்னியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***செபஸ்தியாம்பிள்ளை இராசேஸ்வரி (பவளவல்லி 1954 - ......)***



நடிகையாயும், புலவராயும், அண்ணாவி யாராகவும் மும்முனைகளில் செயற்பட்டுக் கூத்தினைப் பேணி வளர்த்துக் கொண்டிருப்பவர் தான் இராசேஸ்வரி. கூத்தாடுவதும், குண்டி நெளிப்பதுவும் ஆத்தாதவன் செயல் என்று நாட்டுக் கூத்திற்கே குழிபறித்து, வேட்டையாடியோர் வாழ்ந்த ஒரு காலகட்டத்தில் கூத்துக்காகவே தன்னை அர்ப்பணித்த வரும் இவர்தான்.

1954ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 26ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவர், 1994ஆம் ஆண்டு பாஷையூரில் அரங்கேறிய விக்கிரமாதித்தன் கூத்தைப் படைத்ததோடு இயக்கியும் புகழ்பெற்றார். இவர் தொடர்ந்து மன உறுதி கூத்தையும் (1995), வெற்றிமேல் வெற்றி கூத்தையும் (1994), அநுராதபுர மன்னர் வாலகம்பாகு கூத்தையும் (1999), பாலைவனப் புதல்வர்கள் கூத்தையும் படைத்துச் சுவைஞர்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டார். அத்துடன் இஸ்ரவேல், டென்மார்க் மன்னன் கம்லெற் முதலிய கூத்துக்களையும் படைத்த இவருக்கு 2004ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 16ஆம் நாள் மரபுக்கலைச்சுடர் என்ற விருதும் வழங்கப்பட்டது. இவரால் ஆக்கப்பட்ட விக்கிரமாதித்தன் கூத்தில் இடம்பெற்ற ஒரு பாடல் இது!

மலர்ந்த காலை வேளை நேரம்
சிறந்த என் சபைதனில்
கறந்தெடுத்த பசுவின் பால் நிறைந்திருக்கும் குவளையில்
கனிந்த பழங்கள் மேசையில் நாலு பேர் இருக்கையில்
இலைகள் ஏழு போட்டுவைத்த விபரம் என்ன மந்திரி?

**(விக்கிரமாதித்தன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அலெக்சாண்டர் அன்ரனி (றொபின்சன் 1959 - ...........)***



முதிர்ந்த கூத்தாளியான தந்தை முத்துத்துரை அலெக்சாண்டரின் பாடலும், நளினம் கலந்த நடிப்பும் தான் அன்ரனியைக் கூத்தரங்கிற்கு இழுத்து வந்தது. 1959ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 10ஆம் நாள் பாஷையூரில் பிறந்த இவருக்கு நிறைவான குரல்வளமும், நறுக்கான சொல்லுச் சரிப்பும், நல்லதெனப் பாராட்டும் நடிப்பும் கூடவே கைவரப் பெற்றிருந்தது. 1979ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய பூதத்தம்பி கூத்தில் முதன்முதலில் தோழியாகத் தோன்றிச் சிறப்பாக நடித்தார்.

தொடர்ந்து இம்மனுவலில் வழிப்போக்கனாகவும் (1979), யோசப்வாசில் பெண் பாத்திரமாகவும் (1990), கண்டி அரசனில் சேவகனாகவும் (1990), வெற்றியின் இரகசியத்தில் தகப்பனாகவும் (1991)போர்க்களம் நோக்கி என்ற கூத்தில் வீரனாகவும் (1991), தொண்டரில் தந்தையாகவும் (1993), தியாகத்தழும்புகளில் ஆயராகவும் (2000), பண்டார வன்னியனில் காக்கைவன்னிய னாகவும் (2001), விக்கிரமாதித்தனில் சிவனாகவும் (2008) தோன்றிச் சுவைஞர்களை மகிழ்ச்சியில் திளைக்கவைத்தார்.

தொண்டர் கூத்தை ஆக்கியது மட்டுமன்றித் தியாகத்தழும்புகள் கூத்தை நெறியாள்கையும் செய்த இவர் மிருதங்கம், தபேலா வாசிப்பதிலும் வல்லவர். கண்டி அரசன் கூத்தில் இவர் பாடி நடித்த பாடலைக் கேட்ட எவரும் இவரை இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

வேலைவனையும் தாலத்தின் மதியூகம் நிறையும் தீரனாம்
ஆலப்புளையின் வீடு தோணுது காலைத்தூக்கி ஓடிவா!
பதியில் அழகில் கதித்த பாக்கியவதியாம் ரஞ்சிதபூஷணி
பாரில் கண்டால் ஆர்விடுவரோ வாரும் செல்லுவோம் நாமுமே!

**(கண்டிஅரசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறகரி அந்தோனிப்பிள்ளை (துரை 1946 - 2005)



இனிமையான குரல்வளமும், எடுப்பான தோற்றமுங் கொண்ட அந்தோனிப்பிள்ளை, கிறகரி - மரியம்மா என்பவர்களுக்கு மகனாக 1946ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 02ஆம் நாள் பாஷையூரில் பிறந்தார்.

கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் கல்விகற்று, சிறுவயதிலிருந்தே மேடை நாடகத்தில் ஆர்வங் கொண்ட இவர், இசைநாடகத்திலும் காலூன்றி இறுதியில் கூத்திலும் தன் முத்திரையைப் பொறித்துக் கொண்டார். கனிவான பேச்சும், முகபாவமும் கைவரப் பெற்ற இவர் தனது வீச்சுக் கொண்ட நடிப்பினால் சுவைஞர்களைக் கவர்ந்திழுத்தார் என்றே சொல்ல வேண்டும்.

பெண்பாத்திரமேற்று நடிப்பதில் சமர்த்தரான இவர், 1961ஆம் ஆண்டு பாஷையூரில் மேடையேறிய சவேரியார் கூத்தில் தனது கூத்தாளுமையைத் துலங்கவிட்டார்.

தொடர்ந்து பாஷையூரில் மேடையேறிய ஞானசௌந்தரி(1969), கற்பகமாலா (1972), அந்தோனியார் (1975) என்ற கூத்துக்களில் பாடி நடித்துப் புகழைத் தட்டிச்சென்றார். அடக்கமும், அர்ப் பணிப்பும் கொண்ட இவரது கூத்துலகச் செயற்பாடுகள் மூலமாகக் கலைபற்றிய உள்ளக்கிடக்கைகள் தெளிவாகப் புலனாகின்றன. 2005ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 10ஆம் நாள் துயர்தந்து அமரத்துவம் அடைந்த இவர், 1981ஆம் ஆண்டு மேடையேறிய செபஸ்தியார் கூத்தில் பங்கிராஸ் என்ற பாத்திரமேற்று நடித்த வேளை பாடிய நெஞ்சை விட்டகலாத ஓர் இன்னிசை இது!

பிடிக்கவென்று ஆணவமாய் பேசிவந்த வீரர்களே!
அடித்துமையோர் நொடியதனில் ஆட்டி மண்ணாய் போட்டிடுவேன்!
பிடித்த வெற்றிக்குருசுடனே பெருக உயிர்த்தெழுந்து முற்றும்
முடித்த பரன் அடியிணைக்காய் முனிவு கொள்ளாதே பொறுத்தேன்!

(செபஸ்தியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பிரான்சிஸ் பத்மா (மாலினி 1953 - ................)***



கூத்தாளுமை முதிர்ந்த குடும்பத்தில் மிக்கேல் மனுவல் பாக்கியராசாத்தி என்பவர்களுக்கு மகளாக, 1963ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 25ஆம் நாள் பாஷையூரில் பிறந்தவர் தான் பத்மா. இனிய குரலும், பண்பட்ட நடிப்பும், இசைஞானமும் கொண்ட இவரது மனதில் சின்னஞ்சிறிய வயது தொடக்கமே கூத்திசைகள் பின்னிக்கிடந்தன.

1971ஆம் ஆண்டில் பாஷையூரில் மேடையேறிய, தேவசகாயமபிள்ளை கூத்தில் ஞானப்பூ என்ற பாத்திரத்தில் முதன்முதலாகத் தோன்றியதனால் கூத்துத்துறையினுள் நுழைந்தார். தொடர்ந்து பாஷையூரில் அரங்கேறிய ஞானசௌந்தரி கூத்தில் லேனாளாகவும் (1976), முத்தா மாணிக்கமா கூத்தில் நெடுஞ்செழியனாகவும் (1979), வீரகுமாரன் சபதம் கூத்திலும் (1980) தோன்றித் தானுமொரு கூத்தாளி என்பதை வெளிக்காட்டினார்.

கூத்தளிக்கைகளில் பெண்கள் கலந்து கொள்வதை ஏற்றுக்கொள்ளாத சூழமைவு காணப்பட்ட காலத்தில், அரங்குகளில் தோன்றி நடிக்க முன்வந்த இவரது துணிவு பாராட்டுக்குரியது. உன்னத தமிழ்க்கலையாம் கூத்தை என்ன விலை கொடுத்தேனும் காத்திட வேண்டுமென்ற நினைப்போடு, இவரிடம் காணப்பட்ட நடிப்பாற்றலை மெச்சிப் பாஷையூர் உதயதாரகை கலைமன்றம் விருது வழங்கியது. (2001).

1989ஆம் ஆண்டில் அரங்கேறிய யோசவ்வாஸ் கூத்தில், பொன்னம்மா என்ற பாத்திரமேற்று இவர் பாடிய பாடல் இது!

ஆரோநீவிர் துறவிகளே! அடர்ந்த காட்டின் நடுவினிலே
நீரோ உணவோ இல்லாமல் நெடிய முழந்தாள் படியிட்டுக்
கோருமுங்கள் தவமென்ன குறிக்குமுங்கள் செபமென்ன
கூறும் நீங்கள் யாரென்று குறித்து நானும் அறிவதற்கு!

**(யோசவ்வாஸ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. பாஷையூர் கூத்தின் எதிர்காலச் செந்நெறி

அறிவற்றதுகளின் ஊளை, இழிசனரின் பாடல் என்று கோபுர வாசிகளினால் அன்று குறித்தொதுக்கப்பட்ட நாட்டுக்கூத்து, ஈழத்தமிழினத்தின் தேசியக் கலையாக இன்று மாறியுள்ளதையிட்டு நாம் பேருவகையடைகின்றோம். மண்ணோடு மண்ணாகச் செத்துமடிய வேண்டிய கூத்தைக் கண்ணைப்போலப் பாதுகாத்து மக்கள் கலையாக, மண்ணின் இலக்கியமாக வாழவைத்த பெருமை புலவர்களையும், அண்ணாவிமார்களையும், கூத்தாளிகளையும் சேரும். இவர்கள் கவியாழக் கடல் குளித்துக் கூத்தெனும் முத்தெடுத்தவர்கள். ஓடும் கூத்துப் பாட்டருவியில் நனைந்து உலகையே மறந்தவர்கள். கூத்தினுக்கு இறுதிமூச்சு வழங்கி இன்றளவும் அதனை வாழ வைத்த பெரியோர்களின் பாதக் கமலங்களைத் தொட்டு வணங்குதல் நமது கடமையன்றோ.

அவமானங்கள் அத்தனைக்கும் முகம் கொடுத்து அவற்றை வெகுமானமாக மாற்ற அவர்கள் சந்தித்த சவால்களால் கூத்துக்கும், அவர்களுக்குமுள்ள அறாத்தொடர்பினை அவதானிக்கக் கூடியதா யிருக்கின்றது. துயரங்கள் நேர்ந்தபோது அவற்றைச் சுமை தாங்கியாகத் தோளில் சுமந்து, அன்னையைப் போல் கூத்துக் குழந்தையை இதயத்தொட்டிலில் கிடத்திச் சீராட்டிய இவர்களின் செம்மைக் குணத்தை யாராலும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அம்மிக் கல்லுக்குச் சிம்மாசனம் அழகுமணித்தேரா என்று தூற்றித்திரிய எழுந்தவர்களோடு மல்லுக்கட்டிச் சமூகத்தில் கூத்தைப் போற்றித்திரிய அர்ப்பணிப்புடன் சேவையாற்றிச் சாவுடன் சங்கமமாகிவிட்ட இவர்களைக் கண்ணீர் தோய்ந்த விழிகளோடு பதிவு செய்துகொள்ள வேண்டும். ஏனென்றால் உலகத்தில் வாழ வழிசொல்கிறவர்களைவிடப் பழிசொல்பவர்கள் தான் ஏராளம் என்பது தான் யதார்த்தம். ஒரு சிலருக்கு கூத்து நிலைத்துவாழ வேண்டுமென்ற நல்லெண்ணமும் இல்லை. கூத்துக் குழுமத்துடன் கனதியான நட்புறவுமில்லை.

நட்டு நீரூற்றி வளர்த்துவிட்ட செடியைப் பட்டழிந்து போக யாராவது விடுவார்களா? இல்லையே! எப்பாடு பட்டாகிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவிலை கொடுத்தாகிலும் கூத்தை வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு எதிர்காலத் தூண்களாம் இளைய சமுதாயத்திடம் தான் உண்டு. பகலிரவு பாராது உழைத்து, இடர்களுக்கு முகம் கொடுத்தாகிலும் இனிய கூத்துக்கலையை வாழவைப்போம் என்று ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் நெஞ்சிலே சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். நானொரு கூத்தை ஆக்கும் புலவனாக, நெறியாள்கை செய்யும் அண்ணாவியாராக ,ஆற்றுகை செய்யும் கூத்தாளியாக மற்றைய அணிசெய்யும் கலைஞர்களாக களத்திலிறங்க வேண்டும் என நினைத்துச் செயற்படவேண்டும்.

ஊடகத்துறைகளெல்லாம் அபரிமிதமாக வளர்ச்சி கண்டு உலகையே பிரமிக்கவைக்கும் இந்த நூற்றாண்டிலே, அவைக்காற்றும் முயற்சிகள் புதிய பரிமாணங்கொண்டு எழுந்து நிற்கும் நிலையிலே, கூத்தை உளமார நேசித்து வளர்ப்பது தான் நமது முழுமுதற் பணியாக இருக்க வேண்டும்.

கூத்தொன்றை அரங்க நிகழ்வாக ஆக்குவதென்றால் எத்தனையோ சொல்ல முடியாத வில்லங்கங்களோடு சமராட வேண்டிவரும். முத்தெடுக்க வேண்டுமானால் கடல் மணலைச் சலித்தெடுத்தால் தான் முடியும். கருத்து வளஞ்செறிந்த, காதினித்த பாடல்களைக் கொண்ட ஒரு கூத்துப் பிரதியை எடுத்து கூத்தை இயக்கக்கூடிய ஓர் அண்ணாவியாரையும், பாடி நடிக்கக் கூடிய ஆற்றல் படைத்த கூத்தாளிகளையும் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு முகாமையாளருக்கே உண்டு.இது காத்திரமான பணியும் கூட.

அணிசெய் கலைஞர்களையும் (பக்கவாத்தியம்) அமைத்துக் கொண்டு கூத்திற்கு ஒத்திகை நடைபெறும். இப்படியே தொடர்ந்து பல நாட்கள் ஒத்திகை நிகழும். ஓத்திகைக்கு ஏற்படும் செலவுகள் கூடிக்கொண்டு போனாலும் சிரித்த முகத்துடன் அந்நிலையை எதிர்கொள்வதெல்லாம் முகாமையாளரின் சாதுரியமே. தோலிருக்கச் சுளை விழுங்கும் திறமைசாலியான முகாமையா ளருக்கு இச்சிரமங்கள் எல்லாம் பெரும்பாடுகளாகத் தெரிவதில்லை. பிரசவத்திற்காகக் காத்திருக்கும் பெண்ணின் நிலையைப் போலத்தான் கூத்தில் பங்களிப்பு செய்பவர்களின் மனோநிலையும் இருக்கும். அண்ணாவியார், கூத்தாளிகள் மற்றுமுள்ளோரின் அரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளினால்தான் இக்கைங்கரியம் உரிய வேளையில் நிறைவேறுகின்றது. அயராத உழைப்பினால் இவர்கள் சாதித்த அற்புதங்களிலே தான் கூத்தினைப் பற்றி இவர்கள் போதித்த உண்மைகள் காலம் கடந்தும் வாழுகின்றன.

இவ்விதமான அவைக்காற்று நிகழ்வுகள் செவ்வையாக நடைபெற வேண்டுமானால் தரமான கூத்துக்கள் எழுத்துருவாக்கம் செய்யப்பட வேண்டும். இந்த ஆதங்கம் செயலுருப்பெறுவதற்குப் படித்த இளைஞர்களை, பண்பட்ட புலமையாளர்களைப் பொன் சொரிந்த பூமியான பாஷையூர் மண் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றது. சிந்தனை மலடுகளால் எந்தவொரு யுகமாற்றமும் வந்து சேரப் போவதில்லை. எனவே இங்குள்ள ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் தங்கள் அறிவினைத் தட்டிவிட்டுத் துணி வோடு கூத்தை ஆக்குவற்கு எழுதுகோலை ஏந்த வேண்டுமென்பது காலத்தின் கட்டளை. இதனால் கூத்து எழுத்துருவாக்கங்கள் தொகையாக வராவிட்டாலும், தேவையான அளவு வந்து தேறும் என்பது என் எண்ணம், எழுத்துரு, பாடல்மெட்டுக்கள், இசை, காண்பியங்கள், அசைவியக்கங்கள் என்பவை கூத்தில் இன்று மாற்றம் பெற்று வருவதைக் கலைவிமர்சகர்கள் ஏற்றுக் கொண்டி ருக்கின்றனர்.

பாஷையூரில் உள்ள இளங்கொழுந்துகள் புலவனாக, அண்ணாவியாராக, கூத்தாளியாகப் பரிணமிக்க வேண்டுமென்றால் அதற்கு இங்கு ஒரு பயிற்சி நிறுவகம் ஆரம்பிக்கப்படவேண்டு மென்பது எனது நீண்டநாளைய மனநெருடல். இதற்கு முயற்சிதான் அச்சாணி, சப்பாணித்தேடல்களால் எப்பொழுதுமே வெற்றியைக் காணமுடியாது. கூத்துத்துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு பயிற்சிக் களத்தில் விரிவுரைகள் ஆற்றுவது பயன்தரும். முதிர்ச்சி பெற்ற கூத்தாய்வாளர்களின் குறிப்புரைகளினால் இளைஞர்களின் சந்தேகங்களைக் கொண்ட மூளை சலவை செய்யப்படும்.

கூத்தைப் பற்றிய ஒரு சில குறிப்புரைகளை முதலில் நாம் மனங்கொள்ளவேண்டும். ''தோஹ்ரா'' என்பது மராட்டிய மன்னர் தமிழகத்திலுள்ள தஞ்சையை ஆளவந்த வேளையிலே, தமிழ் நாட்டிற்குள் புகுந்து பின்பு ஈழநாட்டிற்கும் பரவிய ஓர் இசைப்பாட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் காலம் செல்லச் செல்ல தருவாக மாறிற்று என்பது கூத்தாய்வாளரின் முடிவாகும். தோடயம் என்பது ஒரு வடமொழிப் பாட்டுவகையைச் சேர்ந்தது. தெலுங்கினத்தார் தமிழ் நாட்டிற்கு வந்ததனால் ''சீசபத்தியம், த்விபதம்'' என்ற தெலுங்குப் பாட்டுவகைகள் தமிழிற்கு வந்து சேர்ந்தன.

நமது பழந்தமிழ் இலக்கியங்களான அகத்திணைப்பாடல்களும், புறத்திணைப் பாடல்களும் கூத்து வழக்கில்வரும் கூற்றுக்களாகவே அமைந்திருப்பதைக் காணலாம். எனவே கூத்துவழக்கு மிகப்பழைய காலந் தொடங்கியிருந்து வருவது புலனாகின்றது. வேத்தியல் கூத்தை உயர்வாகவும், பொதுவியல் கூத்தை இழிவாகவும் கூத்தாய்வாளர் கருதுவர். பொதுமக்களால் அவைக்காற்றப்படும் கூத்தை ''கருங்கூத்து'' எனக் கலித்தொகை குறிப்பிடுகின்றது.

கூத்து இழிவானது என்ற எண்ணத்தை ஒவ்வொரு இளைஞனும் தன் மனத்திலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் அகற்றிவிட வேண்டும். இப்படிப்பட்ட வீறுமிக்க செயற்பாடுகளால் தான், கூத்து என்ற உயிருள்ள கலையை எதிர்கால சந்ததியின் கைகளில் நாம் ஒப்படைக்கமுடியும். உயரங்களையும் தொடமுடியும்.

திக்குத் தெரியாத இருட்டினிலே, நம்பிக்கையில்லாத எதிர் காலத்தை நாமெல்லோரும் தேடிக்கொண்டிருக்கும் இக்கால கட்ட த்திலே சொல்லித்தீராத சோகங்களுக்கு முகங்கொடுத்த நாம் சுருண்டுபோகாமல், சலிப்புணர்வுக்கு இடங்கொடாமல் சுறுசுறுப்புடன் இயங்குவதால் தான் இப்பாரிய பணியை நாம் நிறைவேற்ற முடியுமென்பது உண்மை. நம்மிடையே உள்ள முரண்பட்ட கருத்துக்களையும், முதுகெலும்பில்லாத கொள்கைகளையும் கைவிட்டு கூத்தின் வளர்ச்சிக்கு ஒன்றுபட்டு உழைப்போமானால், கூத்துக்கலை நம் மத்தியில் வேரூன்றி நிலைக்கும். நாட்டுக்கூத்து மழையில் நாளும் பொழுதும் நனைந்து கிடந்தது தான் நமது மண் என்ற நினைவை நாம் மறக்காதிருக்க வேண்டும்.

இரவைக் கண்ட உலகம் தான் பகலையும் சந்திக்கும். தோல்வி தான் வெற்றியின் தொடக்கம் என்பர். காலம் என்றாவது ஒருநாள் மாறுமென்ற நம்பிக்கையின் ஒளிக்கீற்று நமது மனங்களிலே தெரிகிறதல்லவா. அது போதும்! நாட்டுக்கூத்து வாழும் என்ற நிறைவை நமக்குத் தருவதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. நிறைவுரை

''கலைமணக்கும் பழக்குரலால் பந்தி போட்டுக்
கூத்தளிக்கும் பாஷையூரில்''
என்ற வரிகளிலே நமது கூத்துக்கலையின் பங்களிப்பு தெளிவாகப் புலப்படுகின்றது.

ஒவ்வொரு நாடும் வெவ்வேறு இன, மத, பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருக்கின்றது. அவ்வகையில் நிமிர்ந்து நிற்கும் நாட்டுக்கூத்து, ஈழ மண்ணின் தமிழ்த் தேசியக் கலையாகும். நடைபெற்ற போர்களினால் செங்குருதியில் நனைந்து கொண்டிருந்தது ஈழமண். எங்கு பார்த்தாலும் அவலமும், துன்பமும், அழுகுரலும் தாங்கியவர்களாய், சொல்லியும் ஆறாத வடுக்களைச் சுமந்து நிற்கிறவர்களாய் ஏனைய மக்களுடன் பாஷையூர் மக்களும் அலைந்து திரிந்தாலும், தங்கள் ஆன்மாவோடு இரண்டறக் கலந்து விட்ட கூத்தைப் பேணிவளர்த்ததை எண்ணி என்னிதயம் விம்முகின்றது.

மகாகவி ஹோமரின் காவியங்களான இலியட், ஒடிசி என்பவற்றை தான் செல்லுமிடமெல்லாம் எடுத்துச்சென்று, பாதுகாத்தானே மசிடோனிய வீரன் மகா அலெக்சாண்டர். அதைப்போலத் தாங்கள் செல்லுமிடமெல்லாம் கூத்தையும், தொடர்புள்ள ஆவணங்களையும் கொண்டு சென்று காத்தவர்கள் பாஷையூர் மண்ணின் மைந்தர்கள் என்பதில் பெருமை கொள்ள நியாயமுண்டு.

1954ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். நான் கா.பொ.த (சா/த) வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது சிறுபிள்ளைகள் நடித்த ஞானசௌந்தரி கூத்து பாஷையூரில் மேடையேறுவதற்கான (20.06.1954) விளம்பரத்தாள் (நோட்டீஸ்) வெளியாகியிருந்தது. அக்கூத்திற்கு நானும் பிரதி பார்த்து உதவினேன்.இதனை எப்படியோ அறிந்து கொண்ட என் வகுப்பு நண்பர்கள் இவ்விளம் பரத்தாளில் என் பெயரையும் பேனாவால் எழுதிக் கிண்டல் பண்ணினார்கள். அந்தக் கேலி வதையையும் நான் சமாளித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேன். ஏனென்றால் கூத்தின் மேல் நான் கொண்டிருந்த பற்று அக்கேலியை விட எவ்வளவோ உயர்ந்து நின்றதை அப்பொழுதே நான் புரிந்து கொண்டிருந்தேன். பதினாறு வயதினிலே, பள்ளிப் பிராயத்திலே நாட்டுக்கூத்தின் மீது எனக்கிருந்த நீங்காப் பற்றையும், நேச உறவையும் எண்ணிப்பார்க்கும்போது என் உணர்வுகள் சில்லிட்டுப் போகின்றன.

எத்தனையோ பெரியோர்கள் முன்வைத்துவிட்டுப் போன சத்திய போதனைகளை மக்கள் மனதில் இலகுவாகப் பதிவு செய்வதற்கு நாட்டுக்கூத்து ஒரு சிறந்த ஊடகமாக விளங்கி வருகின்றது. இதன்மூலம் பெரும் தொண்டைப் புரிந்துவிட்டோம் என்றில்லா விட்டாலும், மனிதனாக நடந்து கலைக்காக வாழ்ந்திருக்கின்றோம் என்ற மனத்திருப்தியாவது கிடைக்காமலா போகும்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஈழத்து வடபகுதிக் கரையோரங்களில் கிறிஸ்தவ மதம் வேர்விட்டு வளரத் தொடங்கியது. இக்கரையோரப்பகுதி மக்களிடையே காணப்பட்ட வலுவான கூத்துப் பாரம்பரியம் கிறிஸ்தவ மறைவளர்ச்சிக்கு ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது. மறைசாட்சிகள் வடித்த செங் குருதிப் பலத்தினால் தான் இன்றும் திருச்சபை நிமிர்ந்து நிற்கின்றது. நாளிலும் பொழுதிலும் நடைபெற்ற கூத்துச் செயற்பாடுகளால் பாஷையூர் மக்களை விழுமியங்களில் ஆற்றுப்படுத்தி அவர்களில் அறிவும், பண்பாடும், ஆளுமைத்திறனும், மானிட நேசிப்பும் பிரமிக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டனவென்றால் அது மிகையாகாது.

எந்த விதமான உலகக் கர்ச்சனைக்கும் அஞ்சிடாமல் தன்னைத் தமிழால் அர்ச்சிப்பவர்களுக்குத் தெய்வம் அருள் புரியும். இதனாலன்றோ ''செந்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் இறைவன்'' என்பர். பாஷையூரில் பிறந்த ஒவ்வொரு மகனுக்கும், ஒவ்வொரு மகளுக்கும் கூத்துச் செயற்பாடுகள் ஒன்றும் புதிதல்ல. வித்துக்போட்டு முளைக்கவைக்கும் முயற்சியல்ல இது. கூடவே பிறந்து விட்ட உரிமைச் சொத்து. எனவே கூத்தை நாமெல்லோரும் முதிர்ந்துவிட்ட அடிக்கரும்பாக நினைக்கவேண்டும், அதைச் சுவைக்க வேண்டும்.

முரண்பாடுகள் மோதி முட்டும் இன்றைய சூழலில் வாழ்க்கைப் பயணத்தை தொடரும் நாம், அதனை முடிக்குமுன் செய்ய வேண்டியது இன்னதென அறிந்து அக்கருமத்தில் கண்வைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். காலத்தின் தேவையறிந்து ஆற்றப்படுகின்ற ஒவ்வொரு செயலும் ஞாலத்தில் என்றும் நினைவு கூரப்படும். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் போல ஒட்டாமல் நின்று இயங்காது, எல்லோரும் கூத்தின் செயற்பாடுகளைக் கூட்டு முயற்சியெடுத்து நிறைவாக் கினால் தான் வெற்றி பெறலாம்.

பூமியிலுள்ள பிறவிடயங்களை அறிவதற்கு முன்னரே தன்னை முற்று முழுதாக அறிந்து கொள்வது எவருக்கும் பயனைத்தரும், இதனைத்தான்.

**"தன்னை அறிவதே அறிவாம் அஃதன்றிப்**
**பின்னை அறிவது பேயறிவாகுமே"**

என்பர் திருமூலர்.

தன்னை அறிவதால் சமூகத்தில் தலைநிமிர்வுடன் ஒருவன் கலை முதலிய பிறர்நலச் சேவைகளில் ஈடுபடமுடியும். கூத்து ஒரு குழுமச் செயற்பாடாக இருப்பதால், ஒவ்வொருவரும் இது எனது முயற்சியென்ற எண்ணத்துடன் சம்பந்தப்பட்ட கைங்கரியங்களில் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

நாட்டுக்கூத்தை வளர்த்தெடுப்பதற்கு நம்மவர்கள் ஏற்றுக்கொண்ட இன்னல்கள், சந்தித்த சவால்களை எண்ணிப் பார்த்தால் இருதயத்திலே இரத்தம் கசிகின்றது. கூத்துவாழ அயராது உழைத்த புலவர்கள், அண்ணாவிமார்கள், கூத்தாளிகள், பிற கலைஞர்கள் என்போர் நமது போற்றுதலுக்குரியவாகள். நாட்டுக் கூத்து வரலாற்றின் நாயகர்களாக, நமது பாஷையூர் மண்ணின் வாசனையுடன் இரண்டறக்கலந்து அவர்கள் என்றும் வாழ்வார்கள். சொல்லாண்ட தமிழெடுத்துப் பாஷையூர் கூத்தாளிகளின் புகழைப் பல்லாண்டு வாழ்த்துவோம். எரி நட்சத்திரமாக நாட்டுக்கூத் துலகை, சில மணித்துளிகளாவது வெளிச்சமாக்கிவிட்டு வீழ்ந்து விட்ட கூத்தாளிகளை மறப்பதற்கொரு நெஞ்சமுமில்லை.

**"பாஷையூர் புகழுக்கோர் இமயம்! – உணர்ந்து**
**புறப்படு இது தக்க சமயம்!"**

**- முற்றும் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர், திரு. முடியப்பு சிங்கராயர் அவர்கள் சிறந்த எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியர். 1938இல் பிறந்து தமது 20வது வயதில் எழுத்துத் துறையில் நுழைந்த இவர் ஆரம்பத்தில் சிறுகதை, கட்டுரை, மேடை நாடகம் என்னும் இலக்கியங்களைப் படைத்தார். இவரது ஆக்கங்கள் பல ஈழத்துப் பத்திரிகைகளில் பிரசுரமாகிப் பலரின் பாராட்டையும் பெற்றுள்ளன.

"பாஷையூரானைப் பாடு" (1992), "தூது போ தென்றலே!" (2000) "வியாகுல அன்னை வெண்பா" (2001), "மடு அன்னை பிள்ளைத்தமிழ்"(2004) ஆகிய கவிதை இலக்கியங்களும். "கூவிப்பறந்த கோகிலங்கள்" (2003) என்னும் உரைநடை இலக்கியமும், "செம்மனத்தான்" (2007) என்னும் நாட்டுக்கூத்து இலக்கியமும் இவரது இலக்கிய ஆக்கத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

பாஷையூர் கிராமம் நாட்டுக்கூத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பிற்குக் கத்தோலிக்க கலை, இலக்கிய வரலாற்றில் தனி இடம் உண்டு. இக்கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் சிங்கராயர் அவர்கள், "பாஷையூர் நாட்டுக் கூத்து வளர்ச்சிக் கழகத்தை நிறுவியதுடன், தற்போது "பாஷையூரும் நாட்டுக்கூத்தும்" என்னும் இலக்கியத்தைப் படைத்து, பாஷையூர் நாட்டுக்கூத்துக் கலைஞர்களின் பங்களிப்பை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பதிவு செய்கின்றார். இவர்மேலும் பல இலக்கியங்களைப் படைக்க மனமார வாழ்த்துகின்றேன்.



**அருட்கலாநிதி ஞா. பிலேந்திரன்**
**யாழ். பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org